DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

26ம் ஆண்டில்...
26 years of publishing

# உதயன் UTHAYAN

www.uthayannews.ca

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1355 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 25, 2022

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam, Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

## Ontario invests to establish a new Medical Faculty at Scarborough Campus of University of Toronto

# ரொறன்ரொ பல்கலைக் கழகத்தின் ஸ்காபுறோ வளாகத்தில் புதிய மருத்துவ பீடம் அமைக்க ஒன்றாரியொ அரசு நிதி ஒதுக்கீடு

ஒன்றாரியோ மாகாணத்தில் தற்போது உள்ள வைத்தீய சேவைகளை விரிவுபடுத்தவும் அதன் மூலம் மக்களுக்கு சிறந்த மருத்தவ வசதிகளைச் செய்வதற்குமான ரொறன்ரொ பல்கலைக் கழகத்தீன் ஸ்கா-புறோ வளாகத்தில் புதிய மருத்துவ பீடம் அமைக்க ஒன்றாரியொ அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த முக்கிய அறிவிப்பை ஊடகங்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கும் வகையில் நேற்று பிற்பகல் ரொறன்ரொ பல்கலைக் கழகத்தீன் ஸ்காபுறோ வளாகத்தில் அரச வைபவம் ஒன்று இடம்பபெற்றது.

(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)



RE/MAX ACE Realty Inc., Brokerage
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
Mortgage Alliance — Right Team
MORTGAGE AGENT — ACCOUNTING
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM, Broker
416-276-6666
RE/MAX ACE Realty Inc. Brokerage
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

## Tamil Groups strongly support His Worship Patrick Brown in upcoming Federal Conservative Leadership Race



கனடாவின் மத்திய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவராகவும் தொடர்ந்து அடுத்த கனடியப் பிரதமரா-கவும் மரியாதைக்குரிய பெற்றிக் பிரவுண் அவர்களின் வெற்றிக்காக உழைப்பதில் கனடிய தமிழர் சமூகம் மிகுந்த அக்கறையோடும் உற்சாகத்தோடும் உழைக்கத் தொடங்கியுள்ளது.

அந்தவகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பிக்ககரிங் மாநகரில் வர்த்தகப் பிரமுகர் பரராஜசிங்கம் அவர்களின் இல்லத்தில் இடம்பெற்ற பெற்றிக் பிரவுண் அவர்களுடனான கலந்துரையாடலில் பல நண்பர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ஸ்காபுறோவில் Taste of Madurai உணவகத்தின் திறப்பு விழா SPECIAL
மதுரை கில்லிப் பரோட்டா – 2 $ 9.99 மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு 416-332-8000
2ம் பக்கம் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
North York, Scarborough & Brampton.
Direct Tamil Line (416) 489-2000
Visit: www.GtaCredit.Com

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
கவாஸ் . சோம சச்சிதானந்தன்
RE/MAX Realtron Blue Force

# LOOKING FOR YOUR *Dream House?*



*Call* **SEYON CHANDRAKUMAR**

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING



இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்

**கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'**

நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை
416 732 1608
என்னும் WHATSAPP
இலக்கத்திற்கும்
அனுப்பலாம்.

www.uthayannews.ca UTHAYAN உதயன்

**இலங்கைச் சிறப்பிதழில்**
பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.



தபால் முகவரி:-
Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2
மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு உடன் அழைக்கவும்

**Jeya 647-669-2739**

### Help Wanted

Full time & Part time kitchen workers are needed for a well renowned Canadian restaurant at Morningside and Military Trail.
For details, call:

**647-204-1520**


# CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

*Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.*



Our secure online application is easy to complete, just go to
gopal@driveautogroup.ca
Or call Gopal Pillai at:
(647) 763-0210

brimell



### ATSIN LAW
சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce
Real Estate
- residential purchase, sale & refinance transactions
Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com


### Trainee Dental Assistant Wanted

Looking for a Trainee Dental Assistant.
Requirements:-
Science, Math, Computer Skill, Communication skill.
Team player, Fast learner.
Training will be given to the right Candidate.
Please forward resume to
**cydentalcare@gmail.com**

### Part-Time Medical Receptionist Wanted

Part-time Medical Receptionist wanted for a Medical Clinic in Scarborough., 15-20hrs/ week. Candidate must be fluent in English and Tamil. Must be proficient in computer skills. Duties include answering phone calls, preparing paperwork, scanning documents, etc.
Wages Negotiable.
Please send resume to:
**vahishan@gmail.com**

### Basement for Rent

Salem / Rossland (Ajax)
Brand new 2 bedroom basement available for rent.
புதிதாக திருத்தப்பட்டுள்ள 2 அறை கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு.

**Call: 647-706-4969**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# அந்நிய செலாவணி கையிருப்பு தொடர்பாக அக்கறை கொள்ளாத ஆட்சியாளர்களே இலங்கையின் தற்போதைய வீழ்ச்சிக்கு காரணமானவர்கள்

இலங்கையில் பல பொருட்களின் விலை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளன. அங்கு தொழிலாளர்களும் நடுத்தர வர்த்தகத்திற்கு குறைந்த பொருளாதார நிலையில் உள்ளவர்களும் என்றும் இல்லாத அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்புத அங்கு கண்கூடாகத் தெரிகின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் இருப்பதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி கையிருப்பு என்பது ஒரு நாடு மற்ற நாடுகளின் நாணயத்தில் வைத்திருக்கும் பணத்தின் அளவு. வங்கிப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள், வைப்பு நிதி எனப் பல வழிகளில் அந்நியச்
செலாவணி சேமிக்கப்படுகிறது. பொதுவாக ஒரு நாட்டின் மத்திய வங்கி அவற்றைப் பராமரிக்கிறது. கையிருப்பில் குறிப்பிட்ட அளவு அந்நியச் செலா-வணி இருப்பது பாதுகாப்பானது.

அந்நிய செலாவணி கையிருப்பு சரிவு காரணமாக இலங்கை நாணயத்தின் நெகிழ்வுத்தன்மையை பேணுவதற்காக இலங்கை மத்திய வங்கி ரூபாயின் மதிப்பை குறைத்தது. அதனால் பொருட்களின் மதிப்பு படிப்படியாக உயரத் தொடங்கியது.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபா 200ல் இருந்து 275க்கு மேல் வீழ்ச்சியடைந்துள்ளது. ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியால், நாட்டின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் மற்றும் கட்டணங்கள் கடுமையாக உயர்ந்துள்ளன.

பெற்றோலியம், டீசல், எரிவாயு மற்றும் பால்மா போன்ற அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் இறக்குமதியைச் சார்ந்தே உள்ளன. அவர்களுக்குச் செலுத்துவதற்கு இலங்கை வங்கிகளிடம் போதுமான டொலர்கள் இல்லை.

இதனால் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயரத் தொடங்கியது. இலங்கையில் வரலாறு காணாத அளவில் விலை வாசிகள் உச்சம் பெற்றுள்ளன. இதன் காரணமாக நாட்டு மக்கள் கடுமையான அவதிக்கு ஆளாகியுள்ளனர். இந்த நிலையில் தற்போதைய இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான காரணம் தொடர்பில் ஒரு விரிவான விளக்கம்.

இலங்கையில் ஏற்கனவே ஒரு கிலோ அரிசியின் விலை 200 ரூபாவைத் தாண்டியுள்ளது. பெற்றோல் விலை 250 ரூபாயை தாண்டியது. ஒரு முட்டை 35 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

90 வீதமான ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளன. கொழும்பு உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மணிக்கணக்கில் இருளில் மூழ்கியுள்ளன. வரும் நாட்களில் மின்வெட்டு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமப்புறங்களில் விலைவாசி உயர்வு, மின்வெட்டு போன்றவை மிகவும் கொடுமையானவை, அதனைப் பெற முடியாத மக்கள் அகதிகளாக தமிழகத்திற்கு செல்ல முயற்சிக்கின்றனர். ஜனாதிபதி கோட்டாபாயவின் மாளிகையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இந்தியா போன்ற நாடுகள் நெருக்கடியைச் சமாளிக்க அதிக அளவில் கடன் வாங்குகின்றன. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெறுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கைக்கு மூன்று வழிகளில் அதிக பணம் கிடைக்கிறது. ஒன்று தேநீர், இரண்டாவது ஆடை தயாரிப்பு மற்றும் மூன்றாவது சுற்றுலா. . இந்த மூன்று துறைகளும் இலங்கையின் பொருளாதாரத்தின் அளவை உருவாக்குகின்றன.

2020 இல் பரவத் தொடங்கிய கொரோனா இந்த பாரம்பரியத்தை உடைத்தது. இலங்கையும் அண்டை நாடுகளும் மார்ச் 2020 முதல் சர்வதேச விமானங்களை நிறுத்தியுள்ளன. நாடு முடங்கியுள்ளது. பொருளாதாரத்தின் தூ ண்களாக விளங்கும் தேயிலை உற்பத்தி, ஆடை மற்றும் சுற்றுலாத்துறைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்றைத் தவிர நிரந்தர வருமா-னம் இல்லாததால், இலங்கை படிப்படியாக மந்த நிலையை அனுபவிக்கத் தொடங்கியது.

இந்த நிலை தொடர்ந்தால் இலங்கை என்னும் மாங்கனித் தீவானது, அழுகிப் போய் விழும் பழங்கள் போல தரை தட்டும் என்றுதான் நாம் எதிர்பார்க்க வேண்டும்.

# இலங்கைத் தமிழர்களிடம் பணம் வசூலிப்பதை தமிழக படகு உரிமையாளர்கள் கைவிட வேண்டும் என்கிறார் வேல்முருகன்



தங்களின் வாழ்வாரத்தை காப்பாற்றிக் கொள்ள தமி-ழகம் வரும் இலங்கைத் தமிழர்களிடம், பணம் வசூலிப்பதை தமிழக படகு உரிமையாளர்கள் கைவிடுவதோடு, அவர்களுக்கு அரணாக நிற்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ”இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி விழிபிதுங்கி நிற்கிறது. அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு ரூ.284 ஆக வீழ்ச்சியடைந்திருக்கிறது. அங்கு அத்தியாவசியப் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. இலங்கையில் தற்போது ஒரு கிலோ அரிசி ரூ.290, சர்க்கரை ரூ.290, 400 கிராம் பால் பவுடர் ரூ.790 என்ற விலையில் விற்கப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் இலங்கையில் ராஜபக்சே கும்பல் அரசின் அலட்சியமான அணுகுமுறையே. பட்டினிச் சாவிலிருந்து எப்படித் தற்காத்து கொள்வது என தெ-ரியாமல், கோத்தய கும்பலை “வீட்டிற்கு செல்“ என்ற முழக்கத்துடன், அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான உணவு தட்டுப்பாடு, வேலையின்மை காரணமாக யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்கு வந்துள்ளனர். அடுத்து வரும் நாட்களில் மேலும், அதிக எண்ணிக்கையில் தமிழகத்திற்கு பலர் அகதிகளாக வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. எனவே, தமிழகத்திற்கு அகதிகளாக வரும் இலங்கை தமிழர்களுக்கு போதுமான வசதிகளை ஏற்படுத்தி தர தமிழ்நாடு அரசு முன் வர வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது. மேலும், இது குறித்து இன்று தமிழக முதல்வர் சென்னை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து, தப்பி வரும் இலங்கை தமிழர்களில் பெண்கள், குழந்தைகள் முதலியவர்களை அகதி முகாம்களிலும், ஆண்களை புழல் சிறையிலும் அடைப்பது குறித்து இன்று (24-03-2022) காலை தலைமைச் செயலகத்தில் முதல்வர் நேரில் சந்தித்து எடுத்துரைத்தேன், அதைக் கனிவுடன் கேட்ட முதல்வர் விரைவில் மத்திய அரசுடன் பேசி, இந்தச் சிக்கலை சரி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார். முதல்வருக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இது ஒருபுறமிருக்க, இலங்கையில் இருந்து பெரும் கவலையோடு வரும் இலங்கை தமிழர்களை, தமிழகத்திற்கு அழைத்து வர, தமி-ழக படகு உரிமையாளர்கள் பெரும் தொகையை வசூலிப்பதாக கூறப்படுகிறது. இது அதிர்ச்சி ஏற்படுத்துவதோடு, வேதனையளிக்கிறது.

உணவின்றி, வேலையின்றி, தங்களது குழந்தைகளுக்கு பால் பவுடர் கூட வாங்க முடியாத அவல நிலையில், தமிழகத்திற்கு சென்றால் எப்படியாவது பிழைத்து கொள்ளலாம், தமிழர்கள் நமக்கு கைக்கொடுப்பார்கள் என்ற எண்ணத்தில், நமது உதவியை நாடி வருகின்றனர். அவர்களிடம் நாம் பெரும் தொகையை வசூலிப்பது முறையல்ல. அது தமிழர்களின் பண்பாடும் அல்ல.

அதனால், தங்களின் வாழ்வாரத்தை காப்பாற்றிக்கொள்ள வரும் இலங்கைத் தமிழர்களிடம், பணம் வசூலிப்பதை தமிழகப் படகு உரிமையாளர்கள் கைவ-ிடுவதோடு, அவர்களுக்கு அரணாக நிற்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறேன்” என்று வேல்முருகன் கூறியுள்ளார்.

INCOME TAX
BRAMPTON
துர்க்கா மார்க்கட்
Side Entrance
In person or online with e-signature
UBER/LYFT/Rental/Business welcome
Personal Tax -No slip charge $30.00
Pension Welfare Student $20.00
Trucker's Special
$395.00 All included
Corporate Tax from $100.00
Bookkeeping, Accounting & Payroll Services
416-400-1053
Call first & avoid waiting ntax 24 years experience
Ntax Accounting & Financial Solutions Inc.

இந்தியா செய்திகள்
India News

# இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்தது ரஷ்யா



உக்ரைன் விவகாரத்தில் இந்தியாவின் அமைதி நிலைப்பாட்டிற்கு, ரஷ்யாவிடம் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதியாகும் அதிகப்படியான போர் ஆயுதங்களே காரணம் என பகிரங்கமான கருத்துக்கள் வெளியாகி வருகின்றன. உக்ரைன் மீதான ரஷ்ய போருக்கு அமெரிக்கா அவுஸ்திரேலியா, பிரித்தானியா மற்றும் ஜப்பான் போன்ற பல நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து பொருளாதார தடைகளையும், உலக நாடுகளின் சபைகளில் ரஷ்யாவிற்கு எதிரான தீர்மானங்களையும் நிறைவேற்றி வருகின்றனர்.

ஆனால் இத்தகைய எந்தவொரு நடவடிக்கையையும் இந்தியா ரஷ்யா மீது முன்னெடுக்காத நிலையில், அதற்கு இந்தியாவின் ஆயுத தேவையே காரணம் என பகிரங்கமாக சொல்லப்பட்டுவருகிறது. அதிலும் சீனாவின் படை பலத்தை சமாளிக்க இந்தியாவிற்கு அதிகப்படியான ரஷ்ய ஆயுதங்கள் தேவைப்படுகிறது, இப்போல இந்தியாவின் மற்றொரு அண்டை நாடான பாகிஸ்தானின் அச்சுறுத்தலை சமாளிக்கவும் இந்தியாவிற்கு ரஷ்ய ஆயுதங்கள் தேவைப்படுகிறது.

ரஷ்யாவிடம் இருந்து பெரும் ஆயுதங்களை தவிர்த்து, மற்ற நாடுகளில் ஆயுதங்களை வாங்க இந்திய முயன்றாலும் அதன் விலை இந்தியாவிற்கு கட்டுபடி ஆகாது என சொல்லப்படுகிறது. இந்தியாவின் மொத்த ஆயுத கொள்முதலை கருத்தில் கொண்டால் 48 சதவிகிதம் வரை ரஷ்யாவிடம் இருந்தும், பிரான்ஸ் 27 சதவிகிதமும், அமெரிக்கா 12 சதவிகிதமும் இதர நாடுகள் 15 சதவிகிதமும் வழங்கி வருகின்றன. மேலும் தற்போது இந்திய பயன்படுத்திவரும் ராணுவ ஆயுதங்களில் 50 சதவிகிதத்திற்கும் மேலானவை ரஷ்யா நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற முக்கிய காரணங்களே ரஷ்யாவிற்கு எதிரான நிலைப்பாடை இந்தியாவால் தெரிவிக்க முடியவில்லை என சொல்லப்பட்டு வருகிறது.

# காலில் விழுந்த 125 வயது சிவானந்தாவை, தலை குனிந்து வணங்கினார் பிரதமர் மோடி



குடியரசு தின விழாவை முன்னிட்டு மத்திய அரசு சார்பில் கலை, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல் மற்றும் பொறியியல், வர்த்தகம் மற்றும் தொழில், இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் மற்றும் துறைகளில் சிறப்பாக பணியாற்றுவோருக்கு ஆண்டு தோறும் பத்ம விருதுகளை வழங்கி வருகிறது. அதன்படி, நடப்பு ஆண்டில் மொத்தம் 128 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டது. அதில் 4 பேருக்கு பத்மவிபூஷண் விருது, 17 பேருக்கு பத்ம பூஷண் விருது, 107 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து, தலைநகர் டெல்லியில் நேற்று ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற விழாவில் 2 பத்ம விபூஷன், 8 பத்ம பூஷன் மற்றும் 54 பத்மஸ்ரீ விருதுகளை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார். அதன்படி, காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம்நபி ஆசாத், சீரம் இன்ஸ்டிடியூட் நிறுவனர் சைரஸ் பூனாவாலா உள்ளிட்ட பலரும் பத்ம விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிலையில், 125 வயதான யோகா குருவான சுவாமி சிவானந்தாவுக்கு குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் பத்மஸ்ரீ விருதை வழங்கினார். விருதுக்கு முன்னதாக, விழா நடைபெறும் அரங்கிற்கு வந்த சுவாமி சிவானந்தா அங்கிருந்த அனைவரையும் வணங்கிய நிலையில் பிரதமர் மோடி அமர்ந்த இடத்துக்கு சென்று அவரையும் தரையில் விழுந்து வணங்கினார்.

பின்னர்,பிரதமர் மோடியும் சிவானந்தாவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பதிலுக்கு தலை குனிந்து வணங்கினார். இச்செயல் விழா அரங்கில் இருந்தவர்கள் மனதில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# "நளினிக்கு எந்த சட்டத்தின் அடிப்படையில்.. ஜாமீன் வழங்க முடியும்?" சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி



ராஜிவ் கொலை வழக்கில் தண்டனை கைதியாக உள்ள நளினிக்கு எந்த சட்டத்தின் அடிப்படையில் ஜாமீன் வழங்க முடியும் என சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. ராஜிவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக உள்ள நளினி, முருகன் உள்பட ஏழு பேரை விடுதலை செய்வது தொடர்பாக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றிய முந்தைய அதிமுக அரசு, அதை ஆளுநருக்கு அனுப்பி வைத்திருந்தது. நீண்ட காலமாக அந்த தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவெடுக்காமல் இருந்ததால், ஆளுநரின் ஒப்புதலுக்காகக் காத்திருக்காமல் தன்னை முன்கூட்டி விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, சக கைதியான பேரறிவாளன் மனு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அந்த வழக்கில் முடிவு காணப்பட்ட பின் இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்கலாம் எனத் தலைமை நீதிபதி அமர்வு தெரிவித்திருந்தது. இன்று, இந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், பேரறிவாளனுக்கு உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளதாகக் கூறி உத்தரவு நகலைச் சமர்ப்பித்தார். நளினி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராதாகிரு‘ணன், உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் ஜாமீன் கோரி மனுத்தாக்கல் செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதையடுத்து, எந்த மேல் முறையீட்டு வழக்கும் நிலுவையில் இல்லாத நிலையில் எந்த சட்டப்பிரிவின் கீழ் ஜாமீன் கோர முடியும் என நளினி தரப்புக்குக் கேள்வி எழுப்பிய தலைமை நீதிபதி, குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் படி, முன் ஜாமீன் கோரலாம், கைது செய்யப்பட்டால் ஜாமீன் கோரலாம், தண்டிக்கப்பட்டால், தண்டனையை நிறுத்தி வைத்து ஜாமீன் கோரலாம்... ஆனால் மேல் முறையீட்டு வழக்கு ஏதும் இல்லாத நிலையில் எந்த அடிப்படையில் ஜாமீன் கோர முடியும் என்றார்.

உச்ச நீதிமன்றம் அனைத்து நீதிமன்றங்களுக்கும் மேலானது எனவும், உயர் நீதிமன்றத்தால் ஜாமீன் வழங்க முடியாது எனவும் கூறிய தலைமை நீதிபதி, மனுதாரர் ஜாமீன் கோரி உச்ச நீதிமன்றத்தைத் தான் அணுக முடியும் எனவும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டமல்ல எனவும் தெரிவித்தனர். பின்னர், நளினி தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று மனு மீதான விசாரணையை மார்ச் 24ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# திருநெல்வேலி மாவட்டம் மனுஜோதி ஆஸ்ரமத்தில் அறுவடை திருநாள்



"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கோட்பாடுடைய திருநெல்வேலி மாவட்டம் முக்கூடலில் அமைந்துள்ள மனுஜோதி ஆஸ்ரமத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் அறுவடை திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டு ஜூலை திங்களில் 8 நாட்கள் வெகு விமர்சையாக நடைபெறும் ஸ்ரீ லஹரி கிருஷ்ணாவின் கல்கி ஜெயந்தி விழாவிற்கு வருகை தருபவர்களுக்கு விருந்தளிக்க இவ்வாண்டு 12 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டிருந்தன.



கல்கி ஜெயந்தி விழாவில் முக்கிய விழாவாக கொண்டாடப்படும் மத நல்லிணக்க மாநாட்டிற்கு அனைத்து மத அறிஞ்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்பட இந்தியாவின் பல மாநிலத்திலிருந்துமட்டுமல்லாமல் மலேசியா பர்மா துபாய் ஜெர்மனி அமெரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்கின்ற ஆஸ்ரமத்தின் பக்தர்களென சுமார் 6 ஆயிரம் பேர்கள் கலந்து கொள்வார்கள். அறுவடைத் திருநாளை ஆஸ்ரமத்தின் தலைவர் பால் உப்பாஸ் என்.லாறி, மற்றும் லியோ பால் சி.லாறி ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

# புதிய வழக்கில் சிக்கியுள்ள முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி குடும்பம்



சேலம் மாவட்டம் எடப்பாடி சேர்ந்த செல்வம் என்பவர் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவரது குடும்பத்தினர் மீது ஊழல் புகார் ஒன்றை அளித்துள்ளார். இதுகுறித்து அவர் அளித்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ளதாவது, "விவசாயத்திற்காக ஆற்றின் மேடான பகுதிகளில் இருந்து நீர் எடுக்க தமிழ்நாடு கூட்டுறவு சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு நீரேற்று பாசன கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

இதில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவரது குடும்பத்தினர் உறுப்பினர்களாக உள்ள சேலம் மாவட்டம் நெடுங்குளம் நீரேற்று பாசன கூட்டுறவு சங்கத்தில் மட்டும் 5 திறன் கொண்ட மோட்டார்களை கூடுதலாக 15 குதிரை திறன் கொண்ட மோட்டார்களாக மாற்ற திருச்சி மாவட்ட தலைமை பொறியாளர் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் அதனை ரத்து செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை வைத்துள்ளார்.

தகுதியானவர்களுக்கு முன்னுரிமை வழங்காமல் அதற்கு பதிலாக தன்னுடைய குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை இணைத்து இவ்வாறு அதிகார துஷ்பிரயோக செயலில் எடப்பாடி பழனிச்சாமி ஈடுபட்டிருப்பதாகவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து ஊழல் தடுப்பு பிரிவு போலீசாருக்கு புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என நீதிமன்றத்தில் மனுதாரர் சார்பில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக வழக்கு இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் தொடர்ச்சியாக எரிவாயு தட்டுப்பாடு – உணவக உரிமையாளர்கள் உட்பட பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிவாயு (கேஸ்) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு நிலவி வருகின்ற மையினால் உணவகங்களின் நாட் கூலியாக வேலை செய்யும் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள உணவகங்களில் வேறு மாவட்டத்தைச் சேர்ந்த பணியாளர்கள் அதிகளவானவர்கள் வேலை செய்து வருகின்ற நிலையில் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் வீடுகளில் எரிவாயு பயன்படுத்தும் மக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன் மண்ணெண்ணை கொள்வனவுக்காக நள்ளிரவு முதல் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய அவல நிலை மன்னாரில் நிலவி வருகிறது.



டீசல் தட்டுப்பாடு காரணமாக கிராமங்களுக்குள் பயணம் செய்யும் தனியார் பேருந்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ள மையினால் நெடுந்தூர கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் உரிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் எரிபொருள் தட்டுப்பாட்டினால் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. **- மன்னார் நிருபர்**



# காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மாரை தாக்குவதற்காகவா பிரதமர் மகிந்த யாழ் வந்தார்?

## - தவிசாளர் நிரோஷ் கேள்வி



வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஜனநாயன ரீதியில் நீதி கேட்டு போராட முயற்சித்த போது, அவர்களை வழி மறித்து பஸ்களில் இருந்து இறங்கவிடாது அச்சுறுத்தி தாக்கிய சம்பவங்கள் இலங்கையின் ஆட்சியாளர்களிடத்தில் தொடரும் ஜனநாயக மறுப்பை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பிரதமரின் வருகையின் போது நீதி கேட்டு ஜனநாயக வழியில் போராடுவதற்காக வேவ்வேறு மாவட்டங்களிலும் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்தனர். மட்டுவில் திறந்த வர்த்தக சந்தைப்பகுதி பிரதமர் மகிந்த ராஜபக்சவினால் திறந்து வைக்கப்படும் போது, அமைதியாக கவனயீர்ப்பினை மேற்கொள்வதற்கு காணமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முயற்சித்தனர். இந் நிலையில் காணமலாக்கப்பட்ட தாய்மார் வருகை தந்த பேருந்து பொலிசாரினாலும் விசேட அதிரடிப்படையினராலும் வழிமறிக்கப்பட்டு கதவுகள் பூட்டப்பட்டு பேருந்தின் சாரதியின் ஆவணங்களும் பறிக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டது. இதற்கு மேலாக நீதிக்காகப் போராடும் அந்த வயோதிபத் தாய்மார் மிகவும் கொடுரமாகத் தாக்கப்பட்டுள்ளனர். தடியடிப்பிரயோகம், கட்டைகளாலும் அடிக்கப்பட்டு தூஷண வார்த்தைகளாலும் நிந்திக்கப்பட்டனர்.

இவ்வாறாக காட்டுமிராண்டித்தனம் நடைபெறுவதையடுத்து மக்கள் பிரதிநிதி என்ற வகையில் நான் உடனடியாக அங்கு சென்றபோது அப்போது பிரதமர் மகிந்த ராஜபக்ச நிகழ்வை முடித்துக்கொண்டு வெளியேறியிருந்தார். அவரின் வெளியேற்றத்தையடுத்து பொலிசாராலும் இராணுவத்தினராலும் அடித்து குத்தி அடக்கிவைத்திருந்த மக்கள் விடுவிக்கப்பட்டு அவர்கள் குறித்த வர்த்தக கட்டிடத்தினை நோக்கி வந்தார்கள். தாக்குதல்களின் காரணமாக சாறி சட்டைகள் கிழிந்த நிலையில் அந்த தாய்மார் வருவதைக் கண்டேன். இதனைத் தொடர்ந்து நாமும் அவர்களுடன் இனைந்து ஜனநாய வழியில் போராடினோம். தாய்மார்கள் தாக்கப்படும் போது அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பிரதமருடன் மகிழ்ச்சியைக் கொண்டிக்கொண்டிருந்தனர்.

அடிப்படையில் ஜனாதிபதி உலகத்தினை ஏமாற்றுவதற்காக இங்கே தான் ஜனநாயக உரிமைகளுக்கு மட்டுப்பாடு விதிக்கவில்லை என ஐ.நாவில் உத்தரவாதம் கொடுத்திருக்கின்றார். ஆனால் வலிந்து காணாமலாக்கப்பட்டுதலுக்கு முழுமையான காரணகர்த்தாவும் இன்றும் பொறுப்புச் சொல்லவேண்டிய பதவியில் உள்ளவருமான பிரதமர் மகிந்த ராஜபக்ச நீதிக்காக போராடும் அப்பாவித்தாய்மார்களை அவர்களது அமைதியான போராட்டத்தை கூட ஏற்க முடியாது ஆயுதம் ஏந்திய படைகளைக் கொண்டு உத்தரவிட்டு அடக்கியிருக்கின்றார். தனக்கு தொந்தரவு என்பதற்காக அந்தத் தாய்மார்களை கொன்றொழிக்கவும் இந்த அரசாங்கம் பின்னிற்காது என்பது வெளிப்படையானது.

அடிப்படையில் இலங்கையில் மனித உரிமைகள் ரீதியில் எதாவது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேசம் மடையர் ஆகிவிடக்கூடாது. இங்கே நியாயம் கேட்கும் சக்திகளை ஆயுத மற்றும் இதர அச்சுறுத்தல் வழிமுறைகள் ஊடாக அடக்கியாளவே அரசாங்கம் முயற்சிக்கின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

## Tamil Groups Strongly Support His Worship Patrick Brown, in his Upcoming Federal Conservative Leadership Race

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவின் மத்திய கொன்சர்வேர்ட்டிவ் கட்சி தலைவராக பெற்றிக் பிரவுண் அவர்கள் வெற்றிபெற அக்கறையோடு உழைக்கத் தொடங்கியுள்ள கனடிய தமிழர் சமூகம்



கனடாவின் மத்திய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவராகவும் தொடர்ந்த அடுத்த கனடியப் பிரதமராகவும் மரியாதைக்குரிய பெற்றிக் பிரவுண் அவர்களின் வெற்றிக்காக உழைப்பதில் கனடிய தமிழர் சமூகம் மிகுந்த அக்கறையோடும் உற்சாகத்தோடும் உழைக்கத் தொடங்கியுள்ளது.

அந்தவகையில் ஞாயிற்றுக்கிழமை (20) மாலை பிக்ககரிங் மாநகரில் பரராசசிங்கம் - நிரோதினி பரராசசிங்கம் தம்பதியின் இல்லத்தில் இடம்பெற்ற மரியாதைக்குரிய பெற்றிக் பிரவுண் அவர்களுடனான கலந்துரையாடலில் பல நண்பர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

*செய்தியும் படங்களும்: கணேஸ் - கனடா உதயன்*



## Ontario Government Invests to Establish a New Medical Faculty at Scarborough Campus of the University of Toronto

# ரொறன்ரொ பல்கலைக் கழகத்தின் ஸ்காபுறோ வளாகத்தில் புதிய மருத்துவ பீடம் அமைக்க ஒன்றாரியொ அரசு நிதி ஒதுக்கீடு



ஒன்றாரியோ மாகாணத்தில் தற்போது உள்ள வைத்திய சேவைகளை விரிவுபடுத்தவும் அதன் மூலம் மக்களுக்கு சிறந்த மருத்தவ வசதிகளைச் செய்வதற்குமான ரொறன்ரொ பல்கலைக் கழகத்தின் ஸ்காபுறோ வளாகத்தில் புதிய மருத்துவ பீடம் அமைக்க ஒன்றாரியொ அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த முக்கிய அறிவிப்பை ஊடகங்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கும் வகையில் நேற்று பிற்பகல் ரொறன்ரொ பல்கலைக் கழகத்தின் ஸ்கா-புறோ வளாகத்தில் அரச வைபவம் ஒன்று இடம்பபெற்றது.



மேற்படி வைபவத்தில் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் தொடர்பான அமைச்சர் ஜில் டன்லொப். ஒன்றாரியொ வின் நிதி மேலான்மை சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பிரப்மீட் சக்காரியா மற்றும் மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் றேமன்ட் சோ. விஜய் தணிகாசலம், அரிஸ் பாபிகியன் ஆகியோரும் பல்கவைக் கழகம் மற்றும் ஸ்காபுறோ வைத்தியசாலை ஆகியவற்றின் முக்கிய நிர்வாகிகளும் கலந்து சிறப்பித்தனர்.

ஆரம்ப உரையாற்றிய தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்கள் தனது தொகுதியில் இந்த புதிய மருத்துவ பீடம் அமைவதில் தான் மகிழ்ச்சியடைவதாகவும், இந்த மருத்துவ பீடமான ஒன்றாரியொ மாகாணத்தில் உள்ள பல்லின சமூகங்கள் சார்ந்த பெற்றோர்களின் பிள்ளைகள் தங்கள் மருத்துவ உயர்கல்வியைப் பெற வாய்ப்புக்களை உருவாக்கும் என்று நம்புவதாக தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஒன்றாரியோ மாகாணத்தின் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் தொடர்பான அமைச்சர் ஜில் டன்லொப் தனது உரையில் ஒன்றாரியொ மாகாணத் தில் மருத் துவர் கள் மற்றும் மருத்துவ தாதிகள் பற்றாக்குறை இருப்பதாகவும் கடந்த கோவிட்- 19 நோய்க்கிருமி பரவிய காலத்தில் எமது



மாகாணம் மிகுந்த சவால்களை எதிர்கொண்டது என்றும் எனவே ரொறன்ரொ பல்கலைக் கழகத்தின் ஸ்காபுறோ வளாகத்தில் புதிய மருத்துவ பீடம் அமைக்க எண்ணிய எமது மாகாண முதல்வர் மற்றும் மாகாணத்தின் சுகாதார அமைச்சருக்கு தான் நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து ஊடகங்களின் சார்பில் வினாவப்பெற்ற கேள்விகளுக்கு அமைச்சர் தகுந்த பதிலளித்தார்.

*- செய்தியும் படங்களும்: சத்தியன்*

# யாழ்ப்பாணத்தில் 'தெய்வீக குருமணி' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற கனடா வாழ் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்



தற்போது தாயகத்தில் ஆன்மீக பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள "றொன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய" ஸ்தாபகரும் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் "தெய்வீக குருமணி" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

இந்த பட்டமளிப்பு வைபவத்தை "தெய்வீகம்" சர்வதேச ஆன்மிக சஞ்சிகை நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. றொன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய ஸ்தாபகர் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களுக்கு இந்த "தெய்வீக குருமணி" என்னும் அதி உயர் விருது வழங்கும் வைபவம் யாழ் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ள தெய்வீக அரங்கில் நடைபெற்றது.

பண்டிதரும் சைவப்புலவரும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான பொன்.சுகந்தன் அவர்களால் பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வைபவத்தில் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களின் பாரியாரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

"தெய்வீக குருமணி" விருது பெற்ற ஐயாவை வாழ்த்தி பெருமைகொள்வோமாக என தெய்வீகம் சர்வதேச ஆன்மிக சஞ்சிகையின் பொறுப்பாசிரியர் கனடா என்.ஞானச்செல்வம் அவர்கள்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பிரதமர் மஹிந்த கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்

யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த மத்திநிலையத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய மீகஹஜதுரே சிறிவிமல நாயக்க தேரரைச் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் சனிக்கிழமை (19) சந்தித்து நலம் விசாரித்தார்.

வணக்கத்திற்குரிய மீகஹஜதுரே சிறிவிமல நாயக்க தேரருடன் சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்ட கௌரவ பிரதமர், அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டதன் பின்னர், யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலையத்தில் சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 50 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை கௌரவ பிரதமர் வழங்கினார்.

இலங்கை இராணுவத்தின் ஒருங்கிணைப்புடன், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு அதற்கு அனுசரணை வழங்கியது.

குறித்த சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பா, 51 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க உள்ளிட்ட இராணுவத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தெருக்களில் கைவிடப்படும் ஆதரவற்ற விலங்குகளை காத்திட, வடக்கில் பாடசாலை மாணவர்களுக்கு We Feeders நடத்திய விழிப்புணர்வு கருத்தரங்கு

தெருவில் கைவிடப்படும் ஆதரவற்ற விலங்குகளை காக்க வடக்கில் பாட-சாலை மாணவர்களுக்கு We Feeders விழிப்புணர்வு கருத்தரங்கு.

அடுத்த சந்ததியினரிடம் நம் தேசத்தை கையளிக்கும் போது அதில் வீதிகளில் வாயில்லா ஜீவன்கள் பசியால் வாடுவதும், விபத்தில் சிக்குவதும், நோய்களுடன் தெருக்களில் அலைவதும், பெண் குட்டிகள் வீதிகளில் வீசி செல்லப்படுவதும், வீதியோரங்களிலேயே விலங்குகள் பிறப்பதும் பெருமளவு குறைந்திருப்பதே ஆரோக்கியமான சமுதாயத்தின் அடையாளங்களில் ஒன்றாகும்.

இதன் ஒரு அங்கமாக இலங்கையில் We Feeders பாடசாலை மாணவர்களிடையே Speak for Speechless எனும் கருத்தரங்கினை நடத்தி வருகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில், கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை மாணவர்களிடையே Animal love சிந்தனைகளை ஊக்குவிக்கும் கருத்தரங்கும் பரிசுகள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவர் விலங்குகளுக்கு ஏற்படும் நோய்த்தாக்கங்கள், அவற்றுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள், விலங்குகளுக்கான கருத்தடை விளக்கங்கள் போன்றவற்றை மாணவர்களுக்கு புரியும் விதமாக இனிவரும் காலங்களில் தம் வீடுகளிலும் சமூகத்திலும் பின்பற்றும் வகையில் எடுத்துரைத்தார்.

வீடுகளில் வீட்டு விலங்குகளை நம் சமூகம் சரியாக கவனிக்கும் போது வீதிகளில் விலங்குகள் பசியோடு காத்திருக்காது. வீதிகளில் பெண்ணாக பிறந்த காரணத்தால் குட்டிகளை ஆறறிவு கொண்டவர்கள் வீசி செல்வதாலேயே We Feed-ers வீதிகளில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டோம் என்றனர் வீ ஃபீடர்ஸ் இளைஞர்கள்.

அடுத்த தலைமுறையினர் அன்பான விலங்குகள் இயற்கை போன்றவற்றுடன் இணைந்து வாழ ஆர்வமாயிருப்பதையும் கல்விச்சமூகம் We Feeders பணிகளுக்கு பெரும் வரவேற்பளிப்பதையும் பல் வேறு பிரதேச பாடசாலைகளுக்கு செல்லும் போது கருத்தரங்குகளில் காண முடிகிறது.

கல்வியே வறுமையை வெல்லும் குறுக்கு வழி என்பதையும் அந்த வறுமை காரணமாக கல்வி தடைப்பட்டுவிட கூடாது என்பதிலும் கல்வியோடு அன்பு,




ஜீவகாருண்யம், இயற்கை வாழ்வியல், விலங்கு நலன் போன்றவற்றையும் எதிர்கால சந்ததிக்கு ஏற்படுத்தி கொடுக்க தன்னலமின்றி சேவையாற்றும் நல்லுள்ளங்களை பாராட்ட வேண்டியது நம் சமூகத்தின் கடமை.

We Feeders ஏற்பாடு செய்து பல்வேறு பிரதேசங்களிலும் நடைபெற்று வரும் இந்த Speak for Speechless கருத்தரங்கின் போது கல்விக்கான ஊக்குவிப்பும் தேவையுடைய மாணவர்களை இனங்கண்டு வழங்கப்பட்டதோடு, விலங்கு நலன்சார் செயற்பாடுகளை பாராட்டி தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு We Feeders அன்பளிப்புக்களை வழங்கியது. பாடசாலை ரீதியில் ஏனய துறைகளில் பாடசாலை தாண்டியும் சாதனைகளை புரிந்த மாணவர்களும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

We Feeders மனிதாபிமான பணிகளை பார்வையிட முகப்புத்தகத்தில் facebook.com/weFeeders என்ற பக்கத்தை தொடர்பு கொள்ளமுடியும்.

இது போன்ற தன்னார்வலர்களாக களத்தில் இறங்கி விலங்குகளுக்காக பணியாற்றி தொடர்ந்து உணவளித்தல், மருத்துவ சேவைகள், கருத்தடை சிகிற்சைகள், கைவிடப்படும் குட்டி களை வீடுகளுக்கு வளர்க்க தயாரானவர்களிடம் சேர்ப்பித்தல் போன்றவற்றை நீண்டகால நோக்கில் அணுகும் சமூக அக்கறை உள்ள இதுபோன்ற புத்திஜீவி இளைஞர்களுக்கு வடக்குகிழக்கு பகுதிகளில் நம் மக்கள் மிகப்பெரும் ஆதரவினை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது.





மனிதர்கள், விலங்குகள், இயற்கை சமநி-லை, தற்சார்பு வாழ்க்கை முறை, பாரம்பரியம் என நம் கலாசாரம் நீடித்து நிலைக்க இது போன்ற நிகழ்வுகள் அவசியமாகின்றது

# கோண்டாவிலில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மருத்துவ மனைகளில் அவசர சிகிச்சைகளுக்குக் குருதிக்கு நிலவும் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு குருதிக் கொடை முகாம்களைப் பல்வேறு இடங்களிலும் ஏற்பாடு செய்து வருகின்றது. அதன் தொடர்ச்சியாக சனிக்கிழமை (19-03-2022) கோண்டாவிலில் குருதிக் கொடை முகாமை ஒழுங்கு படுத்தியுள்ளது. கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் இடம்பெற்ற இக் குரு-திக் கொடை முகாமில் யாழ்ப்பாணம்









போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கியைச் சேர்ந்த வைத்திய கலா-நிதி கி.ஸ்ரீ பாஸ்கரன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டு இருந்தனர்.

குருதிக்கொடை முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வழமை போன்று செவ் விரத்தம் பூச் செடிகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்
World News

# மார்க்கிசம் சார்ந்து மனித நேயம் கொண்டவராக இருக்க வேண்டிய புட்டின் மனநோயாளியாக மாறியதே இந்த போர் உருவாகக் காரணமா?

ரஸ்ய அதிபர் புட்டின் என்னும் மார்க்சிய வாதியை மாற்றியது அவரது நோய்கள்தான் என கண்டறியப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த மனநோயே, அவர் உக்ரைன் மீது போர் தொடுக்க காரண-மாக இருக்கலாம் என தான் கருதுவதாக தெரிவிக்கும் அலன் என்னும் அவரைத் தெரிந்த ஒருவர். இதற்கு முன், 2014ஆம் ஆண்டு, தான் புட்னை குளிர்கால ஒலிம்பிக் போட்டியின்போது பார்த்ததாகவும், அப்போது அவர், 1991இல் தான் பார்த்த புடினைப்போலவே இருந்ததாகவும், ஆனால் இப்போதோ, அவர் மாறிவிட்டதாகவும், அவரது முகம் கூட வீங்கியிருப்பதுபோல அசிங்கமாகத் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில். மார்க்கிசம் சார்ந்து மனித நேயம் கொண்டவராக இருக்க வேண்டிய புட்டின் மனநோயாளியாக மாறியதே இந்த போர் உருவாகக் காரண-மாக இருக்கலாம் என்ற விமர்சனங்கள் தற்போது முன்வைக்கப்படுகின்றன என அறியப்படுகின்றது.

புட்டின் உலகை அழிக்கத் துடிப்பதற்கு அவருக்கு உருவாகியுள்ள நோய் காரணமாக இருக்கலாம் என உலகப் புகழ் பெற்ற உடல் மொழி நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

'Mr Body Language' என்று அழைக்கப்படும் Allan Pease, தனக்கு புடினை 30 ஆண்டுகளாக தெரியும் என்றும், புட்டின் திடீரென எடை அதிகரித்துள்ளது தனக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும், அவரது நடவடிக்கைகளில் மாற்றம் தெரிவதாகவும், அதற்குக் காரணம் அவரது உடல் நலப் பிரச்சினைகள்தான் என்றும் கூறியுள்ளார்.

உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் புட்டின், இப்போதைக்கு உடற்பயிற்சி செய்வது போல் தெரியவில்லை என்று கூறும் அல்ன, புட்டினுக்கு புற்றுநோய் அல்லது பார்க்கின்சன் நோய் உருவாகியிருக்கலாம் என ரஷ்யாவில் வதந்திகள் உலா-வருவதாக தெரிவித்துள்ளார்.



அத்துடன், முன்பு எதையும் பொறுப்பேற்று உறுதியாக முன்னின்று நடத்தும் புட்டின், தற்போது தன்னை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்திக்கொள்வதாக தெரிவிக்கும் அலன் சமீபத்தில் ஊடகங்களில் வெளியான புகைப்படங்களில், புட்டின் ஒரு நீண்ட மேஜையில் ஒரு ஓரத்தில் அமர்ந்திருந்ததை சுட்டிக்காட்டுகிறார்.

எதிர்காலத்தில் தன்னை யாரேனும் தாக்கலாம் என புட்டின் கருதுவதாக தெரிவித்தள்ள அலன் அவரது உடல் எடை கணிசமாக அதிகரித்துள்ளது, அவர் தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்கிறார், யார் தன்னை சந்திக்க வந்தாலும், தனக்கு எதிராக தூரத்தில் அவர்களை அமரவைக்கிறார். என்றும்

ஆக, அவர் மனதில் ஏதோ ஓடிக்கொண்டிருக்கிறது. யாருடனும் இருக்க அவர் விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# நேட்டோ நாடுகள் இதுவரை இல்லாத அளவுக்கு வலுவானதாகவும் ஒற்றுமையாகவும் இருக்கிறன என்கிறார் அமெரிக்க அதிபர் பைடன்



தற்போது நடைபெற்று வரும் உக்ரைன் மீதான உக்கிரமான ரஸ்யாவின் தாக்குதல்கள் நிறைந்த போர் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் உள்ள உறுப்பினர்களில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளை தவிர அனைத்து நாடுகளும் ரஷ்யாவுக்கு எதிராக வாக்களித்தன.

ஆனால் இந்த 3 நாடுகளும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. ஒரு நேரத்தில். இந்தியா நடுநிலையை கடைப்பிடிப்பதாக அறிவித்துவிட்டது. அதே நேரம் உடனடியாக சுமுக பேச்சுவார்த்தை நடத்தி போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதையே விரும்புவதாக இந்தியா தெரிவித்து தனது கபடத்தனத்தைக் காட்டியது.

அது போல் ஐக்கிய நாடுகள் சபையிலும் இந்தியா வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. ரஷ்யா மீது பல்வேறு நாடுகள் பொருளாதார தடைகளை விதித்துள்ளன. ஆனால் இந்தியா தொடர்ந்து ரஷ்யாவில் எண்ணெயை கொள்முதல் செய்து வருகிறது. இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் சேர்ந்ததுதான் குவாட் அமைப்பு ஆகும்.

இவ்வாறான நிலையில் உக்ரைன் மீது போரிட்டு வரும் ரஷ்யாவை குவாட் நாடுகள் எதிர்க்கும் நிலையில் இந்தியாவோ நடுங்குகிறது என்றும் இந்தியப் பிர-தமர் மோடிக்கு முதுகெலும்பு இல்லை என்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடும் கண்டனம் தெரிவித்து விமர்சித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 26 நாட்களுக்கு மேலாக போரிட்டு வருகி-றது. இந்த போரை நிறுத்துமாறு ஆரம்பத்திலிருந்தே அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இணைந்து வேண்டுதல்கள் செய்தவண்ணம் நியாயத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றன.

இது தொடர்பாக ஐநா பாதுகாப்பு கவுன்சிலிலும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்த தீர்மானத்தின் மீது ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியதால் அது நீர்த்து போனது.

கடல் சார்ந்த பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. உக்ரைன் போர் நடைபெற்று வரும் நிலையில் குவாட் அமைப்பில் உள்ள 4 நாடுகளில் ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் ரஷ்யாவின் செயல்பாட்டை கடுமையாக கண்டித்துள்ளன. ஆனால் குவாட் நாடுகளின் நிலைப்பாட்டிற்கு எதிராக இந்தியா வேறு ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

உக்ரைனையும் ஆதரிக்காமல் ரஷ்யாவையும் எதிர்க்காமல் நடுநிலையான நிலைப்பாட்டை இந்தியா எடுத்துள்ளது. இந்த விவகாரத்தில் இந்தியா மற்ற 3 குவாட் நாடுகளின் முடிவுகளுக்கு எதிராக உள்ளதாகவே பார்க்கப்படுகிறது. ஆஸ்திரேலியா இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டதாக தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அமெரிக்க அதிபர் ஜோபிடன் நேற்றைய தினம் கூறுகையில், ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய குவாட் நாடுகள் ரஷ்யா மீது கடும் பொருளாதாரத் தடையை விதித்துள்ளன.

ஆனால் குவாட்டில் ஒன்றான இந்தியா தொடர்ந்து எந்த தடையையும் விதிக்காமல் ரஷ்யாவிடம் இருந்து எண்ணெயை வாங்கி வருகிறது. அது போல் ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் ரஷ்யாவுக்கு எதிராக வாக்களிக்க இந்தியா மறுத்துவிட்டது.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் ரஷ்யா மீது கடுமையான பொருளாதார தடையை விதித்ததால் ரஷ்யாவின் பண மதிப்பு சரிந்தது. சர்வதேச வர்த்தகமும் உயர் தொழில்நுட்ப சரக்கு வர்த்தகமும் கடுமையாக பாதித்துள்ளது. ரஷ்யாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் ஆஸ்திரேலியாவும் ஜப்பானும் வலுவாக உள்ளது.

ஆனால் குவாட் நாடுகளில் ரஷ்யாவுக்கு எதிராக இந்தியா நடவடிக்கை எடுக்கவும் பதிலடி கொடுக்கவும் நடுங்குகிறது. நேட்டோவை பிளவுப்படுத்த முடியும் என ரஷ்ய அதிபர் புடின் நினைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் நேட்டோ நாடுகள் இதுவரை வரலாற்றில் இல்லாத அளவுக்கு இன்று வலுவானதாகவும் ஒற்றுமையாகவும் இருக்கிறது என்றும் நம்பிக்கைத் தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன்.

# தன் மீது பொருளாதார நெருக்கடி தொடர்ந்தால் அடுத்து நிச்சயம் அணு ஆயுதம் தான் என ரஷியா எச்சரிக்கை

நேட்டோ அமைப்பில் தங்களை சேர்த்துக்கொள்ளும்படி உக்ரைன் நாடு கேட்டதை அடுத்து ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே சண்டை முற்றி தற்போது இரண்டு நாடுகளுக்கும் இடையே போர் நடந்துவருகிறது. உக்ரைன் மீது ரஷியா இன்று 28-வது நாளாக போர் தொடுத்து வருகிறது.

உக்ரைனின் பல்வேறு நகரங்களை கைப்பற்றி வரும் ரஷிய படைகள் தலைநகர் கீவ், கார்கிவ், மரியுபோல் ஆகிய நகரங்களில் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகின்றன. இதனால், உக்ரைன் - ரஷிய படைகள் இடையே தீவிர சண்டை தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்த போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்தபோதும் அவை தோல்வியிலேயே முடிகின்றன. இதற்கிடையில், இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்களை வழங்கி வருகின்றன.

மேலும், ரஷியா மீது பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன. இதன் காரணமாக சண்டை தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்நிலையில், ரஷிய அதிபர் மாளிகை செய்தித்தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோ பேசுகையில், உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் நாட்டு மக்களின் பாதுகாப்பு எங்களுக்கு முதன்மையானது. அணு ஆயுதம் பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள் அனைத்தையும் வாசியுங்கள்.



ரஷியா என்ற நாடு இந்த உலகத்தில் இருக்குமா? இருக்காதா? என்ற உச்சபட்ச அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் அணு ஆயுதத்தை நாங்கள் பயன்படுத்துவோம் என தெரிவித்துள்ளார்.

# மகிந்த ராஜபக்ச பற்றி மனந்திறந்து பேசிய வாசுதேவ நாணயக்கார



"அண்மையில் இலங்கை அமைச்சரவையில் அங்கம் வகித்த விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சு பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட போது, என்னையும் பதவியில் இருந்து நீக்க முடிவு செய்யப்பட்டிருந்ததுடன் எனக்கு ஜனதிபதி அலவலகத்திலிருந்து கடிதமும் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் உடனயடியுர்கு பிரதமர் மகிந்த ராஜபக்ச தலையிட்டே அதனை தடுத்தார். எங்கள் இருவருக்கும் இடையிலான நீண்டகால நட்பே இதற்கு காரணம் என நம்புகின்றேன். மேலும்.

பிரதமர் மகிந்த ராஜபக்சவின் தற்போதைய நிலைப்பாட்டை எண்ணும் போது மனம் உடைந்து போவது போல் உணர்கின்றேன்".

இவ்வாறு அவரது நீண்டகால அரசியல் நண்பரான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கொழும்பில் வாராந்த பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின் மனந்திறந்து மகிந்தா தொடர்பாக கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.


இதன் போது அவர் தெரிவித்துள்ளதாவது, மகிந்தவின் நிலைமையை நினைக்கும் போது மனம் உடைந்து போகிறது. உண்மையில் மகிந்த எனது நல்ல நண்பர் என்பதுடன் போராட்ட தோழர். நாங்கள் பல போராட்டங்களை நடத்தி இருக்கின்றோம்.

சவால்களை எதிர்கொண்டுள்ளோம். அவை அனைத்தையும் செய்த மகிந்த தற்போது நடுநிலைமையாக இருப்பதை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. காணப்படும் நிலைமைக்கு அமைய அவர் அமைதியான நிலைப்பாட்டுக்கு வந்திருக்கலாம் என நினைக்கின்றேன்.

எதனையும் செய்ய முடியாது என்பதால், அந்த முடிவுக்கு வந்திருக்கலாம். இதனை ஊகிக்கின்றேன். எனினும் உண்மையான கதை என்ன என்பது எனக்கு தெரியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"பிரதமர் மகிந்த ராஜபக்ச மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் 1970 ஆம் ஆண்டு முதன் முதலில் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகினர். இருவருக்கும் இடையில் சுமார் 6 தசாப்தத்திற்கு மேலான நட்பு இருந்து வருகிறது. எனவே அவருக்கு ஆதரவாக நான் அரசியல் தளத்தில் தொடர்ந்து பயணிப்பேன்" என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

# மன்னார் முருங்கனில் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இலவச சித்த மருத்துவ முகாம்







யாழ் இந்திய துணைத் துாதரகமும், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச சித்த மருத்துவ முகாம் ஞாயிற்றுக்கிழமை (20) காலை முதல் மாலை வரை நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள முருங்கன் டொன் பொஸ்கோ ரெக் மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் ராகேஷ் நடராஜன், வட மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர்




வைத்தியர் திருமதி ஜொபநாம கனேசன், டொன் பொஸ்கோ இயக்குனர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த இலவச சித்த மருத்துவ முகா-மின் போது சுமார் 175க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**



இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் மக்கள் தொடர்பில் அரசு என்ன நிலைப்பாட்டை கொண்டுள்ளது என்பது குறித்து சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்

## - மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர். குமரேஸ்

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு அரசாங்கத்தின் மதிப்பு ஒரு லட்சம் ரூபாய் என்றால் இந்த அரசாங்கம் தமிழ் மக்கள் தொடர்பாக என்ன நிலைப்பாட்டை கொண்டிருக்கிறது என்பது தொடர்பாக தொழிவாக சர்வதேசம் புரிந்து கொண்டுள்ள வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், மன்னார் நகர சபை உறுப்பினருமான எஸ்.ஆர். குமரேஸ் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை (18) குறித்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டில் ஈழ விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக அந்த உறவுகளை தேடிக் கொண்டு இருக்கின்ற உறவுகள் இன்று வரை காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பது குறித்து தமது போராட்டங்கள் ஊடாக அரசுக்கு வலியுறுத்தி வருகின்றனர்.

இன்று இந்த அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அவர்களுக்கான இறப்புச் சான்றிதழ் மற்றும் நஷ்ட ஈடு வழங்குவது தொடர்பாக சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக சில அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சன நெரிசல் கூட்டத்தில் அல்லது கோவில் திருவிழாக்களில் காணாமல் போனவர்கள் இல்லை. அவர்கள் இறுதி யுத்தத்தின் போது தமது உறவினர்களால் அரசிடம் கை அளிக்கப்பட்டவர்கள்.

இந்த அரசினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது மக்கள் முன்னிலையில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள்.

ஏனையவர்கள் வீடுகளில் இருந்த போது விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்டவர் களுமே இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட மற்றும் அழைத்துச் செல்லப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?? என்பதை கேட்டே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் தமிழ் மக்கள் இன்று வரை போராடி வருகின்றனர். தமது உறவுகளுக்காக வீதியில் இறங்கி போராடிய பல உறவுகள் இன்று உயிரிழந்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் இன்று இந்த அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக அறிவித்துள்ள ஒரு லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு என்பது இந்த நாட்டில் ஆடு மாடுகளின் விலை இன்று ஒன்றரை லட்சத்தை தாண்டி விலை போகிறது.

ஆனால் இன்று காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளின் அரசாங்கத்தின் மதிப்பு ஒரு இலட்சம் ரூபாய் என்றால் இந்த அரசாங்கம் தமிழ் மக்கள் தொடர்பாக என்ன நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது என்பது தொடர்பாக தொழிவாக சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும். அதற்காகவே இன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் தமிழ் மக்கள் சர்வதேச விசாரணை ஒன்று தேவை என்பதை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறார்கள்.




சர்வதேச விசாரணையின் ஊடாகத்தான் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்று நீதியான விசாரணை மூலம் நீதி கிடைக்கும் என்று திடமான நம்பிக்கையுடன் உள்ளனர்.

உண்மையில் இந்த உறவுகள் இல்லை என்றால் சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைய அவர்களுக்கு எப்படியான நஸ்டஈடுகளை சர்வதேச சட்டங்கள் மூலம் கிடைக்கப் பெறுமோ அதனூடாக கிடைக்கின்ற நஸ்டஈடே சரியானதாக இருக்கும்.

அதை விடுத்து தற்போது அரசாங்கம் விடுத்திருக்கும் ஒரு லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு என்பது ஆடு,மாடு என்பவற்றிற்கு விலை கொடுப்பது போல் இந்த அரசாங்கம் செயல்படுகிறது.

இதனை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும், தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை என்பதை இந்த அரசாங்கம் புரிந்து கொண்டு சர்வதேச விசாரணை மூலமே அதற்கான தீர்வு எட்டும்.என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

மேலும் இன்று இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடியை நாங்கள் அனைவரும் எதிர்நோக்கி உள்ளோம். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து பல்வேறு விதமான பொருளாதார நெருக்கடியில் நாங்கள் உள்ளோம்.

சாதாரண உணவுப் பொருட்கள் முதல் ஏனைய அத்தியாவசிய பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களின் விலையும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி கடந்த புதன்கிழமை மக்களுக்கு ஆற்றிய உரையில் அனைத்து பொருட்களின் தட்டுப்பாட்டினை தான் ஏற்றுக் கொள்வதாக கூறியுள்ளார். ஆனால் பொருட்களின் தட்டுப்பாட்டை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது குறித்து அவரிடம் எந்த பதிலும் இல்லை.

ஆகவே இந்த ஜனாதிபதி தன்னால் அதை செய்ய முடியாது விட்டால் வேறு ஒருவரிடம் கையளித்து விட்டு அவர் வீடு செல்ல வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்

# மகிந்தவின் யாழ். வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில் பொலிஸாரினால் தாக்கப்பட்ட பெண்கள் வைத்தியசாலையில் அனுமதி

இலங்கை செய்திகள் Sri Lanka News



யாழில் பிரதமர் மகிந்த ராஜபக்சவிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்த வந்த நிலையில் தாக்கப்பட்டதாக கூறப்படும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க முல்லைத்தீவு மாவட்ட தலைவி ஈஸ்வரி மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர் ஜெனிட்டா ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் சிறு காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஞாயிற்றுக்கிழமை (20) மட்டுவிலில் புதிதாக அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்தை திறந்து வைத்திருந்தார்.

எனினும் குறித்த நிகழ்வுக்கு பிரதமர் வருவதை எதிர்த்து பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் உள்ளிட்டோர் எதிர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுக்க முயன்றனர்.

நிகழ்வு நடைபெறும் இடத்தில் போராட்டத்தை முன்னெடுக்க முல்லைத்தீவில் இருந்து, வந்திருந்தவர்களை மட்டுவில் அம்மன் ஆலயத்திற்கு அருகில் பொலிஸார் வாகனத்தில் இருந்து இறங்காதவாறு தடுத்து நிறுத்தினர்.

இதேவேளை பொலிஸாரின் காவலையும் மீறி பேருந்திலிருந்து இறங்கிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வீதியில் அழுது புரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலின் போதே குறித்த இருவரும் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை சாரணர் இயக்கத்தின் 105வது ஆண்டு விழா கொடி தினத்தின் முதல் கொடி பிரதமருக்கு அணிவிக்கப்பட்டது



இலங்கை சாரணர் இயக்கத்தின் 105 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட கொடி தினத்தின் முதலாவது கொடி இலங்கை சாரணர் இயக்கத்தின் உதவி தலைமை ஆணையாளர் நிர்மலி வில்லியம் அவர்களினால் திங்கட்கிழமை (21) அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு அணிவிக்கப்பட்டது.

இதன்போது சாரணர் இயக்கத்தின் வரலாறு குறித்து எழுதப்பட்ட நூலொன்று இலங்கை சாரணர் இயக்கத்தின் தொடர்பாடல் ஆணையாளர் ருக்ஷானி அலீஸ் அவர்களினால் பிரதமருக்கு வழங்கி வைக்கப்பட்டது.



சாரணர் இயக்கத்தின் நிறுவனரான ரொபர்ட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன்-பவேலின் சகோதரியான மிஸ் ஆலிவ் பேடன்-பவேல் தலைமையில் 1910 ஆம் ஆண்டு சாரணர் இயக்கம் தொடங்கப்பட்டது.

140 நாடுகளைச் சேர்ந்த 10 மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய தன்னார்வப் பெண்கள் அமைப்பான உலக சாரணர் சங்கத்தில் இலங்கை 1917ஆம் ஆண்டு மார்ச் 21 அங்கத்துவம் பெற்றது.

கண்டி பெண்கள் உயர் நிலைப் பர் சாலையின் அதிபராக இருந்த சான்சன் அவர்களின் முயற்சியின் பலனாக ஜென்னி கால்வர்லி அவர்களின் தலைமையில் இது நடைபெற்றது.

தற்போது இலங்கை சாரணர் இயக்கத்தில் நாடளாவிய ரீதியில் சுமார் 70,000 சாரணர்கள் இணைந்திருப்பதுடன் விசேட தேவையுடைய சாரணர் குழுவும் அவர்களுள் அங்கம் வகிக்கின்றனர்.

குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, சர்வதேச சாரணர் இயக்கத்தின் ஆணையாளர் நதீகா குணசேகர, இலங்கை சாரணர் இயக்கத்தின் உதவி பிரதம ஆணையாளர் நிர்மலி வில்லியம் மற்றும் பல்வேறு வயது பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சாரணர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# டெலோ சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிக்கிறது – செல்வம் அடைக்கலநாதன் எம்.பி

சர்வகட்சி மாநாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் டெலோவும் புறக்கணிக்கிறது என அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வகட்சி மாநாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ புறக்கணிக்கிறது. ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனாதிபதிக் கிடையிலான சந்திப்பு தொடர்பாக ஜனாதிபதியிடம் நல்லிணக்க சமிஞ்சையைக் காட்டும் படியான கோரிக்கையை நாங்கள் முன்வைத்திருக்கின்றோம்.

தற்போதும் அவ்வாறான நல்லிணக்க சமிஞ்சையைக் காட்டுகின்ற பட்சத்திலே மேற்கொண்டு சிந்திக்கலாம் என்றும் தெரிவித்திருக்கின்றோம். சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருக்கினற இந்த தருணத்தில் நாங்கள் அதனையும் புறக்கணிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் எங்களுடைய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தின் போது பொலிசாரால் மிக மோசமான மனித உரிமை மீறல் செயற்பாடுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

தற்போது வடக்கு - கிழக்கை நோக்கி அமைச்சர்களின், அரச பிரதி நிதிகளின் பயணங்கள் இருக்கிறது. காரணம் சிங்கள மக்கள் அவர்களைப் புறக்கணித்துள்ளார்கள். இத்தருணத்தில் தமிழ் மக்கள் மத்தியிலே வந்து தங்களுடைய கருத்துகளை சொல்லுகின்ற போது சிங்கள மக்கள் தங்களுக்கு சார்பாக மாறுவார்கள் என்ற யுத்தியோடு தமிழ்ப் பிரதேசங்களிலே வந்து புத்த கோயில்களை அமைப்பதும், எமது மக்களின் போட்டங்களை மழுங்கடிக்கும் செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இவை நிறுத்தப்பட வேண்டும். இந்த அரசாங்கம் அடிப்படையாகப் பொருளாதார ரீதியில் தன்னை ஒருபோதும் நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றது.

வெளிநாடுகளில் இவ்வாறான நிலைமைகள், தேர்தல் தோல்விகள் என்பன ஏற்பட்டால் அதன் தலைவர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்து விடுவார்கள்.

இதேபோல் இன்றைக்கு மிகவும் மோசமான பின்னடைவை கண்டிருக்கின்ற இந்த நாட்டின் தலைவர்கள் ராஜினாமா செய்வதுதான் சாலச் சிறந்தது என்பதோடு தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ இந்த சர்வகட்சி மாநாட்டை புறக்கணிக்கிறது என்று தெரிவித்தார்.

# இலங்கையில் தற்போது பாரிய பொருளாதார நெருக்கடி

## 4 மாத கைக்குழந்தையுடன் தனுஷ்கோடியை சென்றடைந்த மன்னாரைச் சேர்ந்த 6 இலங்கை தமிழர்கள்



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அங்கு வசிக்கும் மக்கள் உணவு, அத்தியாவசிய தேவைகளுக்காக கடுமையான சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் இலங்கையில் வாழும் தமிழர்கள் தமிழகத்திற்கு அகதிகளாக செல்ல ஆரம்பித்துள்ள நிலையில் செவ்வாய்க்கிழமை (22) அதிகாலை நான்கு மாத கைக்குழந்தையுடன் ஆறு இலங்கை தமிழர்கள் அகதிகளாக தனு்கோடியை சென்றடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் தனுஷ்கோடி இலங்கைக்கு அருகே உள்ளது. இலங்கை தமிழர்கள் இறுதிக்கட்ட போரின் போது அகதிகளாக தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்குள் வந்து இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் தங்கியுள்ளனர்.

இதே போல் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் கடும் விலை ஏற்றம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடுகள் அதிகமாக உள்ளதால் இலங்கை தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக செல்லக் கூடும் என்பதால் சர்வ தோச கடல் எல்லை பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என கடலோர பாதுகாப்பு குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.





இந்நிலையில் திங்கட்கிழமை (21) இரவு மன்னார் மாவட்டம் பேசாலை கடற்கரையில் இருந்து மன்னாரை சேர்ந்த கஜேந்திரன், மேரி கிளாரி, நிசாத், கியூரி, எஸ்தர், மோசஸ் உள்ளிட்டவர்களும், நான்கு மாத கைக்குழந்தையுடன் ஆறு பேர் ஒரு கண்ணாடி இழை படகில் தமிழகம் நோக்கி பயணித்த நிலையில் செவ்வாய்க்கிழமை (22) அதிகாலை 1 மணியளவில் தனுஷ்கோடியை அடுத்துள்ள 4 வது மணல் திட்டு பகுதியில் வந்து இறங்கி உள்ளனர்.

தகவலறிந்து இலங்கை தமிழர்களை அழைத்து வர மண்டபம் கடலோர காவல்படை முகாமிற்கு சொந்தமான கப்பல் விரைந்தது. மணல் திட்டில் காலை முதல் குடிநீர் மற்றும் உணவு இல்லாமல் தவித்து வந்த 6 இலங்கைத் தமிழர்களை மீட்டு இந்திய கடலோர காவல் படையினர் மண்டபம் முகாமுக்கு அழைத்து வந்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை விலை ஏற்றம் மற்றும் மண்ணெய், டீசல்,பெட்ரோல் உள்ளிட்ட பொருட்களான தட்டுபாடு அதிகரித்துள்ளதால் இந்த ஆறு இலங்கை தமிழர்கள் தமிழகத்துக்கு அகதிகளாக வந்துள்ளதாக பாதுகப்பு வட்டார அதிகாரிகள் நடத்திய விசாரணையில் இலங்கை தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பின் அனுமதி இன்றி தமிழகத்துக்குள் நுழைந்ததால் ஆறு இலங்கை தமிழர்கள் மீது வழக்கு பதிவு செய்த மெரைன் போலீசார் ராமநாதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# மன்னாரில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



மன்னார் மாவட்டத்தில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு மற்றும் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வும் மன்னார் மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (22) காலை 11 மணியளவில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சிரேஷ்ட இணைப்பு அதிகாரி பாக்கியராஜா பிரதீபன், மன்னார் மாவட்ட திட்ட பணிப்பாளர், மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் உட்பட பிரதேச செயலாளர்கள், உதவி செயலாளர்கள், உதவி திட்டப் பணிப்பாளர்கள், சமுர்த்தி தலைமைப்பீடம், முகாமையாளர் நிர்வாக கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் 8 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டது டன் ஒரு மாணவனுக்கு 50 ஆயிரம் ரூபாய் மற்றும் ஒரு மாணவனுக்கு 20 ஆயிரம் ரூபாவும் ஏனைய மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் காசோலை மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை அரசாங்க அதிபர் வழங்கி கௌரவித்தார்.

அத்துடன் 2021ஆம் ஆண்டு இலங்கையில் முதல் 10 சிறந்த மாவட்டங்கள் என இலங்கை சமூக பாதுகாப்பு சபை தரப்படுத்தல் பட்டியலில் மன்னார் மாவட்டம் உள்வாங்கப்பட்ட மையும் இதில் குறிப்பாக நானாட்டான் பிரதேச செயலகம் தேசிய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமையும், முசலி பிரதேசம் 100 வீத அடைவு மட்டத்தை பூர்த்தி செய்துள்ளமையும் பாராட்டி அரச அதிபரினால் பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது.







மேலும் அரச ஓய்வூதிய திட்டத்தின் ஊடாக சிறப்பாக பணியாற்றிய பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், உதவி திட்ட பணிப்பாளர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்ட அமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் எமில் நகர் பகுதியில் இருந்து இந்தியா சென்ற குடும்பம் ஒன்றின் உறவினர்களுக்கு சிவில் உடையில் சென்று அச்சுறுத்தல்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக மன்னாரில் இருந்து செவ்வாய்க்கிழமை (22) அதிகாலை தனுஷ்கோடியை சென்றடைந்த மன்னாரைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களில் மன்னார் எமில்நகர் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பம் ஒன்றின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளுக்கு கடற்படையினர் சிவில் உடையில் சென்று அச்சுறுத்தல் விடுத்திருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் எமில்நகர் மற்றும் சிலாபத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு குடும்பங்களைச் சேர்ந்த 6 பேர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தலைமன்னாரில் இருந்து தமிழகம் நோக்கி பயணித்துள்ளனர்.

குறித்த நபர்களை படகோட்டி கடலில் உள்ள தீடை பகுதியில் இறக்கி விட்டு சென்ற நிலையில், தனுஷ்கோடி யை அடுத்துள்ள 4 வது மணல் திட்டு பகுதியில் குறித்த 6 பேரும் நின்றுள்ளனர்.

தகவலறிந்து இலங்கை தமிழர்களை அழைத்து வர மண்டபம் கடலோர காவல்படை முகாமிற்கு சொந்தமான கப்பல் விரைந்து சென்று செவ்வாய்க்கிழமை (22) அதிகாலை அவர்களை மீட்டனர்.

இந்த நிலையில் மன்னார் எமில்நகர் பகுதியில் இருந்து இந்தியா சென்ற இளம் குடும்பம் ஒன்றின் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்கு சிவில் உடையில் சென்ற கடற்படையினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

மேலும் குறித்த இளம் குடும்பத்தினரின் பெற்றோர்களை கைது செய்ய முற்பட்டுள்ளதாகவும் இந்தியாவைச் சென்றடைந்த மேரி கிளாரி என்ற பெண்ணின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் தொடர்ந்து விசாரணை என்ற போர்வையில் சிவில் உடையில் பலர் வீட்டுக்கு வருவதாகவும் உரிய சீருடை, அடையாள அட்டைகள் இன்றி அச்சுறுத்தும் விதமாகவும் கொலை கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் போல தங்களை அச்சுறுத்தும் விதமாகவும் விசாரணைகள் மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த அச்சுறுத்தல்கள் மற்றும் விசாரணைகள் தொடரும் பட்சத்தில் தாங்கள் பொலிஸ் நிலையம் அல்லது மனித உரிமை ஆணைக்குழுவில் தஞ்சம் அடைய வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என பாதிக்கப்பட்ட பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

# பொருளாதார நெருக்கடியில் தமிழகத்திற்கு வரும் ஈழச்சொந்தங்களை கைதுசெய்வது கண்டனத்திற்குரியது! - சீமான் | நாம் தமிழர் கட்சி



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தாளாது, தமிழகத்திற்கு வரும் ஈழச்சொந்தங்களை கைது செய்வது கடும் கண்டனத்திற்குரியது - சீமான்

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் விளைவினால் அத்தியாவசியப்பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்து, அந்நாட்டுக் குடிமக்கள் அன்றாடச்செலவினங்களைக்கூட எதிர்கொள்ள முடியாது, வறுமைக்கும், ஏழ்மைக்கும் உள்ளாகி, தவித்து வருகிற செய்திகள் கவலையளிக்கின்றன. சிங்கள இனவெறிப்பிடித்து, தமிழர்களை அழித்தொழிக்க, உலகெங்கும் கடன்களை வாங்கிக்குவித்து, நாட்டு மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிலும், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியிலும் கவனம்செலுத்தாத கொடுங்கோல் சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறிச்செயல்பாடுகளே இத்தகைய நிலைக்குக் காரணமென்றாலும், இன்றைக்கு தமிழர்களும் சேர்ந்துப் பாதிப்புக்குள்ளாகி நிற்பது பெரும் மனவேதனையைத் தருகிறது.

இவ்வளவு ஆண்டுகளாக, சிங்கள ஆட்சியாளர்களின் இன ஒதுக்கல் நடவடிக்கைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு, கொடும் துயரத்திற்கு ஆளாகி நின்ற தமிழ்ச்சொந்தங்கள், இப்போது பொருளாதார நெருக்கடியினாலும், வறுமையின் கோரப்பிடியினாலும் வாடி வதங்கி, வாழ்க்கையை நடத்த முடியாத துயர்மிகு சூழலில், நாளும் அல்லல்பட்டு வருவது பெரும் மனவலியைத் தருகிறது. இத்தகைய கையறு நிலையில், தாய்த்தமிழகத்தில் தஞ்சம்கேட்டு, கடல்வழியாக, படகுகளின் மூலம் அடைக்கலம் தேடிவரும் ஈழச்சொந்தங்களை வழக்குகள் போட்டு கைது செய்வது மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது கொடுமை. அதிலும் பெற்றோர்களையும் குழந்தைகளையும் பிரித்து சிறையிலும் முகாம்களிலும் அடைப்பது கடும் கண்டனத்திற்குரியது.

அனைத்தையும் இழந்து வரும் நம்மக்களை ஆரத்தழுவி அரவணைத்து, திபெத்திய ஏதிலிகளுக்கு இந்நாடு வழங்கியிருக்கிற சலுகைகளையும், வசதிகளையும் போல, நம் சொந்தங்களுக்கும் செய்துகொடுத்து, அவர்களைக் காக்க முன்வர வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# பிரதமர் மோடிக்கான, மலையக தமிழர் அபிலாசை ஆவண கடிதம் கையளிப்பு

## - மனோ கணேசன் தலைமையில் த.மு.கூ குழு-இந்திய தூதுவர் சந்திப்பு

பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கான, இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் சார்பான அபிலாசை ஆவண கடிதத்தை, தமிழ் முற்போக்கு கூட்டணி, புதன்கிழமை (23) கூட்டணி தலைவர் மனோ கணேசன் தலைமையில் இந்திய தூதுவர் கோபால் பாக்லேயிடம் கையளித்தது.

கொழும்பு இந்திய இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர் வே. ராதாகிருஷ்ணன், உதயகுமார் எம்பி, கே.டி. குருசாமி, பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இந்திய தரப்பில் தூதுவர் கோபால் பாக்லே, துணை தூதர் வினோத் கே. ஜேகப், அரசியல் துறை செயலாளர் பானு பிரகாஷ் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளதாவது, மனம் திறந்த கலந்துரையாடலுடன் இந்த சந்திப்பு மிகவும் திருப்திகரமாக அமைந்தது.

இலங்கையில் வாழும் தமிழர் ஜனத்தொகையில் சுமார் சரிபாதியான இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் தொடர்பான கூடிய அக்கறையை செலுத்த பாரத பிரதமர் நரேந்திர மோடியின் இந்திய ஒன்றிய அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்த பின்னணியில், இலங்கையின் முழுமைமிக்க குடிமக்களாக ஏனையோருடன் சமத்துவமாக வாழ விரும்பும் மலையக தமிழ் இலங்கையர் தொடர்பான இந்த அதிகாரபூர்வ ஆவணம் மிகவும் பயன்தருகிறது என அவர் மேலும் கூறினார்.

மலையக தமிழ் மக்களின் அனைத்து அபிலாசைகளையும் ஒருசேர பிரதிபலிக்கும் கோரிக்கைகள் உள்ளடங்கிய இத்தகையை ஆவணத்தை தயாரித்து முன்வைத்துள்ளமை தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு தந்து மகிழ்ச்சிகளையும், பாராட்டுகளையும் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்த அபிலாசை ஆவண கடிதத்தை உடனடியாக பாரத பிரதமர் நரேந்திர மோடியின் அவதானத்துக்கு முறைப்படி அனுப்பி வைப்பதாக தூதுவர் கோபால் பாக்லே, தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவுக்கு உறுதியளித்தார்.

மேலும் இனி வரும் எதிர்காலத்தில், இந்திய மற்றும் தமிழக அரசியல், சமூக, பரப்புகளில் இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் அதிக கவனத்தை பெற வேண்டும் எனவும், அதற்கான ஒத்துழைப்புகளை இந்த அரசு சார்பில் இந்திய தூதகரம் வழங்கும் எனவும் அவர் மேலும் கூறினார்.

அடுத்த வாரம் இலங்கை வருகைதரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், தமிழ் முற்போக்கு கூட்டணியை சந்திக்கும் போது இது தொடர்பில் மேலும் கலந்துரையாடப்படும்.

பிம்ஸ்டெக் (BIMSTEC) மாநாடு முடிந்த உடன், இந்த ஆவண கோரிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாட விரும்புவதாகவும் தூதுவர் கோபால் பாக்லே மேலும் தெரிவித்தார்.

கூட்டணி தலைவர் மனோ கணேசன், இந்திய தூதுவர் கோபால் பாக்லேயிடம் கூறியதாவது, இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் தொழிலாளர்களாக, இலங்கை தீவுக்கு முதன்முதலில் 1823ம் ஆண்டு கொண்டுவரப்பட்டனர். நிதி வர்த்தகம் உட்பட ஏனைய தொழில் நடவடிக்கைகளுக்காகவும் மென்மேலும் தமிழர்கள் அதன் பின் இலங்கை வந்தனர்.

அடுத்த ஆண்டு 2023 உடன் இந்த வரலாறு, இருநூறு ஆண்டுகளை தொடுகிறது. அதை நாம் விரிவாக நினைவு கூற உள்ளோம்.

இந்த இருநூறு ஆண்டுகளில் ஒரு சமூகமாக நாம் பெற்றுள்ள வளர்ச்சி, பெறாத வளர்ச்சி, முகம் கொடுக்கின்ற இன்னல்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து ஆவன செய்ய தமிழ் முற்போக்கு கூட்டணி திடசங்கற்பம் பூண்டுள்ளது. அதன் ஆரம்பமே இந்த ஆவணமாகும்.


1823ம் ஆண்டு வேளையில் இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளையும் ஆண்ட பிரித்தானிய அரசின் கவனத்துக்கும் இதை நாம் கொண்டுவர உள்ளோம். பிரித்தானிய அரசுக்கும் எமது மக்கள் தொடர்பில் கடப்பாடு இருக்கிறது.

1823ம் ஆண்டுக்கு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் 1815ல் கண்டி ராஜ்யத்தை ஆண்ட இந்திய வம்சாவளி மதுரை நாயக்க மன்னர் வம்சத்தின் சுமார் 300 ஆண்டுகால ஆட்சி, பிரித்தானியரால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இந்நாட்டில் உழைக்க மட்டுமல்ல ஆளவும் நாம் வந்துள்ளோம் என்பதை இது காட்டுகிறது.

இலங்கையில் வட கிழக்கில் வாழும் ஈழத்தமிழர்களுடன் நாம் பிரிக்க முடியாத நல்லுறவு கொண்டுள்ளோம். அவர்களின் இன்னல்களை துடைக்க இந்தியா பலதும் செய்கிறது. அது தொடர வேண்டும். அதேவேளை அதே அக்கறையை எமது மக்கள் மீதும் இந்திய உட்பட உலகம் காட்ட வேண்டிய வேளை இன்று வந்து விட்டது.

சுமார் பதினைந்து இலட்சம் இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையரில் பத்து விகிதமே தோட்ட தொழிலாளர்கள் ஆவர். ஒட்டு மொத்த மலையக தமிழ் இலங்கையரும் தோட்ட தொழிலாளர்கள் அல்ல என்பதையும், எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் இந்திய உட்பட உலகம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

அதேவேளை பத்து விகிதமான சுமார் ஒன்றரை இலட்சம் தோட்ட தொழிலாளர்களும் அவர்களது குடும்ப உறவுகள் மற்றும் தோட்டங்களில் இன்னமும் வாழ்பவர்கள் உள்ளிட்ட சுமார் நான்கு இலட்சம் மக்களே இலங்கையிலேயே மிகவும் பின்தங்கிய பிரிவினர்.



அவர்களை கைத்தூக்கி தேசிய மட்டத்துக்கு உயர்த்த இந்தியா, பிரிட்டன் உட்பட உலகத்துக்கு கடப்பாடு இருக்கின்றது. இதை வலியுறுத்தி உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணி திடசங்கற்பம் பூண்டுள்ளது. எமது உறுதிப்பாட்டை நாம் எந்த சவால்களுக்கும் முகம் கொடுத்து செய்து முடிப்போம்.

இந்தியா செய்திகள் India News

# இந்தியாவில் கொரோனா கட்டுப்பாடுகள் அனைத்தும் மார்ச் 31ந் தேதி முடிவுக்கு வருகின்றன

இந்தியாவில் கொரோனா கட்டுப்பாடுகள் அனைத்தும் மார்ச் 31-ந் தேதி-யுடன் முடிவுக்கு வருகின்றன. இந்தியாவில் கொரோனா தொற்று பெருமளவு குறைந்துள்ளது.

முதல் அலை முதல் 3-ம் அலை வரை கொரோனா பரவலால் நாடு முழுவதும் ஊரடங்கு உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. தற்போது கொரோனா பரவல் பெருமளவில் கட்டுக்குள் வந்து விட்டது.

மாநில அரசுகளுக்கு கடிதம்

இதையடுத்து கொரோனா கட்டுப்பாடுகளை முழுவதுமாக விலக்க ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து மாநில அரசுகளுக்கு ஒன்றிய உள்துறை செயலாளர் அஜய் பல்லா கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் கூறியிருப்பதாவது:-&
பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் மாநில அரசுகள் விதித்துள்ள கொரோ-னா கட்டுப்பாட்டு விதிகளை இனி நீட்டிக்க வேண்டிய அவசியமில்லை. பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட கொரோனா கட்டுப்பாடுகளை மாநில அரசுகள் நீக்கலாம்.

அதே சமயம் சுகாதாரத்துறையின் வழிகாட்டு நெறிமுறைகளான முகக்கவசம் அணிதல், தனிநபர் இடைவெளியை கடைப்பிடித்தல் உள்ளிட்டவற்றை பின்பற்ற வேண்டும்.

அதே போல் கொரோனா பரவல் இருக்கும் இடங்களில் கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்து மிகுந்த கவனம் தேவை. கொரோனா சூழலை கருத்தில் கொண்டு ஒன்றிய உள்துறை அமைச்சகம் அவ்வபோது பிறப்பிக்கும் வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கை, கொரோனா தடுப்பூசி செலுத்துதல் உள்ளிட்டவற்றை தொடர்ந்து பின்பற்ற வேண்டும். ஒன்றிய அரசு சார்பில் விதிக்கப்பட்டுள்ள கொரோனா கட்டுப்பாடுகள் மார்ச் 31 ஆம் தேதி முடி-வடையும் நிலையில், அதன் பிறகு புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படாது.

இவ்வாறு உள்துறைச்செயலாளர் அஜய் பல்லா தெரிவித்துள்ளார்.

கொரோனாவின் 3 அலைகள் முடிந்து விட்ட நிலையில், 4வது அலை வருமா வராதா என்ற அச்சம் நிலவி வரும் சூழ்நிலையிலும், மார்ச் 31ந் தேதியோடு கொரோனா கட்டுப்பாடுகள் அனைத்தும் முடிவுக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அந்தமானில் "இனிய நந்தவனம்" ஏற்பாட்டில் இலக்கிய சந்திப்பு

தமிழ்நாடு திருச்சியிலிருந்த கடந்த 25 ஆண்டுகளாக வெளிவரும் இனிய நந்தவனம் மாத சஞ்சிகையின் ஏற்பாட்டில் ஆண்டு தோறும் அந்தமானுக்கு இலக்கியச்சுற்றுலாவும்.

இலக்கிய சந்திப்பும் நிகழ்த்தப்பட்டு வருகிறது அந்த வகையில் 22-03-2022 அன்று அந்தமான் தமிழர் சங்கத்தில் இனிய நந்தவனம் இலக்கியச் சந்திப்பு நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.





அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் எல். மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அந்தமான் தமிழர் சங்கத் துணைத்தலைவர் கவிஞர் தமிழ்ச்செல்வன் செயலாளர் வே. காளிதாசன் பொருளா-ளர் ந.ஜெயராமன், துணைச் செயலாளர்கள் சோழன் சுதாகரன், மா. சேது, செயற்குழு உறுப்பினர்கள் வி. கோ, கு. காட்டுராஜன், முருகேசன் மற்றும் அந்தமான் எக்ஸ்பிரஸ் இதழாசிரியர் கே. கணேசன், அந்தமான் இலக்கிய மன்றத் தலைவர்



கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

தமிழ்நாட்டிலிருந்து இந்நிகழ்வில் கலந்துகொண்ட கவிஞர் இரா. முருகன், இரஜகை நிலவன், ஜோசப் பன்னீர்செல்வம், மரியே விட், புலவர் நாச்சிமுத்து, கவிஞர் கோவிந்தராஜன், ஆகியோருக்கு இலக்கியப் பேரொளி விருதும் பத்திரிகையாளர் வேலயாவுக்கு இலக்கியச்சுடர் விருதும் மருத்துவர் வர்ம கணேசனுக்கு மருத்துவ மாமணி விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது இனிய நந்தவனம் சஞ்சிகை ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் நிகழ்வை ஒருங்கிணைத்து ஏற்புரை வழங்கினார் அந்தமான் தமிழ் அறிஞர்கள் பலர் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்தியா செய்திகள் India News

# தி.மு.க அரசை திடீரென புகழ்ந்த முன்னாள் சபாநாயகர் தனபால்: ஆடிப்போன அ.தி.மு.க





அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் சபாநாயகர் தனபால் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில் திடீரென திமுகவை அரசை புகழ்ந்ததால் அதிமுக தலைமை ஆடிப்போய் இருக்கிறது. பெரியாரின் எழுத்துகள் மற்றும் பேச்சுக்களை 21 இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளில் மொழி பெயர்த்தல் மற்றும் மாணவிகளின் உயர்கல்விக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் திமுக அரசின் முடிவைப் பாராட்டி, செவ்வாய்க்கிழமை சட்டப்பேரவையில் முன்னாள் சபாநாயகர் தனபால் அதிமுகவினரை அசர வைத்துள்ளார்.

முன்னாள் சபாநாயகர் தனபால், “பெரியாரையும் அவரது சிந்தனைகளையும் உலகம் முழுவதும் கொண்டு செல்லும் மாநில அரசின் முயற்சியைப் பாராட்டுகிறேன்” என்று கூறினார். முன்னாள் சபாநாயகர் தனபால் திமுக அரசின் திட்டத்தைப் பாராட்டியதையடுத்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனபாலுக்கு நன்றி கூறினார். மேலும், தேர்தலில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் திமுக நிறைவேற்றும் என்று உறுதியளித்தார். அதே நேரத்தில், தனபால், அவர் எதிர்பார்த்தபடி, மாநில பட்ஜெட் அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாததால் சற்று ஏமாற்றம் அடைந்ததாகக் கூறினார்.

பின்னர், பள்ளியின் உள்கட்டமைப்பை மேம்படுத்த அதிக நிதி ஒதுக்கீடு செய்ததற்காக அவர் அனைவரும் பாராட்டுகிறார்கள் என்று கூறிய தனபால், 1,652 கோடி ரூபாய் மதிப்பில் அத்திக்கடவு-அவிநாசி திட்டப் பணிகளை விரைந்து முடிக்குமாறு மாநில அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஜெயலலிதா மறைவுக்கு பிறகு, எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த காலத்தில் தனபால் சபாநாயகராக தொடர்ந்து இருந்தார். கட்சியில் ஓ.பி.எஸ், சசிகலா, இ.பி.எஸ் இடையே பூசல்கள் எழுந்தபோது எந்த கருத்துகளையும் தெரிவிக்காமல் அமைதி காத்து வந்தார். இந்த நிலையில், நேற்று நடைபெற்ற சட்டப் பேரவைக் கூட்டத்தில், முன்னாள் சபாநாயகர் தனபால் திடீரென திமுக அரசை புகழ்ந்து பேச அதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நன்றி கூற அதிமுக ஆடிப்போயுள்ளது.

# சென்னை வடபழனி முருகன் கோயிலில் தரமற்ற பிரசாதங்கள் தயாரிக்கப்பட்டதால் நிர்வாகிகள் மீது நடவடிக்கை



வடபழனி முருகன் கோயிலில் உணவு பாதுகாப்புத் துறையினர் நடத்திய சோதனை-யில் லட்டு உட்பட பிரசாத பொருட்கள் தரமின்றி விற்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. லட்டு, தட்டுவடை முறுக்கு போன்ற உணவுப் பொருட்களில் தேதி குறிப்பிடாமல் விற்பனை செய்யப்பட்டதால் அனைத்தையும் பறி-முதல் செய்து ஆய்வுக்கூடங்களுக்கு அனுப்பி வைத்தனர் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள்.

சென்னை வடபழனி தண்டாயுதபாணி கோயிலில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு நடத்தினர். வடபழனி முருகன் கோயிலில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் தரம் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. லட்டு, தட்டு வடை, முறுக்கு போன்ற பொருட்களில் தரம் மற்றும் தயாரிக்கப்பட்ட தேதி குறித்த விவரங்கள் சரிபார்க்கப்பட்டது. அப்போது லட்டு, முறுக்கு போன்ற பொருட்களின் தயாரிக்கப்பட்ட தேதி மற்றும் பயன்படுத்த வேண்டிய இறுதி தேதி போன்றவை விவரங்கள் உணவுப் பொருட்களில் சரியாக குறிப்பிடப்படாமல் இருந்தது.

இதனால் விற்பனையகத்தில் விற்பனைக்கு வைத்திருந்த பிரசாத பொருட்கள் அனைத்தையும் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்த உணவுப்பொருட்களை உணவு பாதுகாப்புத்துறை ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பி வைத்தனர். அங்கு முழுமையாக உணவு தர பரி-சோதனை மேற்கொள்ளப்படும் என்றும் விற்பனை செய்யப்பட்டது தரமான உணவுப் பொருட்களாக இல்லை எனக் கண்டறியப்பட்டால் தயாரிப்பு நிறுவனம் மீதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையின் முக்கியத்தளமாக விளங்கும் வடபழனி முருகன் கோயிலில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உணவு தர சோதனையில் ஈடுபட்டது காலையில் அப்பகுதியில் சற்று பரபரப்பை ஏற்படுத்தியது.

# பொருட்களுக்காக வரிசையில் காத்திருக்கும் ஒரு காலத்தில் அன்னை பூபதியை நினைவுகூர்வது



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

முப்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இதே காலப்பகுதியில் அதாவது மார்ச் மாதம் 19ஆம் திகதி 1988ஆம் ஆண்டு அன்னை பூபதி சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை தொடங்கினார். ஈழப்போர் வரலாற்றில் அவருக்கென்று தனித்துவமான ஓர் இடம் உண்டு. அவர் ஒரு ஆயுதப் போராளி இல்லை. எனினும் தன் உயிரைத் துறக்கத் தயாராகி சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருந்த முதல் ஈழத்தமிழ் பெண் என்ற முக்கியத்துவம் அவருக்கு உண்டு. அவர் ஓர் அரசியற் செயற்பாட்டாளர். போராட்டத்தின் பாதிப்பை தெரிந்தவர். இரண்டு ஆண் பிள்ளைகளைப் பறி கொடுத்தவர். அவர் அங்கம் வகித்த மட்டு அம்பாறை அன்னையர் முன்னணி இந்திய அமைதி காக்கும் படையிடம் நீதிகேட்டு ஆரம்பித்த சாகும் வரையிலுமான உண்ணாவிரதப் போராட்டம் இடையில் குழப்பப்பட்டது. எனினும் தானாக முன்வந்து அன்னை பூபதி போராட்டத்தை உயிர் துறக்கும் வரை தொடர்ந்தார்.

திலீபனின் உண்ணாவிரதத்தோடு ஒப்பிடுகையில் அவருடையது வித்தியாசமானது. திலீபன் ஒரு ஆயுதப் போராளி. எனவே சாகத் தயாரான ஒரு வாழ்க்கைமுறையை கொண்டிருந்தவர். அவருடைய போராட்ட முறை அகிம்சை அல்ல. ஆனால் அகிம்சைப் போராட்டத்தில் அவர் உயிரை தியாகம் செய்தார்.

அன்னை பூபதி ஒரு ஆயுதப் போராளி அல்ல. ஆனால் ஒரு குடும்பப் பெண் அரசியலில் எப்படிப்பட்ட துணிச்சலான முடிவை எடுக்கலாம் என்பதற்கு நவீன அரசியலில் அவர் ஒரு நிகரற்ற முன்னுதாரணம். திலீபன் உணவருந்தாமல் நீர் அருந்தாமல் 12 நாட்கள் போராடினார். பூபதி உணவை நீக்கி, நீரை மட்டும் அருந்தி முப்பத்தொரு நாட்கள் போராடினார்.

தமிழ் அரசியலில் ஆயுதப் போராட்டத்திற்கு முந்திய மிதவாத அரசியலிலும் மிகச்சில பெண்களே மேலெழுந்தார்கள். ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான மிதவாத அரசியலிலும் கடந்த 12 ஆண்டுகளாக மிகச் சில பெண்கள்தான் மேடைகளில் தோன்றுகிறார்கள். போராட்டங்களில் முன்னே நிற்கிறார்கள். இடைப்பட்ட ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் அனேக பெண் ஆளுமைகள் மேலெழுந்தன. போராளிகளாக, தளபதிகளாக, பொறுப்பாளர்களாக, பேச்சாளர்களாக, பேச்சுவார்த்தைக் குழுவில் முக்கியஸ்தர்களாக, அனேக பெண்கள் மேலெழுந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் இயக்கங்களில் போராளிகளாக இருந்தவர்கள்.

போராளிகளைத் தவிர இன்னொரு தொகுதி பெண் ஆளுமைகள் அமைதியாக போராட்டத்தை அடைகாத்தார்கள். அவர்கள்தான் அடைக்கலம் தந்த வீடுகளின் இல்லத்தரசிகள் ஆவர். இந்த அடைக்கலம் தந்த வீடுகள் இல்லை என்றால் தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டமே வளர்ந்திருக்காது. இவ்வாறு அடைக்கலம் தந்த வீடுகளில் தலைவிகளாக இருந்தவர்களை வரலாற்றுக் குறிப்புகளிலும் கண்டுபிடிப்பது கடினம். ரஞ்சகுமார் போன்றோரின் தாய் குறித்த சிறுகதைகளில் ஓரளவுக்கு இந்த அன்னையர்களின் தியாகமும் விரதமும் இலக்கியமாகின. தமது பிள்ளைகளுக்காக ஒருவேளை உணவை அல்லது இருவேளை உணவைத் துறந்து உண்ணாவிரதம் இருந்த பெண்களை நாம் பார்த்திருக்கிறோம். காணாமல் போன தனது பிள்ளை திரும்பி வரும் என்ற நம்பிக்கையோடு இன்றுவரையிலும் பாண் மட்டும் சாப்பிடுகின்ற தாய்மாரை நாங்கள் பார்க்கிறோம். காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காக கடந்த 12 ஆண்டுகளாக வீதியோரங்களில் போராடிக் கொண்டிருக்கும் அன்னையரை நாங்கள் பார்க்கிறோம்.

ஈழத்தமிழர்களின் அரசியல் எனப்படுவது வெளித்தெரியாத அன்னையர்களின் விரதம் உண்ணாநோன்பு அர்ப்பணிப்பு போன்றவற்றினால் கட்டி எழுப்பப்பட்ட ஒன்றுதான். இவ்வாறான ஒரு போராட்ட பாரம்பரியத்தின் பின்னணியில்தான் அன்னை பூபதியும் சாகும்வரை உண்ணாவிரதத்தை தொடங்கினார். அவரும் அடைக்கலம் தந்த ஒரு வீட்டின் அன்னைதான்.

ஒரு போராளி அவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது வேறு. ஒரு குடும்பப்பெண் அவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது வேறு. இரண்டுக்குமிடையில் இருக்கக்கூடிய அர்ப்பணிப்பு திடசித்தம் போன்றவற்றை வித்தியாசப்படுத்தி பார்க்க வேண்டும். இந்த இடத்தில்தான் அன்னை பூபதியின் முக்கியத்துவம் அதிகமாகிறது. தவிர அவர் கிழக்கு மையத்தில் இருந்து வருகிறார். தனது பசியினாலும் தாக்கத்தினாலும் வடக்கையும் கிழக்கையும் இணைத்தவர்.

தமிழ் மக்களின் நவீன அரசியலில் அவருக்கு முன்னும் பின்னும் அவரைப்போல சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருந்த ஒரு பெண்ணை இன்றுவரையிலும் காட்ட முடியாது.

பூபதிக்கு பின் கடந்த 12 ஆண்டுகளாக தமிழ் அரசியலில் அதிகமாக போராடுவது அன்னையர்கள்தான். கேப்பாபுலவிலும் இரணைதீவிலும் தமது காணிகளை மீட்க முன்சென்றது அம்மாக்கள்தான். கடந்த 12 ஆண்டுகளாக நடந்துவரும் பெரும்பாலான எல்லா போராட்டங்களும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடிப்போராடும் தமிழ் அம்மாக்களின் கண்ணீரால் நனைந்திருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தது மேற்படி அம்மாக்கள்தான். அவமதிக்கப்பட்டதும் அம்மாக்கள்தான். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக வீதியோரங்களில் போராடிக்கொண்டிருக்கும் அம்மாக்கள்தான். அவர்களில் கிட்டத்தட்ட 80 க்கும் அதிகமானவர்கள் இந்த உலகம் நீதியற்றது என்ற ஏமாற்றத்தோடு இறந்து போய்விட்டார்கள். மிஞ்சி இருப்பவர்கள் விடாது தொடர்ந்து போராடுகிறார்கள். கடந்த 12 ஆண்டு கால தமிழர் அரசியலில் அவர்கள்தான் ரெடிமேட் போராளிகள். கட்சிகளுக்கும் அவர்கள்தான் முன்னரங்க போராளிகள்.ஐ.என். ஜியோக்களுக்கும் அவர்கள்தான் முன்னரங்க போராளிகள். சில தூதரகங்களுக்கும் அவர்கள்தான் முன்னரங்கப் போராளிகள். புலம்பெயர்ந்த தமிழ் தரப்புகளில் இருப்பவர்கள் தாயகத்தின் மீது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கும் பொழுது அவர்களுடைய பார்வையில் முதலில்படுவது மேற்படி முதிய அம்மாக்கள்தான். எல்லாப் போராட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவரின் ஒளிப்படங்களோடும் கண்ணீரோடும் முன்னே வருவது அவர்கள்தான். எல்லாப் போராட்டங்களிலும் தரையில் விழுந்து அழுது ஊடகங்களின் கவனத்தை ஈர்ப்பது அவர்கள்தான். கட்சிகளாலும் நிதி வழங்கும் புலம்பெயர் தரப்புக்களினாலும் பிரிக்கப்பட்டு இருந்தாலும்கூட, தொடர்ச்சியாக விடாது போராடிக்கொண்டிருப்பது மேற்படி அம்மாக்கள்தான்.

கடந்த 12 ஆண்டுகளாக ஒரு நாள் எழுக தமிழ்கள், ஒருநாள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பிரகடனங்கள் இவற்றுக்கும் அப்பால் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் அம்மாக்கள்தான். புதுடில்லியில் வேளாண் மசோதாவுக்கு எதிராக போராடிய விவசாயிகளை போன்று அவர்கள் தொடர்ச்சியாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு தீர்வு கிடைத்து விட்டது. ஆனால் இந்த அம்மாக்களுக்கு கிடைத்திருப்பது ஒரு லட்சம் ரூபாய். அதாவது காணாமல் ஆக்கப்பட்ட உயிர் ஒன்றின் பெறுமதி ஒரு லட்சம் ரூபா.

அண்மையில் ஊடகவியலாளரும் ஒரு இலத்திரனியல் ஊடகத்தின் உரிமையாளருமான நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார், இந்த அம்மாக்களின் போராட்டத்தை ஏன் மக்கள் மயப்படுத்த முடியவில்லை? என்று. நான் அவருக்குச் சொன்னேன் இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவது அவர்களுடைய போராட்டம் பாதிக்கப்பட்டவர்களின் மையத்திலிருந்து உருவெடுத்தது. பாதிக்கப்பட்டவர்கள் எல்லாருமே அரசியல் தெளிவோடு தலைமை தாங்கலாம் என்றில்லை. இப்பொழுது சில தலைவிகள் அங்கே வந்துவிட்டார்கள். ஆனாலும் இந்த அம்மாக்களை ஒன்றுதிரட்டி ஒரு தொடரான போராட்டத்தை முன்னெடுக்கத்தக்க குடிமக்கள் சமூகங்களோ அல்லது கட்சிகளோ அமைப்புக்களோ தமிழ் மக்கள் மத்தியில் கிடையாது. இது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம் இந்த அம்மாக்களின் போராட்டத்தை பின்னிருந்து ஊக்குவிக்கும் புலம்பெயர் தரப்புக்களும் கட்சிகளும் தமது நிதி உதவிகளால் இவர்களை பிரித்து வைத்திருப்பதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு.

இந்த அம்மாக்களின் போராட்டம் மட்டுமல்ல, காணிக்கான போராட்டம், அரசியல் கைதிகளுக்கான போராட்டம், பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான போராட்டம், போன்ற எல்லா போராட்டங்களும் ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட வேண்டும். ஒரு தெளிவான வழி வரைபடத்தோடு ஒரு மையத்திலிருந்து முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு ஒரு மையமாக செய்யப்படும் மக்கள் அமைப்பும் இல்லை, தெளிவான வழிவரை படமும் இல்லை.இதுதான் பிரச்சினை.

இவ்வாறான தோல்விகரமான ஓர் அரசியல் சூழலில், அன்னை பூபதியை நினைவு கூர்வது என்பது ஒரு சடங்கு ஆகிவிட்டது. ஆனால் மெய்யான பொருளில் பூபதியை நினைவுகூர்வது என்பது, அவரைப் போன்று போராடத் தயாராகக் காணப்படும் அம்மாக்களை ஒரு மையத்தில் ஒருங்கிணைப்பதுதான். யார் அதைச் செய்வது?

## வீணாவின் கவிக்கணை

வாழும் காலம் கொஞ்சம் தான்,
எது எப்பொழுது நடக்கும என்று,
எதற்கும் உத்தரவாதம் இல்லை,
இதை நன்கு உணர்ந்த பின்பும்,
பிறர் துன்பத்தில் இன்பம் கண்டு
நரி நாட்டியம் ஆடுவதும் ஏனோ?
நரிக்குணம் அது தான் என்பதறிந்த
பின்னும் நீ வருந்தி நிற்பதுவும் சரியோ?
தூக்கி எறிந்திடு, உன் துயரை நீக்கிடு,
தடைகள் தகர்த்திடு, மனதை திடமாக்கிடு,
இனி வரும் காலம் உனதே என்று
நெஞ்சை நிமிர்த்தி வாழ்ந்திடு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கொழும்பு துறைமுகத்திற்கு அமெரிக்காவின் துணை இராஜாங்க செயலாளரும் தூதுவரும் விஜயம்



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணை செயலாளர் விக்டோரியா நியுலாண்ட், இலங்கைக்கான அமெரிக்க தூதுவரும் கொழும்பு துறைமுகத்திற்கு இன்று விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

உலகின் மிக முக்கிய கடல் பாதையில் அமைந்துள்ள இலங்கை இந்தோ பசுபிக் பிராந்தியத்திலும் சர்வதேச வர்த்தகத்திலும் மிக முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது.

இலங்கையும் அமெரிக்காவும் முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் எவ்வாறு இணைந்து செயற்படலாம் என ஆராய்வதற்காக கொழும்பு துறைமுகத்திற்கு உதவி இராஜாங்க செயலாளருடன் விஜயம் மேற்கொண்டேன் என தூதுவர் ஜூலி சங் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடு குறித்து ஆராய்வதற்காக எப்போதும் இயங்கிக்கொண்டிருக்கும் - இந்து சமுத்திரத்தின் மிகப்பெரிய மும்முரமான கொழும்பு துறைமுகத்திற்கு விஜயம் மேற்கொண்டேன் என விக்டோரிய நுலாண்ட் தெரிவித்துள்ளார்.



# மகிந்தவின் பதாகைக்கான பெறுமதியைக் கூட தமிழர் உயிர்களுக்கு அரசு வழங்கவில்லை

## - வாக்குமூலத்தின் பின் நிரோஷ் சாடல்



வரவேற்புப் பதாகைகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் கூட தமிழர் உயிர்களுக்கு நாட்டில் கொடுக்கப்படவில்லை என்பதையே இன்றைய வாக்குமூலம் வெளிப்படுத்துவதாக தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.


பிரதமர் மகிந்த ராஜபக்சவின் யாழ். வருகையின் போது, ஆட்களைத் திரட்டி வந்து பிரதமரை வரவேற்பதற்கான பதாகைகளை எரித்தார்கள் என கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றின் பிரகாரம் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செல்வரட்ணம் மயூரன் ஆகியோரிடம் வியாழக்கிழமை (24) பொலிஸ் வாக்கு மூலம் பெறப்பட்டது.

வாக்கு மூலத்தின் பின் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றின் பிரகாரம் நாம் மட்டுவில் பகுதியில் ஆட்களைக் கூட்டிவந்து பிரதமரின் வரவேற்பு பதாகைகளை எரியூட்டியதாக எம் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இது தொடர்பில் எம்மிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது. நாம் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்களுக்கு நீதி வேண்டி ஜனநாயக வழியில் குறித்த பகுதியில் போராடினோம் என்றும் யாரால் எரிக்கப்பட்டது என்பது தெரியாது எனவும் போராட்டம் ஜனநாயக வழியிலேயே இடம்பெற்றது என்பதையும் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படமுடியாதது என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.

ராஜபக்சக்களின் ஆட்சியிலேயே ஆயிரக்கணக்கானவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டனர். இதற்கு நீதி கேட்டுப் போராடிய தாய்மார் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததாகும். தாய்மார் தாக்கப்பட்டது பற்றி நாட்டில் விசாரணை இல்லை. ஆனால், வீதிகளில் தூக்கப்பட்ட பதாகைகளை யார் எரித்தார்கள் என நாட்டில் பாரிய விசாரணைகள் நடைபெறுகின்றன. இது தான் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் குறித்த நிலை. தாய்மார் தாக்கப்படும் போது நிகழ்வில் பேசிய பிரதமர் வடக்கிலுள்ளவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தனக்குள்ளது என பொய்யுரைத்தார்.

தமிழர் உயிர்களைக் காட்டிலும் கட்டவுட்களுக்கு இலங்கையில் பாதுகாப்புள்ளது என்பதை தாய்மார் தாக்கப்பட்டதை கணக்கில் ஏனும் எடுக்காது பிரதமரின் பதாகை எரிக்கப்பட்டமை தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கும் அரச அதிகாரத்தில் இருந்து புரிந்து கொள்ள முடிகின்றது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரும் ரெலோவின் மாவட்டப் பொறுப்பாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# ஈழத்தமிழர்களுக்கு அரணாக நிற்போம் என்கிறார் வேல் முருகன்



இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி விழிபிதுங்கி நிற்கிறது. அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு ரூ.284 ஆக வீழ்ச்சியடைந்திருக்கிறது. அங்கு அத்தியாவசியப் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது.

இலங்கையில் தற்போது ஒரு கிலோ அரிசி ரூ.290, சர்க்கரை ரூ.290, 400 கிராம் பால் பவுடர் ரூ.790 என்ற விலையில் விற்கப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் இலங்கையில் ராஜபக்சே கும்பல் அரசின் அலட்சியமான அணுகுமுறையே!

பட்டினி சாவிலிருந்து எப்படித் தற்காத்து கொள்வது என தெரியாமல், கோத்தய கும்பலை வீட்டிற்கு செல் என்ற முழக்கத்துடன், அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான உணவு தட்டுப்பாடு, வேலையின்மை காரணமாக தமிழ்நாட்டிற்கு, யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளைச் சேர்ந்த ஈழத்தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். அடுத்து வரும் நாட்களில் மேலும், அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டிற்கு பலர் அகதிகளாக வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

எனவே, தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வரும் ஈழத்தமிழர்கள் போதுமான வசதிகளை ஏற்படுத்தி தர தமிழ்நாடு அரசு முன் வர வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது.

மேலும் இதுகுறித்து இன்று காலை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை சென்னை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து தப்பி வரும் அவர்களில் பெண்கள் குழந்தைகள் முதலியவர்களை அகதி முகாம்களிலும், ஆண்களை புழல் சிறையிலும் அடைப்பது குறித்து 24-03-2022 காலை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து எடுத்துரைத்தேன், அதை கனிவுடன் கேட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவில் ஒன்றிய அரசுடன் பேசி இந்த சிக்கலை சரி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஒருபுறமிருக்க, இலங்கையில் இருந்து பெரும் கவலையோடு வரும் ஈழத்தமிழர்களை, தமிழ்நாட்டிற்கு அழைத்து வர, தமிழ்நாட்டை சேர்ந்த படகு உரிமையாளர்கள் பெரும் தொகையை வசூலிப்பதாக கூறப்படுகிறது. இது அதிர்ச்சி ஏற்படுத்துவதோடு, வேதனையளிக்கிறது.

உணவின்றி, வேலையின்மையின்றி, தங்களது குழந்தைகளுக்கு பால் பவுடர் கூட வாங்க முடியாத அவலநிலையில், தமிழ்நாட்டிற்கு சென்றால் எப்படியாவது பிழைத்து கொள்ளலாம், தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் நமக்கு கைக்கொடுப்பார்கள் என்ற எண்ணத்தில், நமது உதவியை நாடி வருகின்றனர். அவர்களிடம் நாம் பெரும் தொகையை வசூலிப்பது முறையல்ல. அது தமிழர்களின் பண்பாடும் அல்ல.

அதனால், தங்களின் வாழ்வாரத்தை காப்பாற்றிக்கொள்ள வரும் ஈழத்தமிழர்களிடம், பணம் வசூலிப்பதை தமிழ்நாட்டு படகு உரிமையாளர்கள் கைவிடுவதோடு, அவர்களுக்கு அரணாக நிற்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறேன்.


**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Children's Party
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Holiday Party
- Religious Ceremonies
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

# காணி அபிவிருத்தி சட்டமூலம் 'விவசாயிகளுக்கு பாதகமானது'



அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம், விவசாய நிலங்களை விவசாயிகளிடமிருந்து பறிக்கும் சட்டமாக அமைந்துள்ளதாக, நாட்டின் பல முன்னணி தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளால் குறிப்பிடப்பட்டுள்ளது.

32 தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் வெளியிட்டுள்ள ஒரு கூட்டறிக்கையில், புதிய காணி அபிவிருத்தி சட்டமூலம், சட்டமாக்கப்படுவதற்கு முன்னர், திருத்தச் சட்டமூலத்தின் 4 மற்றும் 9ஆவது பிரிவுகளை இரத்து செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளன.

காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் (LDO) மார்ச் 11 வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

விவசாயிகளின் கடன் சுமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் காட்டும் அறியாமை மற்றும் அலட்சியம் அருவருப்பானது என தொழிற்சங்கங்களும் சிவில் சமூக குழுக்களும் குற்றஞ்சாட்டுகின்றன.

"விவசாயிகளின் நிலங்களை வங்கிகளில் அடகு வைப்பதுதான் அனைத்து விவசாயிகளின் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு என அவர்களில் பலர் நம்புவதை அமைச்சர்களின் அறிக்கைகள் காட்டுகின்றன. சட்டமூலம் உள்ள உட்பிரிவுகள் முக்கியமானவற்றை விவாதிக்கும் சூழலை உருவாக்காமல் அவசர அவசரமாக சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம், ஆடுகளின் உடையில் ஓநாய் என தெரிவித்துள்ள, தொழிற்சங்கம் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள், மக்களுக்கு அதிக சுதந்திரத்தையும் அவர்களின் நிலத் தீர்மானத்தின் மீது கட்டுப்பாட்டையும் அளிக்கும் ஒரு முற்போக்கான நடவடிக்கை என தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## பெண்களுக்கான உரிமை

"இந்த சட்டமூலம் பெண்களுக்கு காணி வாரிசு உரிமையை அறிமுகப்படுத்த முயல்கிறது. மக்கள் விரோதச் சட்டங்களைக் கொண்டு வர பெண்களின் கோரிக்கைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவது இது முதல் முறை அல்ல என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். உழைக்கும் மக்களின் உரிமைகளைக் குறைக்கும் நெகிழ்வான தொழிலாளர் சட்டங்களை அறிமுகப்படுத்தியதைப் போலவே, நிலத்தை தனியார்மயமாக்கவும், அதை ஒரு பண்டமாக மாற்றவும் பெண்களின் கோரிக்கைகளை அரசாங்கம் தவறாகப் பயன்படுத்துகிறது".

காணி அபிவிருத்தி திருத்த சட்டமூலம், விவசாயிகள் தங்கள் நிலத்தை அப்பகுதியின் அரசாங்க அதிபரின் அனுமதியின்றி வங்கிகளில் அடகு வைக்க உதவும் எனவும், இதன் விளைவாக, விவசாயிகளின் உரிமையை உறுதிப்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டு, விவசாயிகள் தங்கள் நிலத்தை அடமானம் வைக்கும் உரிமையைப் பெறுவதற்கான அதிகாரத்தை சுட்டிக்காட்டி, இந்த சட்டமூலம் ஒரு "முற்போக்கான" நடவடிக்கையாக தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதாகவும், மார்ச் 17 அன்று 32 தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளால் கூட்டாக வெளியிடப்பட்ட ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் முதலாளிகளிடம் நிலத்தை அடகு வைக்கும் சுதந்திரம் "சுதந்திரம்" அல்லது "விடுதலை" அல்ல என்பது ஆயிரக்கணக்கான நிலமற்ற விவசாயிகளுக்கு தெரியும் எனக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, விவசாயிகள் வேறு வழியின்றி நிலத்தை அடகு வைப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




"குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் மக்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கை அனுபவத்தைப் பொருட்படுத்தாமல், புதிய திருத்த சட்டமூலம், வறிய விவசாயிகளிடமிருந்து விவசாய நிலங்களை அபகரித்து விவசாயிகளின் மதிப்புமிக்க சொத்துக்களை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், கொள்ளையடிப்பதை தடுக்கும் முற்போக்கான காணி சீர்திருத்த சட்டங்களை இரகசியமாக மாற்ற முயல்கிறது".

விவசாயிகள் ஏற்கனவே கடனில் சிக்கித் தவிக்கும் வேளையில் இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

"இயற்கை பசளையை பயன்படுத்துவது குறித்த திடீர் முயற்சியால் விளைச்சல் பெருமளவில் வீழ்ச்சியடைந்த அதிர்ச்சியுடன் போராடும் விவசாயிகள் ஏற்கனவே வருமானத்தை இழக்கும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர். சீரழிந்து வரும் பொருளாதார நிலை விவசாயிகளின் கடனை மேலும் தீவிரமாக்கும். விவசாயிகளின் கடன்கள், கடந்த காலங்களில் அவர்களை தற்கொலைக்குத் தள்ளியது, அதே போல் தற்போதைய நுண்கடன் நெருக்கடி, முக்கியமாக விவசாயப் பகுதிகளில், விவசாயிகள் வாழும் ஆபத்தான சூழ்நிலையை விளக்குகிறது".

இந்நிலையில், புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்தினால், விவசாய நிலங்கள் வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் பெரிய அளவில் கைமாறும், நிலமற்ற விவசாயிகள் கூட்டம் உருவாகும் என, தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

இச்சட்டம் கடந்த காலத்தைப் போன்று சமூகத்தின் ஒரு சில பிரிவினரே காணிகளை வைத்திருந்த நிலவுடமை காலத்தை மீண்டும் நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட பிற்போக்குச் சட்டம் எனவும் இதனை இலங்கை மக்கள் முழுமனதுடன் நிராகரித்துள்ளதாகவும் தொழிற்சங்கங்களின் கூட்டு அறிக்கை மேலும் வலியுறுத்துகிறது. அதேவேளை, இந்த சட்டமூலத்தை முன்வைத்தமைக்கு அமைவாக இலங்கை மக்களால் முழு மனதுடன் நிராகரிக்கப்பட்ட மிலேனியம் சவால் உடன்படிக்கை தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.


விவசாய நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களால் நிலத்தை தனியார்மயமாக்குவதற்கு எதிரான மக்களின் எதிர்ப்பு, மிலேனியம் சவால் சட்டத்தை தோற்கடிப்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்ததாக தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

"வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் பிடியில் இருந்து விவசாயிகளின் நிலங்களைப் பாதுகாக்கும் மேற்பார்வையை அகற்றுவதன் மூலம் அரசாங்கம் என்ன பெற முயற்சிக்கிறது? எஞ்சியிருக்கும் விவசாயிகளின் கடைசி சொத்துக்களில் அதிகமானவற்றை வங்கிகள், நிதி மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் கைப்பற்றுவதற்கு அரசாங்கம் உதவ விரும்புகிறதா? நமது விவசாயிகளின் கடைசி சொத்துக்களை பறிமுதல் செய்து வங்கி மற்றும் பெருநிறுவனத் துறையை வளப்படுத்துவதில் அரசாங்கம் ஏன் அக்கறை கொண்டுள்ளது?" என அவர்கள் மேலும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

புதிய காணி அபிவிருத்தி சட்டமூலம், சட்டமாக்கப்படுவதற்கு முன்னர், காணி அபிவிருத்தி திருத்தச் சட்டத்தின் 4 மற்றும் 9ஆவது பிரிவுகளை இரத்து செய்யுமாறும், நமது நாட்டில் சிறு விவசாயிகளுக்குப் பாதகமான சட்டங்களை நிறைவேற்ற நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பயன்படுத்தக் கூடாது எனவும், எதிர்காலத்தில் விவசாயிகளின் நிலங்கள் வங்கிகளிடம் பறிபோகும் போது அதற்கான பழி அரசாங்கத்தையே சாரும் என்பதையும், நிலமற்ற விவசாயிகளுக்கு அரசாங்கமே பொறுப்பு என்பதையும் கவனத்தில் கொள்ளுமாறு 32 தொழிற்சங்கங்களும் சிவில் சமூக அமைப்புகளும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.



# அடைக்கலம் தேடிவரும் இலங்கைத் தமிழர்களை கைது செய்து சிறையில் அடைப்பது கொடுமை: சீமான்



'இலங்கையில் இருந்து கடல்வழியாக, படகுகளின் மூலம் அடைக்கலம் தேடிவரும் தமிழர்களை வழக்குகள் போட்டு கைது செய்து மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது கொடுமை. அதிலும் பெற்றோர்களையும் குழந்தைகளையும் பிரித்து சிறையிலும் முகாம்களிலும் அடைப்பது கடும் கண்டனத்திற்குரியது' என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் விளைவினால் அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்து, அந்நாட்டுக் குடிமக்கள் அன்றாடச் செலவினங்களைக்கூட எதிர்கொள்ள முடியாது, வறுமைக்கும், ஏழ்மைக்கும் உள்ளாகி, தவித்து வருகிற செய்திகள் கவலையளிக்கின்றன.

தமிழர்களை அழித்தொழிக்க, உலகெங்கும் கடன்களை வாங்கிக் குவித்து, நாட்டு மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிலும், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியிலும் கவனம் செலுத்தாத கொடுங்கோல் சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறிச் செயல்பாடுகளே இத்தகைய நிலைக்குக் காரணமென்றாலும், இன்றைக்கு தமிழர்களும் சேர்ந்துப் பாதிப்புக்குள்ளாகி நிற்பது பெரும் மனவேதனையைத் தருகிறது.இவ்வளவு ஆண்டுகளாக, சிங்கள ஆட்சியாளர்களின் இன ஒதுக்கல் நடவடிக்கைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு, கொடும் துயரத்திற்கு ஆளாகி நின்ற தமிழர்கள், இப்போது பொருளாதார நெருக்கடியினாலும், வறுமையின் கோரப்பிடியினாலும் வாடி வதங்கி, வாழ்க்கையை நடத்த முடியாத துயர்மிகு சூழலில், நாளும் அல்லல்பட்டு வருவது பெரும் மனவலியைத் தருகிறது.

இத்தகைய கையறு நிலையில், தாய்த் தமிழகத்தில் தஞ்சம் கேட்டு, கடல்வழியாக, படகுகளின் மூலம் அடைக்கலம் தேடிவரும் இலங்கை தமிழர்களை வழக்குகள் போட்டு கைது செய்து மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது கொடுமை. அதிலும், பெற்றோர்களையும் குழந்தைகளையும் பிரித்து சிறையிலும் முகாம்களிலும் அடைப்பது கடும் கண்டனத்திற்குரியது.

அனைத்தையும் இழந்து வரும் நம்மக்களை ஆரத்தழுவி அரவணைத்து, திபெத்திய ஏதிலிகளுக்கு இந்நாடு வழங்கியிருக்கிற சலுகைகளையும், வசதிகளையும் போல, நம் சொந்தங்களுக்கும் செய்துகொடுத்து, அவர்களைக் காக்க முன்வர வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# ஜெயலலிதாவுக்குப் பின் வந்தவர்களின் தவறான செயல்களால் நிதிநிலை மோசமானது: பழனிவேல் தியாகராஜன்



ஜெயலலிதாவின் கை ஆட்சியிலிருந்து எப்போது நகர்ந்ததோ, அதன்பின் ஆட்சிக்கு வந்தவர்களின் திறமையின்மை மற்றும் தவறான செயல்களால், 15.55 சதவீதத்தில் இருந்து 22 சதவீதத்திற்கு மேல் கடன் உற்பத்தி ஏறிவிட்டது என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார். தமிழக சட்டப்பேரவையில் 202223 நிதியாண்டுக்கான பட்ஜெட் மீதான விவாதக் கூட்டம் நடைபெற்றது. நான்காவது நாளான இன்று, நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பதிலளித்து பேசினார். அப்போது அவர் கூறியது: "இந்த நிதிநிலை சரிவுக்கு காரணம் கடந்த 10 ஆண்டு ஆட்சியில் இருந்த அதிமுகதான்.

குறிப்பாக ஜெயலலிதா 2014ல் முதல்வர் பொறுப்பிலிருந்து விலகிய பிறகுதான் இந்த சரிவு ஆரம்பித்தது. இந்த சரிவு கரோனாவுக்கு முன்பே மிகவும் அதிகமாகிவிட்டது. 201819 மற்றும் 201920 இல் மொத்த மாநில வருமானம் வெறும் 800 கோடி ரூபாய்தான். ஒரு வருடம் ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 741, மற்றொரு வருடம் ஒரு லட்சத்து 74,525. வெறும் 800 கோடி ரூபாய்தான் ஓர் ஆண்டுக்கும் இன்னொரு ஆண்டுக்கும் கரோனா இல்லாத காலத்தில் வருமானத்தைக் கூட்டியிருக்கிறார்கள். இதிலிருந்து எவ்வளவு மோசமான நிதிநிலையென்று இதன்மூலம் அறிய முடிகிறது. அதற்கு காரணம் மேலாண்மை குறைபாடு. திமுக தலைவர் கருணாநிதியின் ஆட்சி 2011ல் முடியும்போது, மொத்தக் கடன்தொகை உற்பத்தியில் 17.33 சதவீதம். இதுபொறுப்புள்ள நிதி மேலாண்மை சட்டம் வந்தபோது 28, 29 ஆக இருந்தது. இது படிப்படியாக 17.33 சதவீதமாக குறைக்கப்பட்டது.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தபின்னர் அவர் இன்னும் குறைத்தார். அதாவது 15.55 வரை குறைந்தது. ஆனால், ஜெயலலிதாவின் கை ஆட்சியிலிருந்து எப்போது நகர்ந்ததோ, 15.55 சதவீதத்தில் இருந்து கரோனா வருவதற்கு முன்னரே, 22 சதவீதத்திற்கு இவர்களது திறமையின்மையினால், தவறான செயலினால், கடன் உற்பத்தியில் 22 சதவீதத்திற்கு மேல் ஏறிவிட்டது.இவையெல்லாம் கரோனா என்ற சொல்லை நாம் கேட்பதற்கு முன் நடந்த செயல். அதன்பின் கரோனா வந்து 22 சதவீதம் 25 சதவீதமாகி, இப்போது 25.84 சதவீதமாக இருக்கிறது.

இதை நாங்கள் படிப்படியாக குறைப்போம், அது எங்களுடைய கடமை, எங்களுடைய நம்பிக்கை.202021 அப்போதைய அதிமுக அரசு திட்டமிட்டது 2 லட்சத்து 19 ஆயிரம் கோடி. ஆனால் இறுதியாக முடிந்தது 1 லட்சத்து 74 ஆயிரம் கோடி. 45 ஆயிரம் கோடி வருமானத்தை இழந்து, இதனால் திட்டமிட்ட வெறும் 21 ஆயிரம் கோடி வருவாய் பற்றாக்குறையை 62 கோடியாக கிட்டத்தட்ட 3 மடங்கு அதிகரித்து நிதிப் பற்றாக்குறையை 83 ஆயிரம் கோடியாக அதிகரித்தனர். இதுவரை இருக்கும் பெரிய சாதனையாகும்.திமுக ஆட்சிக்கு வந்தபின்னர், கரோனா இரண்டாவது அலை. ஆக்சிஜன் இன்று இருக்குமா, நாளை இருக்குமா பதற்றமான சூழல். எத்தனையோ புதிய மருத்துவ வசதிகள் உருவாக்கப்பட்டது. இவையெல்லாம் தாண்டி, அதிமுக ஆட்சியில் போட்ட திட்டமான 2 லட்சத்து 19 ஆயிரம் கோடியிலிருந்து வெறும் 16 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே குறைவாக, 2 லட்சத்து 3 ஆயிரம் கோடி 877 வருமானம் இங்கே பெறப்பட்டோம்.

அரசின் சீரிய முயற்சியால், ஒரு ஆண்டில் 16 ஆயிரம் கோடி மட்டுமே திமுக ஆட்சியில் சரிந்தது. அதிமுக ஆட்சியில் 45 ஆயிரம் கோடியை சரியவிட்டனர்.கரோனா இரண்டாவது அலை, மூன்றாவது அலை, வெள்ளம் என பல பேரிடர்கள் வந்தபோதும் திமுக ஆட்சியில் நிதிநிலையை சரியவிடவில்லை. புதிதாக 20 ஆயிரம் கோடி செலவு செய்து, கடன் தள்ளுபடிக்கு, குடும்பங்களுக்கு 4 ஆயிரும் ரூபாய் உள்ளிட்ட பணிகளுக்கு செலவிட்டு, அதிமுக ஆட்சியில் போடப்பட்டிருந்த வருவாய் பற்றாக்குறைக்கு குறைவாக, 2 ஆயிரம் கோடியாக கொண்டு வந்து நிதிப்பற்றாக்குறையை குறைத்து, அவர்கள் போட்டிருந்த கடன் மதிப்பீட்டில் 14 ஆயிரம் கோடி குறைத்து இந்த கடனை முடித்து வைத்திருக்கிறோம்.


எனவே, யாராவது இதுகுறித்து பேச வேண்டும் என்றால், ஓ.பன்னீர்செல்வம் எத்தனையோ கருத்து கூறினார். அவருக்கு நான் ஒன்றை கூறுகிறேன், நான் வகிக்கும் இந்த பொறுப்பில் அவர் இந்த பதவியில் மூத்தவர் என்ற அடிப்படையிலும், எங்கள் இருவருக்கும் குடும்ப ரீதியாக உறவு உள்ளது இருந்தாலும்,தனிப்பட்ட முறையில் ஒரு கோரிக்கை வைக்கிறேன். நேற்று தவறான வாதம் செய்தது, ஒருநாள் முன்னாள் நிதியமைச்சருக்கு அழகு இல்லை. சரியான கருத்தைப் பேசுங்கள்" என்று அவர் கூறியுள்ளார்.

# கேப்டன் பொறுப்பில் இருந்து தோனி விலகல்: சிஎஸ்கே அணியின் புதிய கேப்டனாக ரவீந்திர ஜடேஜா அறிவிப்பு

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டன் பொறுப்பை ரவீந்திர ஜடேஜா ஏற்கவுள்ளார். ஐபிஎல் ஆரம்பித்த முதல் சீசனில் இருந்து மகேந்திர சிங் தோனி கேப்டனாக செயல்பட்ட வந்த நிலையில், தற்போது இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "மகேந்திர சிங் தோனி கேப்டன் பொறுப்பை ஒப்படைக்க முடிவெடுத்ததுடன், அவரே ரவீந்திர ஜடேஜாவை கேப்டன் பொறுப்புக்கு தேர்வு செய்துள்ளார். 2012 முதல் சென்னை அணியின் ஒருங்கிணைந்த அங்கமாக இருந்து வரும் ஜடேஜா, சென்னை அணியை வழிநடத்தும் மூன்றாவது வீரராக இருப்பார்.

அதேநேரம் இந்த சீசனிலும் அதற்கு பிறகும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக தோனி தொடர்ந்து விளையாடுவார்"




என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளை மறுநாள் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, கொல்கத்தா அணியை முதல் ஆட்டத்தில் எதிர்கொள்கிறது. அதற்கு முன்பாக இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

முன்னதாக, சில மணிநேரங்கள் முன்பு ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனலில் பேசிய இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சுனில் கவாஸ்கர், தோனி கேப்டனிஷிப்பில் இருந்து விலக இருப்பது பற்றி பேசியிருந்தார்.அதில், "இந்த வருடம் ஐபிஎல் தொடரில் தோனி ஒருசில ஆட்டங்களில் மட்டுமே விளையாட முடிவு செய்தால், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டன் பதவியை ரவீந்திர ஜடேஜா ஏற்கத் தயாராக இருப்பார்.

கடந்த சில ஆண்டுகளாக ரவீந்திர ஜடேஜா ஒரு வீரராக முதிர்ச்சியடைந்த விதம் மற்றும் சூழ்நிலைகளை சமாளிக்கும் விதம் அருமையாக மேம்பட்டுள்ளது. எனவே, தோனி ஓய்வு எடுக்க முடிவு செய்து, கேப்டன் பதவியை ஜடேஜாவிடம் ஒப்படைக்கப்பட்டாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன்" என்று தெரிவித்தார். அதன்படி, அவர் பேசிய சில மணிநேரங்களில் கேப்டன் மாற்றப்பட்ட அறிவிப்பு வெளியாகியுள்ளது.



# பிரதமரின் குடநாட்டு விஜயமும் கொந்தளிக்கும் உறவுகளும்

**- திருமலைநவம்**

**பி**ரதமர் மஹிந்தராஜபக்ஷவின் குடாநாட்டுக்கான திக் விஜயம் குடா நாட்டைகொந்தளிப்படைய வைத்திருப்பதுடன் விஜயத்தின் பாது காப்பு கெடுபிடியால் காணமால் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார் தாக்கப்பட்டதும் அவமதிக்கப்பட்டதுமான சம்பவமானது குடாநாட்டை மாத்திரமன்றி தமிழ்த்தேசியப்பரப்பையே கோபம் கொள்ள வைத்திருக்கிறது. இன்றைய ஆட்சியாளரின் அராஜகப்போக்குப்பற்றிய தவறான எண்ண அலைகளை யாழ் மக்களுக்கு மீண்டும் இச்சம்பவம் பதிய வைத்துள்ளது.

பிரதமர் என்பவர் ஒரு நாட்டின் தலைவர் அவரை வரவேற்பதும் புறக்கணிப்பதும் மக்களின் அபிப்பிரயம் சார்ந்த ஜனநாக உரிமை. பிரதமரின் யாழ் விஜயத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஜனநாக முறையில் எதிர்ப்பைக்காட்ட முயற்சி செய்திருக்கிறார்கள். இந்த விஜயத்தின்போது வன்னியிலிருந்து வந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க முல்லைத்தீவு மாவட்ட தலைவி ஈஸ்வரி மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர் ஜெனிற்றா ஆகியோர் தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவமானது வட கிழக்கு வாழ் மக்களை கவலைபட வைத்திருப்பதுடன் ஆத்திரம் அடையவும் செய்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கடந்த சனி ஞாயிறு ஆகிய இருநாட்களும் (19.3.2022-20.3.2022) வரலாற்று புகழ் கொண்ட நயினாதீவு நாகபூசணி ஆலயம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார். யாழ் நல்லூர் முருகன் ஆலயத்துக்கு வழிபாட்டுக்கு செல்லவிருந்த பிரதமர் நல்லூர் ஆலயத்துக்க முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது என்று கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்தே அதை தவிர்க்கும் முகமாக மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆலய வழிபாட்டை தடுக்கும் அளவுக்கு குடநாட்டு மக்கள் அநாகரிம் கொண்டவர்களாக எப்போதும் அவர்கள் நடந்து கொண்டதாக தெரியவில்லை.

இதேவேளை பிரதமர் யாழ் நாகவிகாரை வழிபாட்டிலும் பங்கு கொண்டதோடு உரையும் ஆற்றியுள்ளார். சிலசெய்திகளின் பிரகாரம் சுண்ணாகப்பகுதியில் விகாரையொன்றுக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்திலும் கலந்து கொள்ளவுள்ளார் என்ற தகவலும் பெரிதாக பேசப்பட்டுள்ளது. இதன் பின்னணியிலையே பிரதமரின் யாழ் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர். அதன் எதிரொலியாகவே மட்டுவிலில் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக மட்டுவில் கிராமத்தில் அமைக்கப்பட்ட பொருளாதார நிலையத்தை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பதற்காக பிரதமர் (20.3.2022) ஞாயிற்றுக்கிழமை வருகைதந்தபோது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உறவுகள் எதிர்ப்பு போராட்டத்தை நடத்தியுள்ளனர். அப்போராட்டத்தில் கலந்து கொள்ள முல்லைத்திவு மாவட்டத்திலிருந்து வந்தவர்களை மட்டுவில் அம்மன் ஆலயத்துக்கு அருகில் வைத்து பொலீசார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பொலீசாரின் தடுப்பையும் மீறி உறவுகள் வீதியில் புரண்டு அழுது கத்தி தமது எதிர்ப்பை காட்டியதோடு பிரதமரை வரவேற்கும் பதாதைகளை கிழித்தும் எரித்தும் தமது எதிர்ப்பை காட்டியுள்ளனர். இந்த கள நிலையால் முல்லைத்திவிலிருந்து வருகை தந்திருந்த முல்லைத்திவு மாவட்ட தலைவி ஈஸ்வரி மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர் ஜெனிற்றா ஆகியோர் சிறிய கயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த அசம்பாவிதங்கள் யாழ் குடநாட்டை நிலை குலைய வைத்திருப்பதோடு யாழ்ப்பாணத்தில் பதட்ட நிலையையும் உருவாக்கியுள்ளது.

இதே வேளை மட்டுவிலில் இடம் பெற்ற தாய்மார் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தாய்மார்களுடன் இணைந்து ஒரு சில உள்ளுர் தலைவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். இதனால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தலைவர் தியாகராஜா நிரோஷ் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செல்வரட்ணம் மயூரன் ஆகியோர் பதாதைகள் எரிக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்வதற்காக சாவகச்சேரி பொலீசாரால் இருவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

யுத்தத்தினால் தங்களுடைய பிள்ளைகளையும் கணவன்மாரையும் சகோதரர்களையும் உறவுகளையும் பறிகொடுத்த மக்களை கண்மூடித்தனமாக மிலேச்ச முறைகொண்டு தாக்கியது எந்தளவுக்கு ஜனநாக முறைகொண்ட செயல்? இலங்கை நாட்டில் எங்கே ஜனநாயகம் இருக்கிறது.

“வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மாரை தாக்குவதற்காகவா பிரதமர் யாழ் வந்தார்? வலிந்து காணாமல் ஆக்கனப்பட்டவர்களின் உறவினர்கள் ஜனநாயக ரீதியில் நீதி கேட்டு போராட முயற்சித்தபோது அவர்களை வழிமறித்து பஸ்ஸிலிருந்து இறங்கவிடாமல் அச்சுறுத்தி தாக்கிய சம்பவங்கள் ஆட்சியாளர்களின் அராஜகத்தை காட்டுகிறதென பலரும் தமது கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டமானது தொடர்கதையைப்போல் பலவருடங்களாக தொடர்ந்து இடம் பெற்றுவரும் ஒரு ஜனநாகவழிப்போராட்டமாகும். ஆயுதமின்றி ஆர்ப்பாட்டமின்றி அகிம்ஷை வழிமுறை தழுவிய போராட்டங்களையே அவர்கள் நடாத்தி வருகிறார்கள்.

இறுதி யுத்தத்தின்போதும் அதன்பின்னரும் காணாமல் போன பல்லாயிரக்கணக்கான உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி அவர்களின் உறவினர்கள் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வடகிழக்கில் பல போராட்டங்களையும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்திவருகிறார்கள். இது அவர்களின் ஜனநாயக உரிமையாகவே எண்ணி மேற்கொண்டுவருகிறார்கள்.

கொழும்பு உட்பட குறிப்பாக வட கிழக்குப்பிராந்தியங்களில் பெருந் தொகையானோர் கைது செய்யப்பட்டும் கடத்திச் செல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர். வெள்ளைவானில் ஏற்றிச் செல்லப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். ஊதாரணமாக கொழும்பு தெஹிவளையில் வைத்து கடத்தப்பட்ட 5 மாணவர்கள் உட்பட 11 பேருக்கும் இதுவரை என்ன நடந்தது என்ற விசாரணை முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை. ஏலவே இறுதி யுத்தத்தில் சரண் அடைந்தவர்கள் மற்றும் இராணுவத்தினரிடம் உறவினர்களால் நேரடியாகவே கையளிக்கப்பட்டவர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர். இவையெல்லாம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் நடந்த கொடூரங்கள். இவற்றை உலகுக்கு எடுத்துக்காட்டவே அவருடைய வருகையை இலக்குவைத்து இந்த போராட்டங்களை உறவுகளாகிய நாம் மேற்கொண்டு வருகிறோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இ க ் க ா ல ப ் ப கு த ி ய ி லை ல யே பல்லாயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்ற பாரிய குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகிறன. எனவேதான் இந்த போராட்டம் தொடர்பாக ஒரு சங்கலித்தொடரான வரலாறு காணப்படுகிறது என்பது வெளிப்படையாக எடுத்துக்காட்டப்படுகிற விடயம்.

உ ண் ணா வி ர த ப் போ ரா ட் ட ங் க ள் , சுழற்சிமுறை உணவு தவிர்ப்புபோராட்டம், தொடர் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என பல போராட்டங்களை நடாத்தி இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் தமது எதிர்ப்பை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வெளிப்படுத்தி வந்துள்ளனர். இந்த போராட்டங்கள் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட காலத்திலிருந்து இடம் பெற்றுவருகின்றன.

காணமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஐக்கியநாடுகள் மனிதவுரிபமைப்பேரவையில் 2012 ஆம் ஆண்டிலிருந்து பல தீர்மானங்கள் முன் கொண்டுவரப்பட்டன. உதாரணமாக 2017 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் மனிதவுரிமைப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஐந்து பிரேரணைகளில் ஒன்றாக இந்த விவகாரம் காணப்பட்டது. இப்பரச்சனைக்கு விரைவான தீர்வு காணப்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது.

முன்னாள் மனிதவுரிமைப்பேரவை ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளையவர்கள் இலங்கைக்கு இப்பிரச்சனை தொடர்பில் கேட்டறியவும் ஆராயவும் வந்தபோது காணாமல்போனவர்களின் உறவுகள் இப்பிரச்சனை தொடர்பாக எடுத்துக்கூறுவதற்க அவரை சந்திப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோது அது திட்டமிட்ட முறையில் அரசாங்கத்தால் தடுக்கப்பட்டது. இருந்தபோதும் உறவுகள் பிள்ளையவர்களை சந்தித்து தங்கள் முறைப்பாடுகளை முன்வைத்தார்கள். அதுவுமன்றி ஆணையாளர் அவர்கள் இரகசியமான முறையில் திருகோணமலை மன்னார் முல்லைத்தீவு பொன்ற பிரதேசங்களிலுள்ள பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து விடயங்களை கேட்டறிந்து கொண்ட சம்பவங்களும் இடம் பெற்றள்ளன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இப்பிரச்சனைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்குவேண்டுமென்ற கோரிக்கையை உறவுகள பல சந்தர்ப்பங்களில் முன்வைத்ததோடு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டுமென்ற கொரிக்கையையும் பல சந்தர்ப்பங்களில் முன்மொழிந்து வந்திருக்கிறார்கள்.

2010 ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து மஹிந்தராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை நடாத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த அவர்களால் பரணகம ஆணைக்குழுவும் பின்னர் ஜனாதிபதி ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது.

பரணகம ஆணைக்குழு வட கிழக்கில் பல்வேறு அமர்வுகளை நடாத்தி காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக விசாரணைகளை நடத்தியபோது சுமார் 19 ஆயிரத்துக்கு மேற்பட்ட எழுத்து மூல முறைப்பாடுகளை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டது. ஆனால் நடந்தது என்ன ஆணைக்குழுவால் குறித்தவிவகாரத்துக்கு தீர்வு காண முடியவில்லை. இதேபோன்றே நல்லிணக்கக்குழு மற்றும் காணாமல் போனோாக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவை மஹிந்த நியமித்திருந்தார். இக்குழு நாடு தழுவிய விசாரணைகளை மேற்கொண்டபோதும் இவர்களாலும் காணாமல்போனோர் தொடர்பாக தீர்வை பெற்றுத்தரமுடியவில்லை. இவ்வாறானதொரு சூழ் நிலையில்தான் காணாமல் போனோரின் உறவுகள் தீவிரமாக போராட்டங்களை நடத்த முற்பட்டார்கள்.

2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்திலாவது தங்களுக்கு நீதி கிடைக்கும் தீர்வைப்பெற முடியுமென்ற அதீத நம்பிக்கை கொண்டவர்களாக உறவுகள் காணப்பட்டார்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் அதற்கான துணையாளர்களும் மைத்திரிபாலசிறிசேன தலைமையிலான நல்லாட்சிக்கு ஆதரவு வழங்கிவந்த நிலையில் தங்கள் நீண்டகாலப்பிரச்சனைக்க விரைவில் தீர்வ கிடைத்துவிடும் என்ற முழு நம்பிக்கை இவர்களை சமதான நிலை அடைய வைத்தது. ஆனால் நாம் ஒன்று நினைக்க ஆட்சியாளர்கள் ஒன்று நினைக்கின்றார்கள் என்பதுபோல் எல்லாம் மாறுநிலையாகவே நடந்து கொண்டிருந்தது.

நல்லாட்சி உருவாக்கப்பட்ட காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஒரு நிரந்தர அலுவலகத்தை அமைக்க சட்டமொன்று பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இவ்வலுவலகத்தை திறக்காமல் அரசாங்கம் இழுத்தடிப்பு செய்தது.

2017 ஆம் ஆண்டு யூலை மாதம் அளவில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். யாழுக்கு விஜயம் செய்தவேளை உறவுகள் அவரை சந்தித்து தடுப்பு முகாமில் உள்ள காணாமல் போனவர்கள் தொடர்பான பெயர் விபரங்களை வெளியிடவேண்டும் காணாமல் போனோர் தொடர்பான உரிய விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

ஜனாதிபதி இதற்கு பதில் அளிக்கையில் “இது தொடர்பில் பாது காப்பு சபை கூட்டத்தில் கலந்துரையாடி தடுத்துவைக்கப்பட்டவர்களின் பெயர்விபரங்களை வெளியிட உத்தரவிடவுள்ளதாக வாக்குறுதியொன்றை நல்கியிருந்தார். முடிவு எப்படி இருந்தது. பாதுகாப்பு படையினர் அவ்வாறு யாரும் தடுப்பு முகாமில் இல்லையென படையினர் கூறுவதாக முடிவு அவரால் தெரிவிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டளவில் நல்லாட்சி காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அம்மையார் அதிர்ச்சியான தகவல் ஒன்றை வெளியிட்டிருந்தார். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உண்மையில் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா? என்பதை கண்டறியவேண்டும். எனக்குத் தெரிந்தவரையில் அப்படி எவரையும் யாரும் முகாங்களில் மறைத்துவைத்திருக்கவில்லை. முன்னைய ஆட்சியின்போது கடமையாற்றிய இராணுவத்தின் பழக்கத்துக்கு ஏற்ப அவர்கள் கூட்டிச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் இவை இன்னும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை என்ற தனது சந்தேகத்தை அம்மையார் வெளிப்படுத்தியிருந்தார்.

**(தொடர்ச்சி 24ம் பக்கம்)**



# Mayor Patrick Brown

FOR LEADER OF THE
CONSERVATIVE PARTY OF CANADA

பிராம்டன் நகரபிதா பற்றிக் பிறவுண் அவர்கள் தமிழ் மக்களின் உறுதியான நண்பர். இவர் ஈழத் தமிழ் மக்களிற்கு எதிராக இழைக்கப்படும் தமிழின அழிப்பிற்கு நீதிவேண்டி தொடர்ச்சியாக குரல் கொடுப்பவர். அது மட்டுமல்லாது கனடியத் தமிழ் மக்களின் தேவைகளுக்கும் குரல் கொடுப்பவரும் ஆவார்.

SCAN TO SUPPORT!

PROVEN LEADERSHIP
TRUSTED FRIEND

Authorized by the CFO of the Patrick Brown Conservative Leadership Campaign

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGREEMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com






என்றுமே மாறாத மதுரைச் சுவையுடன் உணவு படைக்கின்றோம்







# Taste of MADURAI

Taste Of Madurai

Telephone: (416) 332-8000

திறப்பு விழாவையொட்டி விசேட விலைகளில்
சைவ, அசைவ உணவுகளைப் ஆடர் செய்து வாங்கிச் செல்லுங்கள்



## திறப்பு விழா ஸ்பெஷல்

**Madurai Killi Parotta (2 Pcs) $9.99**

மேலும், நாவுக்கு விருந்தாகும் பல வகை உணவுகள்: தோசை வகைகள், பரோட்டா வகைகள் அத்துடன் மதுரைச் சாப்பாடு பல கறிகளுடன், சூப் வகைகள். இன்னும் பல...

AVAILABLE DOORDASH Uber Eats SKIP THE DISHES













3500 McNicoll Ave. Unit-7
Scarborough, ON
(Markham / McNicoll)

Telephone: (416) 332-8000

Email: mahendran1980@hotmail.com

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca



STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோ கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# குவேனியின் சாபம் தொடர்ந்து இராசபக்ச குடும்பத்தைத் துரத்துகிறது!

மகா கவி பாரதியாரின் அற்புதமான பாட்டுக்களில் ஒன்று கண்ணன் பாட்டு. அதில் பத்தாவது பாட்டு கண்ணன் என் காதலன் ஆகும்.

*நாலு வயித்தியரும் - இனிமேல்*
*நம்புதற் கில்லை யென்றார்*
*பாலத்துச் சோசியனும் - கிரகம்*
*படுத்து மென்று விட்டான். ...*

இந்தப் பாடலில் பாரதியார் கண்ணனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் உருவகித்து காதலர்க்குப் பிரிவால் பிரிவினால் ஏற்படும் வேதனையை வெளிப்படுத்துகிறார்.

நாலு வயித்தியரும் - இனிமேல் நம்புதற் கில்லை யென்றார் பாலத்துச் சோசியனும் - கிரகம் படுத்து மென்று விட்டான் என்பது கடனில் மூழ்கி தத்தளிக்கும் இன்றைய இலங்கைக்குப் பொருந்தும். இலங்கை ஒரு தோற்றுப் போன நாடு, ஒண்டாடியாகிவிட்ட நாடு, உருப்படாத நாடு, தீவிர மருத்தவப் பிரிவில் **(ICU)** மூச்சுவிடத் திணறிக் கொண்டிருக்கும் நாடு எனப் பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆனால் நாட்டை ஆளும் இராசபக்ச குடும்பத்தினர், குறிப்பாக சனாதிபதி கோட்டாபய இராசபக்ச நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் நாட்டின் இன்றைய பரிதாபமான நிலைக்குத் தான் பொறுப்பல்ல என்றும் அரசாங்கத்தின் கைகளையும் மீறிக் காரியங்கள் நடப்பதாகச் சொல்கிறார். அவர் தனது உரையில் :



(1) வருடாந்த கடன் தவணை மற்றும் பிணை முறி கொடுப்பனவுகளை செலுத்தும் முறைமை தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அதனோடு இணைந்து செயற்படப் போகிறோம்.

(2) மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கான அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு தொடர்பில் நாம் அறிந்துள்ளோம். எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சார துண்டிப்பு தொடர்பிலும் நன்கு அறிந்துள்ளேன்.

(3) கடந்த 2 மாதங்களில் மக்கள் எதிர்நோக்கிய சிக்கல்கள் தொடர்பில் வருத்தமடைகின்றேன். அது தொடர்பில் செய்ய முடியுமான அனைத்தையும் நாம் செய்த போதிலும், எமது கட்டுப்பாட்டை மீறி நிலைமை மோசமடைந்தள்ளது. நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கான பொறுப்பை நான் ஏற்பேன்.

(4) மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்குக் கடுமையான தீர்மானங்களை மேற்கொள்வேன். அதற்கு உதவுவதற்காக தேசிய பொருளாதாரப் பேரவையும் அதற்கு ஆதரவு வழங்குவதற்காக ஆலோசனை சபையும் நியமிக்கப்பட்டுள்ளது.

(5) எனவே, மக்களுக்காக நாம் மேற்கொள்ளும் தீர்மானங்கள்மீது நம்பிக்கை வைக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுகிறேன்.

(6) தற்போதைய நெருக்கடி நிலை இலங்கைக்கு மாத்திரம் ஏற்படவில்லை. முழு உலகமும் எதிர்பார்க்காத அளவு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளன.

கோட்டாபய இராசபக்ச சனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. மகிந்த



இராசபக்ச பிரதமராகப் பதவியேற்றும் இரண்: ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இந்த இரண்டாண்டு காலத்தில் இராசபக்ச அரசு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி இருக்கலாம். அது செய்யப்படவில்லை. மாறாக இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்துக்குப் பின்னர் வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இராசபக்ச அரசு 2019 இல் பதவிக்கு வந்தபோது வெளிநாட்டு நாணய இருப்பு அ.டெலர் 7.5 பில்லியனாக இருந்தது. இப்போது அது அ.டொலர் 2.5 பில்லியனாக் குறைந்துவிட்டது. வெளிநாட்டில் இருந்து எரிபொருளோடு கொழும்புத்துறைமுகத்துக்குக் கப்பல்கள் வருகின்றன. ஆனால் அந்த எரிபொருளுக்குக் கொடுக்க வேண்டிய கொடுப்பனவு கொடுக்கப்படாததால் எரிபொருளை இறக்க முடியாது இருக்கிறது. காரணம் கொடுப்பதற்கு அரசிடம் அ.டொலர் கையிருப்பு இல்லை. இதனால் வாகன எரிபொருள், சமையல் எரிபொருள், டீசல் ஆகியவற்றுக்கு நாடு முழுதும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் விவசாயிகள், மீனவர்கள், போக்குவரத்து, கட்டுமானம் போன்றவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றின் எதிரொலியாக மக்கள் சாலைகளில் இறங்கி அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடத்துகிறார்கள்.

"தற்போதைய நெருக்கடி நிலை இலங்கைக்கு மாத்திரம் ஏற்படவில்லை. முழு உலகமும் எதிர்பார்க்காத அளவு சிக்கலை எதிர்நோக்கியுள்ளன. கோவிட் தொற்று, உக்கிரேன் போர் இரண்டும் பொருளாதாரத்தை பாதித்துவிட்டது" என்கிறார். இவை நொண்டிச் சாட்டுக்கள். கோவிட் தொற்றால் முழுப்பொருளாதாரமும் படுத்துவிட்டது என்பது உண்மையல்ல. சுற்றுலாத்துறை மட்டும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சனாதிபதி இராசபக்ச சடுதியாக செயற்கை இரசாயன பசளை இறக்குமதிக்கு தடை விதித்தது மகாபோக நெல்விளைச்சலைப் பாதிக்கு மேலாகக் குறைத்துவிட்டது. இயற்கை விவசாயம் வரவேற்க வேண்டிய மாற்றம்தான். ஆனால் அந்த மாற்றத்துக்கு விவசாயிகளுக்குக் கால அவகாசம் அளித்திருக்க வேண்டும்.படிப்படியாக நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும்.

சனாதிபதி கோட்டபாய இராசபக்ச ஆற்றிய உரையினை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமான ஹர்ஷ டி சில்வா காரசாரமான கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

நெருக்கடி நிலையை ஏற்கனவே அடையாளம் கண்டுவிட்டதாகக் கூறுவது உண்மையானல் அதைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏன் அரசாங்கம் எடுக்கவில்லை? இந்த நெருக்கடியை முன்பே அடையாளம் கண்டதாகக் கூறுவது சரியானால் அரசியல் பிரபலத்தைப் பெறுவதற்காக பாரிய தொழில் நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்ட மதிப்புக் கூட்டு வரியை 15 விழுக்காட்டில் இருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. இதனால் ரூபா 600 பில்லியன் வரி வருவாய் ஏன் இழந்தீர்கள்?

உலகிலேயே மிகக் குறைந்த அரசாங்க வருமானம் கொண்ட நாடான இலங்கையில் அரச வருமானம் பாரியளவில் வீழ்ச்சியடைந்தமையே நெருக்கடியின் தொடக்கம். ரூபாய் மதிப்பு வீழ்ச்சியால் ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும், அதன் மூலம் வர்த்தக பற்றாக்குறையைக் குறைக்கலாம் என்றால் - சனாதிபதி கோட்டாபய முன்கூட்டியே அறிந்திருந்தால் - உருபாயின் மதிப்பை செயற்கையாக கட்டுப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கியது ஏன்? இதன் விளைவாக நாடு சுமார் 4 பில்லியன் அ.டொலர் வருவாயை இழந்துள்ளது. ரூபாயின் பெறுமதியைக் பாதுகாப்பதற்காக சுமார் 1.5 பில்லியன் டொலர்கள் பாழடிக்கப்பட்டுவிட்டது என்பதே இதன் பொருள். மேலும், உரூபாயின் செயற்கையான கட்டுப்பாட்டின் காரணமாக நாடு அண்ணளவாக 2.5 பில்லியன் அ. டொலர் பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தை இழந்துள்ளது. அதனால் வெளிநாட்டு நாணய நெருக்கடி நீடிக்கிறது என்பதுதான் உண்மை.

இந்த நேரத்தில் நாட்டிற்காக மக்கள் மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துமாறு சனாதிபதி கோட்டாபய கேட்டுள்ளார். மக்கள் எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு கூட எரிபொருளை கண்டுபிடிக்க முடியவில்லை. மறுபுறம், நெருப்பு விலையில் எரிபொருள் வாங்கும் மக்கள் அதனை வீணடிப்பதாக நினைப்பது தவறு.

"முழுமையான நாடு என்ற அடிப்படையில் எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்தினால் பொருளாதாரம் சரிந்து விடும். கடன்களை மீளச் செலுத்துவதற்கான வழிமுறையை உருவாக்க சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல் தொடக்கப்பட்டுள்ளதாகவும் நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். அது நல்ல விடயம்தான். ஆனால் கேள்வி என்னவென்றால், நெருக்கடியை முன்கூட்டியே அறிந்திருந்தால் பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த ஏன் இவ்வளவு கால தாமதம்?

பொருளாதார நிபுணர்கள் 18 மாதங்களுக்கு முன்னரே நாடு இவ்வாறானதொரு நெருக்கடிக்குள் தள்ளப்படும் எனவும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து தீர்வுகள் காணப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தனர். இன்று நீங்கள் எடுக்கப்போகும் தீர்மானம் அன்றே எடுக்கப்பட்டிருந்தால், மக்கள் இப்படி ஒரு நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்காது சனாதிபதி அவர்களே" என ஹர்ஷ டி சில்வா பதிவிட்டுள்ளார்.

**- கனடா நக்கீரன்**

என்னைக் கேட்டால் இலங்கையின் இன்றைய ஓட்டாண்டி நிலைக்கான அத்திவாரம் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா காலம் முதல் தொடர்ந்து வருகிறது. அவருக்குப் பின்வந்தவர்கள் சிங்களம் மட்டும், பவுத்தம் மட்டும், ஒரேநாடு ஒரே சட்டம் என்ற முழக்கங்களை கையில் எடுத்து ஆட்சியைப் பிடித்தார்கள்.

டி.எஸ். சேனநாயக்க அவர்கள்தான் தமிழ்ப் பிரதிநிதிகளுக்குப் பொய்யான வாக்குறுதிகளை அளித்து - அவர்களை நம்பவைத்து - பின்னர் அவர்களது கழுத்தை அறுத்தார். சோல்பரி அரசியலமைப்பின் மூலம் ஒற்றையாட்சிக்கு அடிகோலினார். அரசியல் அதிகாரம் என்றென்றும் பெரும்பான்மை சிங்களவர்களது கையில் இருப்பதற்கு அவர் வழிகோலினார்.

1945 ஒக்தோபரில் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் வெள்ளை அறிக்கையில் உள்ளடக்கிய சோல்பரி அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வதாக சட்டசபையில் ஒருமனதாக வாக்களித்ததைத் தொடர்ந்து டி.எஸ். சேனநாயக்கா தமிழ் மற்றும் பிற சிறுபான்மை சமூகங்களுக்கு பின்வரும் உறுதியான வாக்குறுதியை அளித்தார்.

"நீங்கள் இலண்டனில் இருந்து ஆளப்படுவதை விரும்புகிறீர்களா அல்லது, இலங்கை, இலங்கையரால் ஆளப்படுவதை விரும்புகிறீர்களா? இலங்கை தேசிய காங்கிரஸ் சார்பாகவும் (1919 இல் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களால் உருவாக்கப்பட்டது) மற்றும் எனது சார்பாகவும், சிறுபான்மை சமூகங்களுக்கு ஒரு சுதந்திர இலங்கையில் எங்களினால் (சிங்களப் பெரும்பான்மையினரால்) உங்களுக்குத் தீங்கு எதுவும் ஏற்படும் என்ற பயம் தேவையில்லை என்று நான் நேர்மையோடு உறுதியளிக்கிறேன்."

இலங்கை சுதந்திரம் பெற்ற உடன்படிக்கையின் மை காய்வதற்கு முன்னரே டி.எஸ். சேனநாயக்கா தமிழர்களது கழுத்துக்கு கத்தி வைக்கத் தொடங்கினார். இலங்கைக் குடியுரிமைச் சட்டம் இல. 18, 20 ஒகஸ்ட் 1948 இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 1948 நொவெம்பர் 15 அன்று சட்டமானது. பிரித்தானியாவிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற 285 நாட்களுக்குப் பிறகு 700,000 (11%) இலட்சம் மலையகத் தமிழ்மக்களது குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

குடியுரிமையைப் பறித்த கையோடு மலையக மக்களின் வாக்குரிமையைப் பறிக்க 1949 இல் இலங்கை (நாடாளுமன்றத் தேர்தல்கள்) திருத்த சட்டம் 48 நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் பட்டு நிறைவேற்றப்பட்டது. செப்தெம்பர் 03, 1948 இல் இலக்கம் 48 டி.எஸ். சேனநாயக்காவில் அமைச்சரவையில் தொழில்துறை மற்றும் மீன்வளத்துறை அமைச்சராகப் பதவி வகித்த தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜிஜி பொன்னம்பலம் அதற்கு ஆதரவாக வாக்களித்தார். இந்த சட்ட திருத்தம் குடிமக்கள் மட்டுமே தேர்தல்களில் வாக்களிக்க முடியும் என்று சொல்லியது. இதனால் 1947 இல் நடந்த நாடாளுமன்றத் தோதலில் 7 தொகுதிகளில் வெற்றிபெற்ற மலைநாட்டுத் தமிழர்கள் 1952 இல் இடம் பெற்ற தேர்தலில் ஒரு தொகுதியில்தன்னும் வெல்ல முடியவில்லை.



டி.எஸ். சேனநாயக்கா பிரதமராக இருந்த போதுதான் பட்டிப்பளை (கல் ஓயா) குடியேற்றத்திட்டம், அல்லை - கந்தளாய் போன்ற பாரிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடங்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் 1946 இல் சிங்களவர்களுடைய குடித்தொகை 23,456 (8.4%) ஆக இருந்தது. இது 2012 இல் 354,772 (22.87%) அதிகரித்துவிட்டது. இதே காலப்பகுதியில் தமிழர்களது குடித்தொகை 136,059 (48.75% ) இல் இருந்து 575,936 ஆக உயர்ந்தது ஆனால் விழுக்காடு 37.12% ஆகச் சரிந்துவிட்டது! அடுத்த குடித்தொகைக் கணிப்பீட்டில் இந்த விழுக்காடு மேலும் குறையக் கூடிய சாத்தியம் இருக்கிறது.

1946 இருந்து இலங்கைத் தமிழர் இன, மொழி அடிப்படையில் ஒதுக்கப்பட்டு வருகிறார்கள். அவர்கள் தங்களது பாரம்பரிய வாழ்விடங்களை இழந்து வருகிறார்கள். கிழக்கு மாகாணத்தில் தொடங்கிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் *(தொடர்ச்சி 30ம் பக்கம்)*

(18ம் பக்கத் தொடர்ச்சி)

## பிரதமரின் குடநாட்டு விஜயமும் கொந்தளிக்கும் உறவுகளும்

இதன் எதிரொலியாகவே 2017 ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி வவுனியா மல்லைத்தீவு திருகோணமலை யாழ் ஆகிய இடங்களில் காணமல் போனோரின் உறவுகள் தொடர்ந்தேர்ச்சியான போராட்டங்களை நடத்திவந்தார்கள். இலங்கை அரசாங்கந்தின் இழுத்தடிப்புக்களையும் பாரா முகங்களையும் நாடகமாடுதல்களையும் சர்வதேசத்துக்கு வெளிக்கொண்டுவர வேண்டும் என்பதற்காக கிளிநோச்சி கந்தசாமி ஆலய முன்றலில் 2017 ஆம் ஆண்டு ஆனிமாதமளவில் காணாமல் போனோர் உறவுகள் கவனயீர்ப்பு போரட்மொன்றை 100 நாட்கள் தொடர்ந்தேர்ச்சியாக நடாத்தினார்கள். இப்பேராட்டத்தின்போது பின்வரும் கோரிக்கையை அவர்கள் முன்வைத்தார்கள்.

காணாமல் போனோர் பெயர்பட்டியலை அரசாங்கம் விரைவில் வெளியிடவேண்டும். இரகசிய தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் பெயர் பட்டியல் வெளியிடப்படவேண்டும். அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டவர்களை பார்வையிட அவர்களது உறவினர்களை அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் அவர்களால் முன்வைக்கப்பட்டது.

முடிவில் என்ன நடந்தது நல்லாட்சி அரசாங்கத்தை அலங்கரித்துக்கொண்டிருந்த பொறுப்பான அமைச்சர் ஒருவர் "காணமல்போனவர்கள் பலர் வெளிநாடுகளில் பெயர் மாற்றங்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே காணாமல் போனவர்களின் உறவுகள் போராட்டம் நடத்துவதில் அர்த்தமில்லை" என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார். இறுதி யுத்தத்தில் காணாமல் போனோர் பலர் வெளிநாடுகளில் மாற்றுப் பெயர்களுடன் வாழ்ந்துவருகிறார்கள். சர்வதேச நாடுகள் தங்கள் நாடுகளில் உள்ள தமிழர்களின் பெயர் பட்டியலை வெளியிடவேண்டும் அதன்பின்பே காணாமல் போனோர் பெயர்பட்டியலை தயாரிக்க முடியுமென அமைச்சர் மஹிந்தசமரசிங்க தெரிவித்திருந்தார்.

இவ்வாறு நல்லாட்சி அரசாங்கத்திலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்காத நிலையில் இப்போராட்டங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன என்பது தேசம் அறிந்தவிடயம். இன்றைய அரசாங்கத்தில் இவ்விவகாரம் தொடர்பாக பல்வேறு போராட்டங்கள் தொடர்ந்து இடம் பெற்றுவரும் நிலையில்தான் பிரதமர் மஹிந்தராஜபக்'வின் யாழ் விஜயம் அமைந்திருந்தது.

இந்த விஜயத்தின்போது பிரதமர் கூறிய விடயம் 1970 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு தான் முதல் முதல் விஜயம் செய்திருந்ததாகவும் சுமார் அரை நூற்றாண்டுக்கப்பிறகு யாழ் மக்களை சந்திக்க வந்திருப்பதாகவும் தெரிவித்தார். யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம் பெற்றது. ஜனாதிபதி தேர்தலில் வட கிழக்கில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு 226009 வாக்குக்கள் கிடைக்கப்பெற்றதால் தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவை தோற்கடித்து ஜனாதிபதியாகும் வாய்ப்பை அவர் பெற்றார்.

இவரின் இந்த இவ்வெற்றி தொடர்பில் விடுதலைப்புலிகளின்மீது சிலவிமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது என்பது பொதுவாக பேசப்படும் விடயமாகும். ஐக்கியதேசியக்கட்சியை வெற்றிகொள்ள இடம் அளித்திருப்பார்களேயானால் நிலமைகள் மாறுநிலை பெற்றிருக்கும் நாங்களே நம் தலையில் மண்ணை வாரிப்போட்டுவிட்டோம் என்ற கருத்துக்களும் விமர்சனங்களும் பின் நாளில் பேசப்பட்ட விடயங்களாகும்.

அண்மையில் யாழ் குடாவுக்கு விஜயம் செய்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் யாழ்ப்பாண மக்களுக்கான சில கருத்துக்களை முன்வைத்தது தொடர்பில் இக்கட்டுரையில் பார்க்கவேண்டியது அவசியமாகிறது.

யாழ் நாகவிகாரையில் உரையாற்றிய பிரதமர் அவர்கள் "வடக்கு மக்களை அன்று பாதுகாத்த நாங்கள் இன்று அவர்களை பாதுகாத்து வடக்கு மாகாணத்துக்கான அபிவிருத்திப்பணிகளை துரிதப்படுத்திவருகிறோம். இலங்கையில் வாழ் பல்லின சமூகத்தினர் மத்தியில் வரவாற்றுக்காலம் முதல் நல்லுறவு பேணப்பட்டுள்ளதாகவும் 1983 ஆம் ஆண்டுக்குப்பின்னரான காலப்பகுதியில் இடம் பெற்ற ஒருசில காரணிகளால் 30 வருடகால் சிவில் யுத்தம் தோற்றம் பெற்றது என்று தெரிவித்திருந்த பிரதமர் அவர்கள் மட்டுவிலில் உரையாற்றும் போது உயிர் இழப்புக்களைத்தவிர ஏனைய அனைத்தையும் யாழ் மக்களுக்குவழங்கியுள்ளோம் வடக்கில் 30 வருடமாக மூடிக்கிடந்த இருண்ட யுகத்தை இல்லாது ஆக்கி மக்களின் சுதந்திரத்தையும் உரிமையையும் மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம் என விதந்துரைத்துள்ளார்.

பிரதமரின் இந்தக்கருத்து யாழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா அல்லது ஆமோதிக்கப்படகுிறதா? என்பதற்கு அப்பால் வடகிழக்கு அரசியல் பொருரளாதார சமூக நிலமைகளுக்கு யுத்தத்துக்கிப்பன்னான குறிப்பாக இன்றைய அரசாங்கத்தால் மேற் கொள்ளப்பட்டுவரும் முன்னேற்றகரமான பட்டியல் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தால் அது பூஜ்ஜியத்துக்கு கீழ் உள்ள நிலையையே காட்டுகிறது என்பது எல்லோராலும் வெளிப்படுத்தப்படும் உண்மை. தெற்கின் அபவிருத்திகளும் வாழ்க்கை வளங்களும் வட கிழக்கு மக்கள் அடைந்திருக்கிறார்களா? என்பது வெறும் கேள்விக்குறியாக இருக்கமுடியும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நடாத்திவரும் போராட்டங்களுக்கு கடந்த அரசாங்கங்களினால் எத்தகைய தீர்வு வழங்கப்பட்டுள்ளது.? அண்மையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடாக ஒருலட்சம் வழங்கப்படுமென்று ஒரு அறிவித்தல் வெளிவந்துள்ளது. இதற்கு பதில் தந்த காணாமல் போனவர்களின் உறவுகள்.

எங்களின் உறவுகளான பிள்ளைகள் பேரர்கள் கணவன்மார் சகோதரர்கள் சொந்த பந்தங்களின் இழப்புக்களின் பெறுமதி வெறும் லட்சத்தால் அளவிடமுடியுமா? நாங்கள் தலா 10 லட்சம் அரசாங்கத்துக்கு தருகிறோம் எங்கள் உறவுகளை எங்களிடம் ஒப்படைக்கிறீர்களா? அவர்களுக்கு என்ன நடந்தது என்று கூறுங்கள் என ஒரு எதிர்க்கணையையே ஏவியிருந்தார்கள்.

காணமல் போனோர் தொடர்பில் பட்டியலை தாருங்கள் என்ன நடந்தது என்று கூறுங்கள் கையளித்தவ்களை கொண்டுவாருங்கள் கடத்தப்பட்டவாகள் எங்கேயிருக்கிறார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்துங்கள் உங்களால் முடியாவிட்டால் சர்வதேச விசாணைக்கு கொண்டு செல்லுங்கள் என்று கடந்த பல வருடங்களாக போரடிவரும் உறவுகளின் உணர்வுகளை புரிந்துகொண்டு அரசாங்கமும் அதிகாரிகளும் நடந்துகொள்ளவேண்டும். வெந்த புண்ணில் வேலைப்பாய்சுவதுபோல் நடந்து கொள்ளப்படுமானால் எக்காலத்திலும் ஆட்சியாளர்களால் ஜனநாயகத்தை கட்டி எழுப்ப முடியாத நிலையே காணப்படும். அதுவுமன்றி நல்லிணக்கத்துக்கான கதவு தொடர்ந்து பூட்டப்பட்டேயிருக்கும். என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.



## "இழப்பீடு வேண்டாம் – மக்களின் பசியை போக்குங்கள்" தமிழ் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்

யுத்தத்தின் இறுதியில் சரணடைந்த பின்னர் காணாமல் போன பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் கதி என்ன என்பது பற்றிய உண்மையை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, இறப்பு சான்றிதழ் மற்றும் இழப்பீடு வழங்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிக்கு தொடர்ந்து எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகின்றது.

நாளுக்கு நாள் பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ள நிலையில் காணாமல் போனவர்களுக்கான இழப்பீடு எவ்வாறு வழங்குவது என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழ் உறவுகளால் நிராகரிக்கப்பட்ட நட்டஈடுகளுக்காக செலவிடப்படும் பணத்தை பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடிமக்களின் பசியைப் போக்கப் பயன்படுத்துமாறு மன்னாரில் போரினால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள் வலியுறுத்துகின்றனர்.

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு 100,000 ரூபா நட்டஈடு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ராஜபக்ச கூட்டணி அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகப்பெரும அண்மையில் தெரிவித்திருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் மன்னார் மாவட்டத் தலைவர் மனுவேல் உதய சந்திரன் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, "பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் அரசாங்கம் எமக்கு எவ்வாறு இழப்பீடு வழங்க முடியும்?" என கேள்வி எழுப்பியுள்ளார்.

"அரசாங்கம் உறுதியளித்த 100,000 ரூபாய் இழப்பீட்டை நாங்கள் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம். இழப்பீட்டை பெற்றுக்கொள்ள நாங்கள் 13 ஆண்டுகளாக போராடவில்லை. எங்கள் உறவினர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நட்டஈடு வழங்குவதன் மூலம் தாய்மார்களின் போராட்டத்தை முறியடிக்க அரசாங்கம் முயற்சிப்பதாக மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவர் மனுவேல் உதய சந்திரன் குற்றம் சுமத்துகின்றார்.

"எங்கள் பிள்ளைகளின் பெறுதி 100,000 ரூபாயா?" என அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியபோது, அவர் வடக்கிலும் வன்னியிலும் தாய்மார்களின் கேள்வியை எதிரொலித்தார்.

"தற்போது எங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு பதிலாக, அந்த பணத்தை வைத்து டீசல், பெற்ரோல் மற்றும் அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதோடு, மக்களின் பசியைப் போக்க வேண்டும்".

வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள தாய்மார்கள் ஏற்கனவே அரசாங்கத்தின் குறித்த ஒரு இலட்சம் இழப்பீட்டை நிராகரித்துள்ளனர்.

## திருகோணமலையில் காணிகளை இந்தியாவுக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு

இந்திய நிதியுதவியுடன் திருகோணமலை சம்பூர் சூரிய சக்தி மின் திட்டத்திற்காக மக்களின் காணிகளை கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த சம்பூர் கிராமத்தில் உள்ள சிறுபான்மை தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்தி இந்திய-இலங்கை சோலார் மின் உற்பத்தி மையத்தை அமைக்க வேண்டாம் என ட்ரின்கோ சேவ் அமைப்பின் தலைவர் எஸ்.எச். கிரிஷான் குமார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் திருகோணமலை ஊடகக் கழகத்திற்கு கிழக்கிலிருந்து ஊடகவியலாளர்களை அழைத்த கிரிஷான் குமார், நிலக்கரி மின் திட்டத்திற்காக மக்களின் காணிகளை சுவீகரிக்க 2015 ஆம் ஆண்டு முதல் தயாராகி வருவதாகத் தெரிவித்தார்.

"பொதுமக்களின் எதிர்ப்பால் இந்தத் திட்டத்துக்காக நிலம் கையகப்படுத்துவது தடுக்கப்பட்டது. மீண்டும் இவ்வாறான காணிகள் கையகப்படுத்தப்படுமா என்ற சந்தேகம் சம்பூர் மக்களிடையே தற்போது எழுந்துள்ளது".

பல தசாப்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் சம்பூர் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். சம்பூர் மக்களின் காணிகள் மீளக் கையகப்படுத்தப்படுவதை எதிர்க்கின்றோம் என ட்ரின்கோ சேவ் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மின் கம்பனி, NTPC இந்தியா மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க மார்ச் 11 அன்று கைச்சாத்திடப்பட்டது.



100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் இந்த திட்டத்திற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ், மின்சக்தி அமைச்சர் பவித்ராதேவி வன்னிஆரச்சி, விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக, சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க ஆகியோரது பிரசன்னத்துக்கு மத்தியில் நடைபெற்றது. NTPC சர்வதேச வர்த்தக அபிவிருத்தி பிரிவின் தலைமை அதிகாரி நரிந்தர் மோகன் குப்தா, இலங்கை மின்சார சபையின் தலைவர் M.M.C. பேர்டினான்டோ, TPCL தலைவரும் இலங்கை மின்சார சபையின் உப தலைவருமான என்.எஸ். இலங்கோன் உள்ளிட்டோர் இந்த முத்தரப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அன்றைய தினமே மன்னார் மற்றும் பூநகரியில் 500 மெகாவாட் காற்றாலை மின் நிலையங்களை அமைப்பதற்கு அதானியின் கிரீன் எனர்ஜி நிறுவனத்துடன் நிதி அமைச்சு ஒப்பந்தம் செய்து கொண்டது.



# மஹிந்தவின் யாழ் விஜயம்: எதிர்ப்பு, எரிப்பு மற்றும் ஏமாற்றம்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்)

**வி**டுதலைப் புலிகளை கண்டே அசராத மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது மக்களின் எதிர்ப்பைக் கண்டு அதிர்ந்து போனார். மிகவும் துணிச்சலானவர், யாரைக் கண்டும், எதைக் கண்டும் அஞ்சாதவர் என்று பெயரெடுத்தவர் முன்னாள் ஜனாதிபதியும் இன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ.

அரசியல் தலைவர்கள் தலைநகருக்கு வெளியே செல்லும் போது அவர்களுக்கு கிடைக்கும் ஆதரவானது எந்தளவுக்கு அவர்கள் மத்தியில் பிரபலமாக உள்ளனர் என்பதையும், அவர்களுக்கு கிடைக்கும் எதிர்ப்பு மக்களின் எண்ணவோட்டத்தை பிரதிபலிக்கும். அப்படியான எதிர்ப்புகள் அந்த அரசியல்வாதியின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் என்பது பொதுவான அரசியல் புரிதல்.

நாடு முழுவதும் ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு எதிராக கடுமையான அதிருப்தி நிலவும் நிலையில், மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டார். அவரது நிகழ்ச்சி நிரலைப் பார்த்தபோது பெரியளவுக்குச் சொல்லி கொள்ளும்படி ஏதுமில்லை. தேசியளவிலான திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணிக்கும் நிகழ்வும் ஏதுமில்லை, அரசியல் பொதுக்கூட்டங்களும் இல்லை. அவரது பயணம் பெரும்பாலும் சமய நிகழ்வுகளைச் சார்ந்தே இருந்தது. அதிலும் பெரும்பாலானவை பௌத்த சமய நிகழ்வுகளாகவே இருந்தன. வழக்கம் போல் யாழ்ப்பாணம் வரும் தலைவர்கள் தவறாமல் விஜயம் செய்யும் நல்லூர் ஆலயத்திற்குச் சென்று கந்தனையும் தரிசிக்க அவரால் முடியவில்லை அந்தளவுக்கு மக்கள் எதிர்ப்பு.

பிறகு எதற்க்காக யாழ்ப்பாணம் வந்தார் மஹிந்த ராஜபக்ஷ?

இதற்கான பதில் அவர் பயணத்திலிருந்தே தெரிய வருவதாகக் கருதலாம். பல இடங்களில் ஏற்கெனவே உள்ள புத்த விகாரைகளுக்கு சென்று அவர் வழிபட்டார் மேலும் தேவையில்லாமல் வலிந்து அமைக்கப்படும் சில விகாரைகளுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வுகளிலும் பங்குபெற்றார். இது முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்புகிறது என்று வடமாகாணத்தில் வாழும் முக்கியஸ்தர் ஒருவர் உதயனிடம் தெரிவித்தார். பாதுகாப்பு காரணங்களுக்காக அவரது பெயர் வெளியிடப்படவில்லை.

“ராஜபக்ஷக்களின் நோக்கம் என்பது வடக்கு மாகாணத்திலும் மேலும் இயன்றவரை வலிந்த சிங்கள குடியேற்றங்களைச் செய்து, இங்குள்ள குடிப்பரம்பல் நிலையை மாற்றியமைத்து, தமிழ்மக்களை பலவந்தமாக ஊரைவிட்டு, நாட்டைவிட்டுச் செல்ல வைப்பதாகும். புத்த விகாரைகளை மேலும் மேலும் நிருவி அதையொட்டிய பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை இராணுவ உதவியுடன் முன்னெடுத்து, உரிமை கோரப்படாத நிலங்களில் அவர்களை குடியமர்த்துவதே அவர்களின் நீண்டகால எண்ணமாகும்”.

ஆதி சிவன் கோவில் அமைந்திருக்கும் குருந்தூர்மலையை பௌத்த குருமார்கள் இராணுவத்தினர் உதவியுடன் ஆக்கிரமித்துள்ளது அண்மைக்கால உதாரணமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், “போர் வெற்றி நாயகன்” மஹிந்த ராஜபக்ஷவிக்கு இம்முறை யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பு அதிகமாகவே இருந்தது. நாட்டில் நிலவும் விலைவாசி ஏற்றம், கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு, கட்டுக்கடங்காத பணவீக்கம், பொருட்களை இறக்குமதி செய்யக் கடுமையான கட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்களைச் சர்வதேச சந்தையில் வாங்க கையில் அந்நிய செலாவணி (டொலர்கள்) இல்லாத நிலை என்று ஏராளமான சிக்கலில் நாடு இருக்கும் நிலையில், மக்களிடையே நாளாந்தம் அரசிற்கு எதிரான மனோபாவம் மற்றும் கொந்தளிப்பும் அதிகரித்து வருகிறது.



இந்த நெருக்கடிகளுக்கு அப்பாற்பட்டு, போர் முடிந்து 13 ஆண்டுகள் ஆகும் நிலையில், காணாமல் போன உறவினர்களின் நிலை குறித்து அறிந்துகொள்ள அவர்களின் உறவுகள் எதிர்கொள்ளும் போராட்டம் மற்றும் கடுமையான எதிர்ப்பையும் ராஜபக்ஷக்கள் சந்திக்கின்றனர். இது அவரது யாழ்ப்பாண விஜயத்தின் போதும் பிரதிபலித்தது.

பிரதமரின் வருகையை ஒட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தாலும், காணாமல் போனோரைத் தேடும் தாய்மார்களும் துவண்டுவிடாமல் தமது போராட்டத்தை முன்னெடுக்க முயன்றனர். ஆனால் அவர்கள் பாதுகாப்பு படையினர் மற்றும் இராணுவத்தினரால் மூர்க்கத்தனமாக தடுக்கப்பட்ட காட்சிகள் சமூக வலைத்தளங்களில் தீயாகப் பரவின.

“காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மாரை தாக்குவதற்கா பிரதமர் யாழ் வந்தார்?” என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் “அலங்கார கந்தனை” தரிசிக்க வருவார் என்று தகவல் கசிந்ததால், ஆலயத்திற்குச் செல்லும் அனைத்து வழிகளையும் மறித்து, காணாமல் போன உறவுகளுக்காகப் போராடும் தாய்மார்களும், பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேநேரம் ஆலயம் சகலருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் மாறாக அங்கே வருபவரை மறிக்கக்கூடாது என ஒருசிலர் கூற முற்பட்டதனால் ஆலயச் சூழலில் இடம்பெறவிருந்த போராட்டம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால் பிரதமரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பாதைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டு அவர்களின் சாலைகளை நோக்கிய பயணத்திற்கு தடை விதிக்கப்பட்டது. காலை 7 மணிக்கு முன்பே தடை போட்டு 10 மணி தாண்டியபோது கிடைத்த தகவல் நல்லூரிற்கான பிரதமரின் பயணம் ரத்துச் செய்யப்பட்டு “அலங்காரத்திற்கு பதிலாக காவடியை நாடிவிட்டார் பிரதமர்” என்று தகவல் வந்தது. ஆக அங்கே தடையை ஏற்படுத்திய பொலிசாருக்கும், படையினருக்கே தகவல் தெரியாதா அல்லது போராட்ட செய்திகள் பிரதமரிற்கு பதற்றத்தை ஏற்படுத்தியதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஆனால் விக்கிரமாதித்தன் கதை போல் மஹிந்த ராஜபக்ஷவும் துவண்டுவிடாமல் மாவிட்டபுரம் சென்று அங்குள்ள கந்தசாமி ஆலயத்தில் தரிசனம் செய்தார்.

“மக்கள் வரிசையில் பொருட்களிற்கு காத்திருக்கும் காலத்தில் நாட்டின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வாகண தொடரணியுடன் யாழ்ப்பாணம் வந்துபோனதன் பெறுபேறு எரிபொருள் செலவைத் தவிர வேறு ஏதுமில்லை” என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் கூறினார். அவரது கருத்திற்கு ஏகோபித்த ஆதரவு இருந்ததும் காணப்பட்டது.

இதேபோன்று மத வழிபாடு என்னும் பெயரில் பௌத்த அடையாளங்களே இல்லாத கந்தரோடையில் ஒரு பௌத்த விகாரைக்கு அடிக்கல் நாட்டவும் பிரதமர் வழிபாடு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேளை காலையில் த.தே.ம. முன்னணியும் மாலையில் கூட்டமைப்பும் ஓர் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்தமையினால் அந்த திட்டத்தையும் பிரதமர் கைவிட்டார்.

யாழ்ப்பாணம் மட்டுவில் பகுதியில் நல்லாட்சி அரசின் காலத்தில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பதற்காக வருகை தந்த பிரதமரின் பயணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக, யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு இந்து மதகுரு தலைமையில் ஆர்ப்பாட்டக்காரர்களும் முல்லைத்தீவிலிருந்து காணாமல் போனவர்களின் உறவுகளும் பேருந்துகளில் மட்டுவிலுக்கு வருகை தந்த போது, திறப்பு விழா இடம்பெற்ற இடத்திற்கு ஆர்ப்பாட்டாக்காரர்களை செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியதோடு, பெண்கள், தாய்மார்கள் ஆகியோரின் தலைமுடியைப் பிடித்து இழுத்து படையினர் அவர்களை மனிதாபிமானமற்ற முறையில் மோசமாக நடத்திய அவலமும் அரங்கேறியது.



இந்தக் கோபத்தின் வெளிப்பாடாக மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து வெளியேறிய நிலையில் அப்பகுதிகளில் பிரதமரை வரவேற்கும் முகமாக கட்டப்பட்டிருந்த பதாகைகளை அறுத்தெறிந்து அவற்றை தீயிட்டும் எரித்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

முன்னதாக பிரதமரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்க முல்லைத்தீவிலிருந்து பேருந்துகள் மூலம் வந்தவர்கள் அதிலிருந்து இறங்க முடியாதவாறு தடுக்கப்பட்டனர்.

உலகளவில் ஊடகச் சுதந்திர அளவுகோல் பட்டியலில் இலங்கை மி-கவும் கீழேயுள்ளது பன்னாட்டு அரங்கில் கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், பிரதமரின் பயணத்தின் போது ஊடகவியலாளர்களுக்கு கடும் கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்ட. குறிப்பிட்ட சில தென்னிலங்கை ஊடகங்களைச் சேர்ந்த செய்தியாளர்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்ட நிலையில், பெரும்பாலான உள்ளூர் தமிழ்ச் செய்தியாளர்களுக்கு பிர-தமர் பயணத்தின் போது செய்தி சேகரிக்கவோ அல்லது அவரிடம் பேட்டி காணவோ அனுமதி மறுக்கப்பட்டது. அதேநேரம் 19ஆம் திகதி நிகழ்வுகளிற்கு செய்தியாளர்களை அனுமதிக்க மறுத்த பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகள் 20ஆம் திகதி மட்டுவிலில் திறக்கப்படும் பொருளாதார மத்திய நிலைய திறப்பிற்கு அனுமதிக்கப்படும் என மாவட்டச் செயலகம் ஊடகவியலாளர்களிற்கு தகவல் வழங்கியபோதும் போராட்டச் செய்திக்காகவே செய்தியாளர்கள் மட்டுவில் சென்றனர்.

இதேவேளை நாவற்குழிக்கு வந்த பிரதமர் பலருக்கு காணி அனுமதிப் பத்திரம் கொடுத்தார். அதனை யாருக்கு கொடுக்கப்பட்டது என்பதும் பெரும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. போர்க்காலத்தில் படையினரால் கைப்பற்றப்பட்ட நிலங்களில் இன்னும் உரியவர்களிடம் கையளிக்கப்படாத நிலங்கள் இன்னும் பெருமளவில் உள்ளன. பன்னாட்டு அரங்கில் பொதுமக்கள் காணிகளிலிருந்து இராணுவம் வெளியேற்றும் என்று வாக்குறுதி அளித்த அரசு, கிடைத்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் மேலும் காணிகளை அபகரிக்கும் முயற்சியில் இன்றளவும் ஈடுபடுகின்றன என்று உள்ளூர் மக்கள் குமுறுகின்றனர்.

மக்களின் கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையே தமது நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு பிரதமர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய பின்னரும் அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்க குழுமியிருந்த தமிழ் மக்களின் கோபாவேசம் குறையவில்லை.

ஏன் வந்தார் எதற்கு வந்தார் என்று எவருக்கும் தெரியாத சூழலில், நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு எந்த தீர்வையும் அரசு முன்வைக்காத நிலையில், செலவுடன் கூடிய பயணத்தில் திட்டமிட்டு திணிப்புகளை மேற்கொள்ளுவது தான் நோக்கமாக உள்ளது என்கிறார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அவைத் தலைவர் சி வி கே சிவஞானம்.

பல வகைகளில் ஆராயும் போது இலங்கையில் ஆளுமை மிக்க தலைவராக அறியப்படும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்த இரண்டுநாள் யாழ்ப்பாண விஜயம் தோல்வி என்பதே யதார்த்தம். ஆனால், அரசிற்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் அவர்களது ஆதரவாளர்களும், பிரதமருக்கு எதிராகப் போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பவர்களை கடுமையாகச் சாடியுள்ளனர்.



“ஜனாதிபதியும், பிரதமரும் அரசியல் விஜயமாகவோ அலுவல் ரீதியான விஜயமாகவோ வட மாகாணத்திற்கு வருகை தரும்போது, சில அமைப்புகள் வெளிநாட்டு சக்திகளால் தூ ண்டப்பட்டு போராட்டங்களை முன்னெடுப்பது ஏற்க முடியாதது, அது அவர்களுக்கு எந்த பலனையும் அளிக்காது” என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

பல போராட்டங்களை முன்னின்று நடத்தி வெற்றிகண்ட மஹிந்த ராஜபக்ஷவிற்கு யாழ்ப்பாண விஜயம் காத்திரமாக ஒரு செய்தியைக் கூறியுள்ளது என்பதே யதார்த்தம். மக்களின் நியாயமான போராட்டங்கள் மற்றும் கோரிக்கைகளுக்கு செவிமடுக்காத அரசும் அரசியல்வாதிகளும் தோல்வியைச் சந்தித்ததே அரசியல் வரலாறு அதற்கு இலங்கையும் விதிவிலக்காக இருக்காது.

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198




கனடா வாழ் ரசிகர்களுக்காக
யாழ் மண்ணிலிருந்து ஒரு திரைப்படம்

யாழ் திரையரங்குகளில் வெற்றி நடை போட்ட 'எங்கட படம்'

எழுத்தும் இயக்கமும்: ராஜ் சிவராஜ்

Scarborough NETWYN அரங்கில்
Netwyn.Place
10 Thornmount Drive
M1B 3J4 (Morningside-Sheppard சந்திக்கு அருகில்)

ஏப்ரல் 9ம் திகதி மூன்று காட்சிகளாக:

பிற்பகல் 2:00 மணி - VIP காட்சி
மாலை 4.00 மணி மற்றும்
மாலை 6.00 மணி காட்சிகள்

அனுமதி:

4:00 மணி
6:00 மணி காட்சிகளுக்கு
$10 மட்டுமே

தொடர்புகளுக்கு: (416) 732-1608 | (647) 770-7482 | (416) 669-6437





கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation


Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# முத்தமிழ் வித்தகர், பேராசிரியர் விபுலாநந்த அடிகள்

- எஸ்.கே. குமரகுரு

முத்தமிழ் வித்தகர், பேராசிரியர் விபுலாநந்த அடிகளின் 130 ஆவது பிறந்தநாள் எதிர்வரும் 2022-03-27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும்.

**"வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ**
**வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது."**


விபுலாநந்த அடிகளார் (1892-1947)

என்ற பாடல் மூலம் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்டவர், தமிழ்த் தாய் ஈன்றெடுத்த தவப்பதல்வர்களுள் ஒருவர் விபுலாநந்த அடிகளாவர். வங்கக் கடலும், வனப்புமிகு மருதநிலமும் இயற்கை அரணாக விளங்கும் காரைதீவு மண் உலகிற்குத் தந்த பன்முக ஆளுமை அடிகளாவர்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"! எனும் கனியன் பூங்குன்றனாரின் கூற்றைப் பின்பற்றி, எல்லைகளைக் கடந்து சகலமக்களுக்கும் சமூகப் பணியாற்றியவர். குறிப்பாக கல்விப் பணியூடாக அறிவு பெற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க, சுவாமிகள் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர்.

மயில்வாகனம் என்னும் இயற்பெயர் கொண்ட சுவாமி விபுலாநந்தர் தனது 15 ஆவது வயதில் (1907 ஆண் ஆண்டு) தான் கல்விகற்ற மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் மாணவ ஆசிரியராக (Pupil Teacher) ஆசிரியப்பணியைத் தொடங்கினார். ஆசிரியப் பயிற்சி பெற்று ஆங்கிலம், வேதியல் ஆசிரியராக, மானிப்பாய் இந்துக் கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகவும், அண்ணாமலை பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பதவிவகித்து கல்விப்பணியாற்றினார்.

இராமகிருஷ்ண மிஷன் துறவியாகி மீண்டும் இலங்கைக்கு வந்து, இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளைப் நிர்வகித்ததோடு, புதிய பாடசாலைகளையும் அமைத்து கல்விப்பணி புரிந்தார். குறிப்பாக மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், காரைதீவு சாரதா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளும் சுவாமி விபுலாநந்தரின் கல்விப்பணியை இன்றும் பறைசாற்றுகின்றன. இவையிரண்டு பாடசாலைகளும் சுவாமியால் ஆரம்பிக்கப் பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலைநாடு எனக் கிராமங்கள் தோறும் பாடசாலைகளை நிறுவினார். அத்துடன் யாழ்ப்பாணம் விவேகானந்த தமிழ் பாடசாலை, வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம், திருகோணமலை இந்து ஆங்கில பாடசாலை, மண்டூர் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை என இருபத்தாறு (26) இராமகிருஷ்ண மிஷன் பாடசாலகளை நிர்வகித்துவந்தார்.

மேலும் பெற்றோரை இழந்து, அரவணைப்பாரின்றி அனாதையாக வாழும் சிறார்களின் முன்னேற்றத்துக்காக சிவாநந்த வித்தியாயலத்தில் சிறுவர் இல்லம் அமைத்து சிறுவர்களைப் பராமரித்தார். மேலும் 1929ம் ஆண்டு டிசம்பர் மாதம் யாழ் வண்ணார் பண்ணை மடத்திலிருநிது கல்வி கற்ற ஆதரவற்ற ஏழு மாணவர்களையும் அழைத்துவந்து சிவானந்த வித்தியாலயத்தில் தான் அமைத்த சிறுவர் இல்லத்தில் சேர்த்துப் பராமரித்த பெருமைக்குரியவர்.

மேலும், "சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்னும் பாரதியாரின் கூற்றை முழுமையாக ஏற்றுக் கொண்டார். அதன்படி சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும். இதன்மூலம் தீண்டாமை எனும் கொடிய நோயை விரட்ட வேண்டும் என்பதை செயலில்காட்டினார். சிதம்பரம் தாலுக்கா (அண்ணாமலை நகர் அருகேயிருந்த) திருவேட்களத்தில் வசித்த ஆதித்திராவிட மக்களை தனது வீட்டுக்கு அழைத்து உணவு வழங்குவதையும் இரவு பாடசாலை நடாத்துவதையும் நிறுத்தும்படி கேட்ட பல்கலைக்கழக நிருவாகத்திற்கு அடிபணியாது தனது பேராசிரியர் பதவியையே துறந்து வெறியேறினார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பட்டம் பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையைப் பெற்றவர். தமிழ் மொழிமீது பக்தியும் பற்றும் கொண்டிருந்த அடிகள், அதனைத் தொண்டாகவும், தொழுகையாகவும் ஏற்று, அதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தார். மறைந்துபோன யாழ் வகைகளைப் பதினான்கு வருடங்கள் ஆய்வுசெய்து "யாழ் நூல்" என்னும் அரிய சொத்தை எமக்குத் தந்தார். மேலும் சென்னைப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட கலைச்சொல்லாக்க குழுவின் தலைவராகவும், வேதியல் பாடத்தின் தலைவராகவும் பணியாற்றி பதினான்காயிரத்துக்கும் மேற்பட்ட கலைச்சொல்கள் ஆக்குவதற்காக அரும்பாடுபட்டார்.

பாரதியாரையும் அவர் பாடல்களையும் ஏற்க மறுத்த பண்டிதர்கள் மத்தியிலே அவர்களது எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பாரதியை ஏற்றுக் கொண்ட முதற் பண்டிதர் விபுலாநந்தர் அடிகளேயாவார்.

இசைத் தமிழின் வளர்ச்சிக்காக நூற்றுக்கனக்கான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியதுடன், பல்வேறு மாநாடுகளிலும் கலந்து சிறப்புரைடாற்றினார். அத்தோடு இராமகிருஷ்ண விஜயம், விவேகானந்தன், பிரபுத்தபாரதம் என்னும் ஆங்கில இதழுக்கும் ஆசிரியராகப் பணியாற்றினார். மேலும் சேக்ஸ்பியரின் நாடகங்களை அவற்றின் கருத்துச் சிதையாது அழகு தமிழில் பெயர்களைச் சூட்டி மொழிபெயர்த்து மதங்க சூளாமணி என்னும் நூலை உருவாக்கி நாடகத் தமிழுக்குப் பெருமைசேர்த்தார்.

இவ்வாறாக முத்தமிழுக்கும், மற்றும் கல்வி, சமத்துவம் மதங்களுக்கிடையேயான சமரசம் இன ஐக்கியம் என்னும் சமூக விழுமியங்களை ஊக்குவிக்கும் பணியிலேயே ஈடுபட்டு அவற்றிக்காக உழைத்த சுவாமி விபுலாநந்தரின் 130 ஆவது பிறந்தநாள் இன்றாகும்.




# உக்ரைன் மீது ரஸ்யாவின் 'கைப்பர்சோனிக் ஏவுகணைத்' தாக்குதல். வல்லரசுகளின் ஆயுதப் பலப்பரீட்சை யுத்தமா?

- குரு அரவிந்தன்



**து**டுப்பாட்டத்தில் ஓட்டங்களை எண்ணுவது போல, ரஸ்ய - உக்ரைன் யுத்தத்தில் நாட்களை எண்ண வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டிருக்கின்றது. சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது, கனடாவில் அந்தந்த நாட்டு ரசிகர்கள் தங்கள் நாட்டுக் கொடிகளைத் தங்கள் வண்டிகளில் பறக்கவிடுவது சாதாரண நிகழ்வாக இருக்கும். ஆனால் இம்முறை உக்ரைன் கொடிகளைப் பறக்க விட்டபடி செல்லும் பல வண்டிகளை வீதிகளில் காணமுடிகின்றது. இன்றுடன் யுத்தம் ஆரம்பித்து 27 நாட்களாகிவிட்டன. ரஸ்யா தனது ஆயுதப் பலத்தை மேற்கு நாடுகளுக்குக் காட்டுவதற்காக 18 ஆம் திகதி பரீட்சார்த்தமாக உக்ரைனில் மேற்கே உள்ள டெல்யாரின் என்ற கிராமத்தில் இருந்த இராணுவ ஆயுதக் களஞ்சியத்தை "கைப்பர்சோனிக் ஏவுகணை" மூலம் தாக்கி அழித்திருக்கின்றது. இந்த ஏவுகணை ஒலியைவிட 5 மடங்கு வேகம் கொண்டதால், இந்த ஏவுகணையைத் தாக்கி அழிப்பது கடினமானது. அமெரிக்காவிடம் தற்போது இருக்கும் பாதுகாப்பு ராடர்களால் இதைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். இது போன்ற ஏவுகணைத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கக்கூடிய இரும்புக் கவசங்கள் கொண்ட 3 கப்பல்கள் அமெரிக்காவிடம் இருந்தாலும், இன்னும் அவை வெள்ளோட்டம் விடப்படவில்லை.

இத்தகைய ஏவகணைகளில் அணுவாயுதம் இணைக்கப்பட்டால், தடுத்து அழிக்க முடியாத நிலை ஏற்படலாம். சென்ற டிசெம்பர் மாதம் தங்களிடம் இத்தகைய ஆயுதங்கள் இருப்பதாக ரஸ்ய அதிபர் புதின் தெரிவித்திருந்தார். அது வெறும் வாய் வார்த்தை அல்ல என்பதைச் செய்கையிலும் காட்டி இருக்கின்றார். முதலாவது ஏவுகணைத் தாக்குதலை நம்பாதவர்களுக்காக இரண்டாவது தடவையாகவும் கருங்கடலில் உள்ள கப்பலில் இருந்து அதிவேக ஹைப்பர்சோனிக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். இத்தடவை உக்ரேனிய கவசவாகனங்களைப் பழுதுபார்க்கும் தொழிற்சாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிகின்றது. உக்ரைனின் எரிபொருள் சேமிப்பு நிலையங்களையும் இத்தகைய ஏவுகணைகளைக் கொண்டு அழிக்கப்போவதாக ரஸ்யா குறிப்பிட்டிருக்கின்றது.

ரஸ்யாவின் உக்கிரமான தாக்குதலுக்கு உக்ரைனின் தலைநகரான கீவ், இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ், துறைமுக நகரமான மரியுபோல் ஆகியன உள்ளாகி இருக்கின்றன. ஏறிகணைத் தாக்குதலும், விமானத் தாக்குதலுமே இப்பகுதியில் அதிகமாக நடைபெறுகின்றன. இந்த மூன்று இடங்களும் ரஸ்யாவிடம் விழும் பட்சத்தில், உளரீதியாக உக்ரைன் மக்கள் வலு இழந்து விடுவார்கள். அதனால்தான் ரஸ்யா இந்த மூன்று இடங்களையும் குறிவைத்துத் தாக்குகின்றது. இதில் ரஸ்யா கவனமாகச் செயற்படாவிட்டால், ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி உலகநாடுகள் தலையை நுழைக்கக் காத்திருக்கின்றன என்பது ரஸ்யா அறிந்ததே! அப்படி நடந்தால், இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஒதுங்கியிருந்த அமெரிக்கா எப்படி உள்வாங்கப்பட்டதோ, அதேபோல இப்போது ஒதுங்கி இருக்கும் சீனா மறைமுகமாக ரஸ்யாவுக்கு உதவ முன்வரலாம். அப்படி ஒன்று நடக்கும் பட்சத்தில் அது உலக யுத்தமாக மாறிவிட வாய்ப்புண்டு. செஞ்சோற்றுக் கடன் தீர்க்க இந்தியா மௌனமாக இருக்கின்றது.

உக்ரைனுடனான ரஸ்ய யுத்தம் காரணமாக உக்ரேன் மக்கள் அகதிகளாக்கப் பட்டிருக்கின்றனர். பொதுவாக யுத்தம் என்று வரும்போது இரண்டு பக்கத்திலும் மக்கள் அகதிகளாக்கப் படுவதுண்டு. ஆனால் இதுவரை ஒரு பக்கத்து மக்கள், அதாவது உக்ரைன் மக்கள் மட்டுமே அகதிகளாக்கப் பட்டிருக்கின்றனர். காரணம் உக்ரைன் இதுவரை ரஸ்யாவைத் தாக்கவில்லை, தற்பாதுகாப்பு யுத்தமே மேற்கொள்கிறார்கள். உக்ரைன் திருப்பித் தாக்கத் தொடங்கினால், அது உலக யுத்தமாக மாறிவிட வாய்ப்புண்டு. அகதிகளாக்கப் பட்டவர்களில் இடம் பெயர்ந்த உக்ரைன் மக்களும், புலம் பெயர்ந்த உக்ரைன் மக்களும் இடம் பெறுவர். ஐ.நா.வின் புலம்பெயர்ந்தோர் அறிக்கையின் படி இதுவரை 30 இலட்சம் 20 ஆயிரம் உக்ரைன் மக்கள் அயல் நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து இருக்கிறார்கள். 6.5 மில்லியன் மக்கள் உக்ரைன் நாட்டுக்குள்ளேயே வெவ்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து இருக்கிறார்கள். 12 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்து போவதற்கு முடியாமல் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். பாலங்களும், போக்குவரத்து பாதைகளும் குண்டு வீசி அழிக்கப்பட்டதாலும், ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டிருப்பதாலும் அப்பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேற முடியாமல் சிக்கித் தவிக்கிறார்கள்.

உக்ரைனில் ரஸ்யாவின் விமானத்தாக்குதல், எறிகணைத் தாக்குதல் போன்றவற்றால் கொல்லப்பட்ட 109 குழந்தைகளின் நினைவாக, அஞ்சலி செலுத்தும் வகையில் குழந்தைகள் பாவித்த தொட்டில் வண்டிகளைப் பிள்ளைகளின் சமாதி போலப் பொது இடமான லிவில் நகரமண்டபத்திக்கு முன்னால் சென்ற வாரம் வரிசையாக நிறுத்தி வைத்திருந்தபோது, பலரின் மனதையும் உருகவைத்துக் கண்களை நனைய வைத்தது. ஒன்றுமே அறியா அப்பாவிக் குழந்தைகள் இலக்கு வைக்கப்பட்டுக் கொல்லப்பட்டபோது, யாராக இருந்தால் என்ன, அந்தப் பெற்றோரின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பது ஒவ்வொரு பெற்றோரும் வலியோடு நினைத்துப் பார்த்திருப்பார்கள். எப்பொழுதுமே யுத்தம் என்று வந்துவிட்டால், இயலாமையின் வெளிப்பாடாய் பெண்களும், குழந்தைகளும்தான் மனநோயாளர்களான எதிரிகளால் முதலில் இரையாக்கப் படுகின்றார்கள். மக்களை உளரீதியாகப் பலவீனப் படுத்துவதுதான் இதன் முதல் நோக்கம். இது போன்ற ஒரு நிலைமை இலங்கைத் தமிழர்களுக்கும் யுத்தகாலத்தில் பல தடவை நடந்தது நினைவிருக்கலாம். கல்வியறிவூட்டும் புனிதமான கோயில்கள்தான் பாடசாலைகள் என்று தெரிந்தும், பாடசாலைகள் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுச் சிறார்களைப் பலி எடுத்துவிட்டு, அதற்குப் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டதும் மக்கள் நினைவை விட்டு என்றென்றும் அகலப் போவதில்லை.

இதற்கிடையே ரஸ்ய சரக்கு விமானம் ஒன்று ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் அவசரமாகத் தரை இறங்கி இருந்தது. உக்ரைன் விவகாரத்தில் ரஸ்ய விமானங்களுக்குத் தடைவிதித்திருந்த நிலையில், முன்னறிவிப்பு இல்லாமல் தரை இறக்கப்பட்டதால், திரும்பவும் புறப்பட்டுச் செல்வதற்கு வொல்கா டினிபிர் நிறுவனத்திற்குச் சொந்தமான இந்த விமானத்திற்குத் தடைவிதிக்கப்பட்டதால், தற்போது விமானத் தரிப்பிடம் "என்" இல் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த விமானம் சீனாவில் இருந்து அலாஸ்கா அங்கரேய்ச் வழியாக கனடாவுக்கு வந்திருந்தது.

கனடாவின் கடற்படைக் கப்பலான எச்.எம்.சி.எஸ். கலிபாக்ஸ் சென்ற சனிக்கிழமை நேட்டோ அமைப்பின் வட அட்லாண்டிக் பால்டிக் பிரதேச பாதுகாப்புக்கு உதவுவதற்காக கலிபாக்ஸில் இருந்து புறப்பட்டுச் சென்றது. 1992 ஆம் ஆண்டு முதல் சேவையில் இருக்கும் இந்தக் கப்பல் 440 அடி நீளமானது. நீர்மூழ்கி எதிர்ப்பு, மற்றும் ஹெலிகொப்டர் வசதிகளைக் கொண்டது. 253 கடற்படை வீரர்களைக் கொண்ட இந்தக் கடற்படைக் கப்பல் புறப்பட்ட போது அவர்களின் குடும்பத்தினரும் அங்கு வந்து பிரியாவிடை கொடுத்து அனுப்பினார்கள். இந்தக் கப்பல் தொடர்ந்து அடுத்த ஆறு மாதங்களுக்கு அப்பகுதியில் கடமையில் ஈடுபடும். ஏற்கனவே அனுப்பப்பட்ட எச்.எம்.சி.எஸ். மொன்றியல் கடற்படைக் கப்பலுடன் இணைந்து கலிபாக்ஸ் செயற்படும். தமிழரான கனடா பாதுகாப்பு அமைச்சர் அனிட்டா ஆனந்த் அவர்கள் உத்தியோக பூர்வமாகக் கப்பலை வழியனுப்பி வைத்தார். அட்டவணை நிகழ்ச்சி நிரலின்படி இந்தக் கப்பல் அடுத்த வாரம் மத்திய கிழக்கிற்குச் செல்ல இருந்தது, ஆனால் தற்போதைய உக்ரைன் - ரஸ்யா அவசர நிலை காரணமாகப் பால்டிக் நோக்கித் திசை திருப்பப்பட்டது.


இதுவரை ரஸ்ய இராணுவ வீரர்கள் 14,400 பேர்வரை இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டிருப்பதாக உக்ரைன் அறிவித்திருக்கின்றது. இதைவிட 95 யுத்த விமானங்கள், 115 ஹெலிகொப்டர்கள், 1470 கனரகவாகனங்கள், 213 பீரங்கிகள் போன்றவையும் உக்ரைன் இராணுவ வீரர்களால் அழிக்கப்பட்டிருக்கின்றன. ரஸ்யாவின் பக்கத்து நாடான பெலாரஸ்ஸை ரஸ்யா தனது ராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவதும் இப்போது அம்பலமாகி இருக்கின்றது. பெலாரஸின் ஹோம் விமான நிலையத்தில் இருந்து உக்ரைன் நோக்கித் தாக்குதல் டரோன் புறப்பட்டதை வீடியோ படங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

இந்த யுத்தம் சம்பந்தமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் காணொளி மூலமாக ஆலோசனை நடத்தியிருந்தார்கள். நேட்டோ நாடுகளின் தலைவர்களையும், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களையும் சந்திப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பெல்ஜியம், மற்றும் போலாந்து ஆகிய நாடுகளுக்குச் செல்ல இருக்கின்றார். அவரைப் போலாந்தின் எல்லையில் உள்ள உக்ரைன் நாட்டுக்கும் வரும்படி முன்னாள் உக்ரைன் அதிபர் வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த யுத்தம் இப்போதைக்கு முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்க முடியவில்லை, வல்லரசுகளின் ஆயுதப் பலப்பரீட்சை யுத்தமாகவே இது இருக்கப் போகின்றது.

## வானை எட்டட்டும் புகழாரமே!

(உலக சாதனையாளர் அகணி சுரேஷ் அவர்களுக்குப் பாராட்டுப் பாமாலை)

**ஆக்கம்: மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா**



*அன்னையின் பெயரினை அடையாள மாக்கியே*
*அகணியென்று அறியலுற்றார் – அவர்தன்*
*அன்னையின் ஆசிபெற்றார்!*
*பின்புலம் அறிவியல் ஒண்புலம் தமிழென்று*
*பேரறிவு பெற்றபுலவர் – மேடைப்*
*பேச்சிலும் வல்லகலைஞர்!*
*மென்மையுறு பாடலும் மேலான கவிதையும்*
*மெருகோடு கருவாக்குவார் – பலர்க்கு*
*மேடையும் உருவாக்குவார்!*
*பன்முகத் திறனோடு பாரிலே சாதனை*
*படைத்தனர் வாழ்கவாழ்க! – இன்னும்*
*பலகாண நீடுவாழ்க!*

*கழகத்தின் தலைவனாய் கண்ணியம் கருத்தோடு*
*கடமையை ஆற்றிநின்றார் – இன்றும்*
*கருத்தோடு காத்துநின்றார்!*
*பழகுதற் கினியவர் பண்பிலே நல்லவர்*
*பரிவிலே நட்பானவர் – பாசப்*
*படகிலே துடுப்பானவர்.*
*உழைப்பிலே தேனியாய் ஊக்கத்தில் வேங்கையாய்*
*உறுதியில் இரும்பானவர் – ஆனால்*
*உள்ளத்தில் கரும்பானவர்*
*எழுகின்ற இளங்காலைக் கதிர்போல ஒளிரட்டும்*
*எடுக்கின்ற செயல்யாவுமே – வானை*
*எட்டட்டும் புகழாரமே!*



# மோசமான படங்களுக்கு ஆதரவு வழங்காதீர்கள் என்கிறார் மோசமான நடிகர் கமல்ஹாசன்

சினிமா

நடிகர் கமல்ஹாசன் இப்பொழுது லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விக்ரம் படத்தில் நடித்து வருகிறார். சூரரைப் போற்று, ஜெய்பீம், எதற்கும் துணிந்தவன் உள்ளிட்ட படங்களைத் தொடர்ந்து சூர்யா வெற்றிமாறன் இயக்கத்தில் வாடிவாசல் என்ற படத்தில் நடித்து வருகிறார். தமிழ் சினிமாவில் தலை சிறந்த நடிகர்களாக உள்ள கமல்ஹாசன் மற்றும் சூர்யா மோசமான படங்களை பற்றி ஒரே மாதிரி கருத்தை பேசியுள்ள வீடியோ தற்போது இணையதளத்தில் வைரலாகிறது. மாநகரம், கைதி, மாஸ்டர் என ஹாட்ரிக் வெற்றிகளை கொடுத்த இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இப்பொழுது கமல்ஹாசன் நடிப்பில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் விக்ரம் படத்தை இயக்கி வருகிறார். முழுக்க முழுக்க ஆக்ஷன் கதையில் உருவாகி வரும் இந்தப் படத்தில் கமல்ஹாசனுடன் இணைந்து பகத் பாசில் மற்றும் விஜய் சேதுபதி முக்கிய வேடங்களில் நடித்து வருகின்றனர் இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவு பெற்றதை தொடர்ந்து தயாரிப்பு பணிகள் விறு விறு வேகத்தில் நடைபெற்று கொண்டுள்ளது.

சூரரைப் போற்று, ஜெய் பீம் போன்ற தரமான படங்களை கொடுத்தவர் சூர்யா. சமீபத்தில் சூர்யாவின் நடிப்பில் வெளியான எதற்கும் துணிந்தவன் ரசிகர்கள் மத்தியில் பாராட்டை பெற்று வருகிறது. இயக்குனர் பாண்டிராஜ் இயக்கத்தில் வெளியான இந்த படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக பிரியங்கா மோகன் நடித்திருப்பார். மிகப் பெரிய நட்சத்திர பட்டாளம் நடித்திருந்த இந்தப் படம் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை பற்றி பேசியது. கூட்டுக் குடும்பத்தின் முக்கியத்துவத்தையும் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளையும் பற்றி ஆணித்தரமாக பேசியுள்ள இந்த படம் குடும்ப ரசிகர்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. அடுத்து சூர்யா வெற்றிமாறன் இயக்கத்தில் வாடிவாசல் என்ற படத்திலும் பாலா இயக்கத்தில் புதிய படத்திலும் நடித்து வருகிறார். கமல்ஹாசன் மற்றும் சூர்யா என இருவரும் நடிப்புக்கு பெயர் போனவர்கள். இவர்களின் நடிப்பில் வெளியாகும் திரைப்படங்கள் அனைத்து தரப்பு ரசிகர்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. தொடர்ந்து வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்து நடித்து வரும் கமல் ஹாசன் மற்றும் சூர்யா மோசமான படங்கள் குறித்து ஒரே மாதிரி கருத்தை பேசியுள்ளனர். அதில் இருவரும் பேசி உள்ளது. நாங்கள் நடிக்கும் படங்கள் நன்றாக இருந்தால் எப்படி சிறந்த படங்களை தூக்கி பிடிக்கின்றோமோ அதைப்போல சிறப்பில்லாத படங்களை அதற்கு தகுந்த இடத்தில் வைக்க வேண்டும். எனவே இது மோசமான படம், டப்பா என நீங்கள் ரசிகர்கள் ஓபனாக சொல்ல வேண்டும் என கமல்ஹாசன் கூறியுள்ளார். அதேபோல சூர்யாவும் நல்ல படம் பண்ணா அத ஜெயிக்க வைங்க..

மோசமான படம் பண்ணா அது நான் பண்ணியிருந்தாலும் ஜெயிக்க வைக்காதீங்க ஓட வைக்காதீங்க அப்பதான் நான் இன்னும் நல்ல படம் கொடுக்க முடியும் இன்னும் பெட்டர் கதையை தேடி ஓட முடியும் தயவுசெய்து நல்ல படம் பண்ணா மட்டும் ஜெயிக்க வைங்க அது போதும். என சூர்யா மற்றும் கமல்ஹாசன் மோசமான படங்கள் குறித்து ஒரே மாதிரி கருத்தை பேசியுள்ளனர்.

# நடிகர் விஜய்யின் "பீஸ்ட்" திரைப்படம் ஏப்ரல் 14 தேதி வெளியீடென அதிகாரப்பூர்வ அறிவிப்பு




மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பீஸ்ட் படத்தின் வெளியீடு தேதி அதிகாரப்பூர்வமாக வெளியாகியுள்ளது. நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் விஜய் நடிப்பில் பீஸ்ட் திரைப்படம் உருவாகியுள்ளது.

இந்தப் படத்தில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார். கத்தி, மாஸ்டர் படங்களை அடுத்து அனிருத் இந்தப் படத்தில் விஜய் உடன் கூட்டணி அமைத்துள்ளார். இப்படத்தை சன் பிக்சர்ஸ் தயாரித்து வருகிறது. இந்தப் படத்தில் செல்வராகவன், ரெடின் கிங்ஸ்லீ, யோகிபாபு, அபர்ணா தாஸ் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். தற்போது படத்தின் இறுதி கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. பீஸ்ட் படத்தின் ஒவ்வொரு அப்டேட்ம் செம ஹிட் அடித்து வருகிறது. எனவே படத்தின் மீதான எதிர்பார்ப்பு எகிறியுள்ளது. தற்போது படத்தின் வெளியீடு குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகி உள்ளது. வரும் ஏப்ரல் 13-ஆம் தேதி பீஸ்ட் திரைப்படம் உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் விஜய் ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். ஏப்ரல் 14-ம் தேதி கேஜிஎப் இரண்டாம் பக்கம் வெளியாவதால் பாக்ஸ் ஆபிசில் இரு படங்களுக்கும் கடும் போட்டி நிலவும் என்பது உறுதி!

# நடிகர் சிம்புவின் கார் மோதியதில் ஒருவர் பலியானார்



டி ராஜேந்தர் லட்சிய திமுக கட்சியின் நிறுவனர். இந்நிலையில் டி ராஜேந்தரின் சென்ற சிம்புவின் கார் விபத்துக்குள்ளாகி ஒருவர் படு காயமடைந்ததாக ஒரு வீடியோ உலா வந்து கொண்டிருக்கிறது.

கடந்த வாரம் வெள்ளிக்கிழமை அன்று டி ராஜேந்தர், தனது குடும்பத்துடன் வெளியே செல்வதற்காக சிம்பு காரில் சென்றுள்ளார். தேனாம்பேட்டை அருகே இளங்கோ சாலையில் கார் வந்து கொண்டிருக்கும்போது ஒரு முதியவர் மீது கார் மோதி உள்ளது. முனுசாமி என்ற அந்த முதியவர் ஊனமுற்றவர். மேலும் அவர் சாலையைக் கடக்க ஊர்ந்து செல்கிறார்.

அந்த நேரத்தில் எதிர்பாராத விதமாய் டி ராஜேந்தரின் கார் அவர் மீது ஏறி இறங்கியது. காரில் இருந்த டி ராஜேந்தர் ஆம்புலன்ஸுக்கு போன் செய்து, சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் முனுசாமியை சேர்த்துள்ளார். அங்கே தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் டி ராஜேந்தரின் கார் ஓட்டுனர், இதற்கு முழு பொறுப்பு ஏற்று சரண்டர் ஆகியுள்ளார். மேலும் அவர் டி ராஜேந்திரன் அவர்களுக்கும், இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை, எதிர்பாராத விதமாக இந்த விபத்து நடந்துள்ளது என்று முதற்கட்ட விசாரணையில் தெரிவித்துள்ளார்.

காரை ஓட்டி வந்த டி ராஜேந்தரின் ஓட்டுனரை காவல் துறையினர் கைது செய்து வழக்கு பதிவிட்டுள்ளனர். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி முதியவர் முனுசாமி உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நடந்து கிட்டத்தட்ட ஐந்து நாட்கள் ஆகியுள்ளது. தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட முனுசாமி, இன்று இறந்ததை ஒட்டி தான் இந்த செய்தி காட்டுத் தீ போல் பரவி வருகிறது.

# குவேனியின் சாபம் தொடர்ந்து இராசபக்ச குடும்பத்தைத் துரத்துகிறது!

*(23ம் பக்கம் தொடர்ச்சி)*



இப்போது வடக்கையும் விழுங்கத் தொடங்கியுள்ளது. மணலாறு (வெலி ஓயா) போன்ற குடியேற்றத் திட்டங்கள் மூலம் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்கள் சிங்கள மயப்படுத்துப்பட்டு வருகின்றன.

இலங்கையை ஆட்சி செய்த சிங்கள - பவுத்த ஆட்சியாளர்கள் தங்கள் மதத்தையும் மொழியையும் வளர்த்தார்களேயொழிய முழு நாட்டையும் வளர்க்க முயற்சிக்கவில்லை. தமிழர்களது அழிவில்தான் சிங்கள மக்களது செல்வச் செழிப்பு இருக்கிறது என்ற கோட்பாடு இருந்து வந்தது. ஆனால் அது இன்று பொய்த்துவிட்டது. முற்பகல் செய்த வினை பிற்பகல் வந்து சூழ்ந்துள்ளது. குவேனி போட்ட “சாபம்” **(CURSE)** சிங்கள - பவுத்தர்களைத் தொடர்ந்து துரத்துகிறது.

*(வளரும்)*

# கனடா உதயன் குழுவினருக்கு இராப்போசன விருந்தளித்து கௌரவித்த இலங்கைத் தலைநகரின் விளம்பரத்துறை விற்பன்னர்கள் ஜெகன் – விஜேய் குடும்பத்தினர்

அண்மையில் இலங்கைக்கு கலை இலக்கிய மற்றும் சமூகப் பணிகள் சார்ந்த பயணம் ஒன்றை மேற்கொண்டு சென்றிருந்த கனடா உதயன் குழுவினருக்கு இலங்கைத் தலைநகரின் விளம்பரத்துறை விற்பன்னர்கள் ஜெகன் - விஜேய் சகோதரர்கள் குடும்பத்தினர் இராப்போசன விருந்தளித்து கௌரவித்தனர் FLEX ADVERTISING விளம்பர நிறுவனத்தின் பங்காளர்களான இந்த சகோதரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், சகோதர சகோதரிகள் ஆகியோர் அன்புடன் வரவேற்று உபசரித்தனர். படத்தில் கனடா உதயன் நண்பரும் "ரூபம்" வானொலி நிலைய அதிபருமான சங்கர் சிவநாதனும் காணப்படுகின்றார்.

**- செய்தியும் படமும்: பிரதீபன்- கொழும்பு**



# கடந்தவையும் கடப்பவையும் (24)

**- உமா மோகன் -**

*தமிழின் சிறப்புப் பற்றிய சொற்பொழிவு*
*முயற்சிக்கிறார் சிறப்பான நூல்களைப் பெற்றிடவே*

*தமிழ்ப்புலமை பெற்ற தேவருக்கு கிடைக்கவில்லை*
*அமிழ்தினும் இனிய தமிழ் நூல்கள்*

*அக்காலத் தமிழ் நாட்டில் தமிழின்*
*பிற்போக்கு நிலைகண்டு குமுறினார் தேவர்*

*ஏன்? - அன்று*

*மூவேந்தரும் இல்லை முச்சங்கமும் இல்லை*
*பாவேந்தர்கள் குறைந்ததால் பாடல்களும் அதிகமாய் அங்கில்லை*

*பழைய நூல்கள் அங்கு இல்லை - அதைப்*
*படிப்பாரும் இல்லை கேட்பாரும் இல்லை*

*மழுங்கி வந்த தமிழின் நிலைகண்டு*
*மனக்குழப்பம் தான் கொண்டார் தேவர்*

*மீண்டும் தமிழ்ச்சங்கம் அமைக்க என*
*வேண்டினார் அரசிடம் அனுமதி - அதனால்*

*நான்காம் தமிழ்ச்சங்கம், ஆயிரத்துத்*
*தொள்ளாயிரத்து ஒன்றில் உருவாக -அன்று*

*நான்கு பக்கமும் மாண்ட தமிழைத் தேடினார் - தமிழில்*
*மேன்மை கொண்ட புலவர்களை நாடினார்*

*அழிந்து போகும் நூல்களை அச்சிட வேண்டினார்*
*தெரிந்தவர் மூலமாக இலங்கையையும் நாடினார்*

*ஈழத்து அறிஞர்களை தம்தேசத்திற்கு*
*வரவழைத்தார், அவர்களைச் சிறப்பித்தார்*

*தமிழ் வளர்த்த வள்ளல் பாண்டித்துரைத் தேவரின்*
*அழைப்பினை ஏற்று அங்கும் சென்று*

*விருதுகளைப் பெற்றவரும், பெருமைக்கு உரிய*
*புலவர்களுள் ஒருவராகித் தமிழ்ச் சங்கத்தில் இருந்தவரும் - சங்கத்துச்*

*செந்தமிழ் இதழில் தானுமோர் அங்கமாய்*
*ஆய்ந்து எழுதினாராம் அறுபதுக்கு மேலான கட்டுரைகள்*

*யாராக இரிந்தாலும் தயங்காராம் - அவர்*
*நேராகத் தவறினைச் சுட்டிக்காட்ட*

*இலக்கண இலக்கிய வழுக்களை தக்கவாறு*
*கலக்கமின்றி எடுத்துக்கூறும் வழக்கம் உடையவராம்*

*இவர்? -*

*காலணித்துவ காலத்து இலங்கையில் தமிழ்*
*இலக்கிய வளர்ச்சிக்கு உதவியவர்*

*முத்துக்குமார கவிராயர் பரம்பரையில் வந்தவர் -சைவ*
*சித்தாந்தத்திலும் சிறந்து விளங்கியவர்*

*தமிழும் வடமொழியும் கற்றுத் தேர்ந்தவர் - யாழ்*
*தமிழ்ச் சங்கத்தில் வாழ்நாள் உறுப்பினராய் இருந்தவர்*

*சொற் பொழிவுகள் வழங்குவதில் சோர்வில்லாதவர்*
*சொல்லும் பொருளும் சுவைபடப் பாடும்*

*வல்லவர் ஆதலால் 'புலவர்' என்று இளமையில்*
*செல்லமாக அழைக்கப்பட்டவர்*

*இடுகுறிப் பெயரே காரணப்பெயர் ஆனது*
*பெருமைக்குரிய இவருக்குத் தானாம்.*

*பதிகம், ஊஞ்சல், சிந்து, இரட்டை மணிமாலை கும்மியோடு*
*அதிகளவு மொழிபெயர்ப்பு நூல்களும் எழுதிய - இப்*

*புலவர் பிறந்த ஊர்தான்,*
*'மயிலணி' என்ற பழைய பெயர் கொண்ட*

*'வெள்ளியங்கிரி' என்னும் பொருள் கொண்ட*
*சுன்னாகம்*

*சுன்னாகத்தில் பிறந்த அத்தமிழ் வல்லவர் தான்*
*சுன்னாகத்து அம்பலவாணர் பெற்றெடுத்த*

*'குமாரசுவாமிப் புலவர்' - இப்*

*பெருமைக்குரிய புலவரைப் பெற்ற சுன்னாகத்தைத் தாண்டி - அங்கும்*

*மக்கள் நிராகரிக்க மேலிடத்து உத்தரவை எதிர்பார்த்து*
*நிப்பதா போவதா நிலையான முடிவுக்காய்*

*காத்திருக்கும் வெள்ளைப் புறாக்களையும்*
*அவதானித்து நகருகிறோம்...*

**(தொடரும்)**

# கோட்டாவின் சூழ்ச்சித் திட்டத்தை தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும்!

## - அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை!

International Council of Eelam Tamils
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்கு அவசர அவசரமாக நாள் குறித்து நேரம் தீர்மானித்து கோட்டாபய ராஜபக்ச விரித்துள்ள சூழ்ச்சித் திட்டத்தை தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும் என்பதை அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை உரிமையுடன் வலியுறுத்திக்கொள்கின்றோம்.

சிறிலங்காவின் சனாதிபதி அழைத்தவுடன் வரிந்து கட்டிக்கொண்டு செல்வதற்கு இந்த விடயமானது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகளின் குடும்ப விவகாரம் அல்ல. இலங்கையில் இருந்து வெள்ளையர்கள் வெளியேறிய காலத்தல் இருந்து திட்டமிட்ட ஒடுக்கு முறைகளைத் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் ஒரு தேசிய இனத்தின் இருப்புச் சம்பந்தமான பிரச்சினை.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளையும், நீதிக்கான கோரிக்கைகளையும் எதேச்சதிகார மனப்போக்கில் ஒட்டுமொத்தமாகவே நிராகரிப்பதுடன் நின்றுவிடாது திட்டமிட்ட இனவழிப்பு யுத்தத்தை ஆட்சி-அதிகார துணையுடன் வடக்கு, கிழக்கில் முழுவீச்சுடன் தொடர்ந்துவருவதுடன், தன்னை பௌத்த - சிங்கள மக்களின் தலைவனாகவே பகிரங்கமாக பிரகடனப்படுத்திவரும் இலங்கையின் இன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் சூழ்ச்சித் திட்டமே பேச்சுக்கான அழைப்பாகும்.

அனைத்துலக ரீதியாக எழுந்துவரும் நேரடி, மறைமுக அழுத்தங்களில் இருந்து தப்பிக்கும் சூழ்ச்சித் திட்டதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் தலைமைகள் அனைவரும் ஒன்றுபட்டு ஓரணியாக செயற்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் கோரிக்கைகள் யாதென கோட்டா அன் கோவுக்கு நன்றாகவே தெரியும். அதனை எடுத்துச் சொல்வதற்காக இந்த சந்தரப்பத்தை பயன்படுத்த உள்ளோம் என்ற பேரில் கோட்டாவுடனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியாயப்படுத்த முனைவது வாக்களித்த மக்களை ஏமாற்றி கழுத்தறுக்கும்செயலாகும்.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வை நோக்கிய முன்னெடுப்பு எதுவாக இருப்பினும், ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே அரசியல் செய்வதாக கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயற்பட்டுவரும் அனைவரும் ஓரணியாக செயற்படுவதன் மூலமே அவர்களது கூற்றை அர்த்தப்படுத்த முடியும்.

ஆகவே, அனைத்துலக அழுத்தங்கள், நெருக்கடிகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் ஒரே நோக்கத்திற்காக கோட்டா விடுத்துள்ள பேச்சுக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக மறுக்க வேண்டும் என்பதுடன், ஈழத் தமிழ் மக்களின் தீர்வு விடயம் தொடர்பான எந்த பேச்சுவார்தைகளாக இருந்தாலும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளுடனும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் அமைப்புகளுடனும் இணைந்ததாகவே அமையவேண்டும். கல்லோயா குடியேற்றத் திட்டம் முதல் இன்றுவரை வரலாறு கற்றுத்தந்த பெரும் படிப்பினையூடாக சம்பந்தனும் சுமந்திரனும் இன்னும் கற்றுக்கொளவில்லை என்றால் இவர்கள் தங்கள் இருப்பிற்காக ஈழத்தமிழர்களை சிங்களத்திடம் அடகுவைக்கிறார்கள் என்பதே நிதர்சனம்.

பௌத்த - சிங்கள மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவும், அவர்களது உரிமைகளை பாதுகாக்கவுமாக பகிரங்க பிரகடனம் செய்துள்ள கோட்டாபய ராஜபக்சவிடம் தமிழ் மக்களுக்கான தீர்வை எதிர்பார்ப்பது கேலிக்கூத்தான விடயம் என்பதுடன் எங்களை நாங்களே ஏமாற்றும் செயலாகும். இன்று வரை ஒரு நல்லெண்ண சமிக்ஞையைக் கூட காட்டாமல் தொடர்ச்சியாக தமிழர் பூர்வீக பிரதேசங்களில் புத்தமயமாக்கலைத் தொடரும் பேரினவாத சிங்கள அரசுடன் என்றுமே பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காணமுடியாது.

இலங்கைத் தீவின் ஆதி குடிகள் என்ற உரித்தின் அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஏற்றுக் கொண்டு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு தயாராக உள்ளமையை வெளிப்படுத்தும் சமிக்ஞைகளை செயற்பாட்டு ரீதியாக கோட்டாபய அரசு காட்டிய பின்னரே தமிழ்த் தரப்பு பேச்சு தொடர்பில் சிந்திக்க முடியும் என்ற செய்தியை இடித்துரைத்து கோட்டாவின் சூழ்ச்சித் திட்டத்தை முறியடிக்குமாறு அன்புரிமையுடன் கேட்டுநிற்கின்றோம்.

- அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை.

## ஜீவன் முக்தி (பகுதி 560)

# நிஜமான சாதனை உயர்ந்த உணர்வு நிலையை அடைவதே

### தியானத்தின் பலன்கள்

ஜியானத்தின் பலன்களைப் பற்றி ஆராயும் முன்... மனிதனின் மிக முக்கியமான எதிர்பார்ப்புகள் என்னென்னவென்று பார்ப்போம். எல்லா மனிதர்களின் தேவைகள், ஆசைகளை கீழ்க்கண்ட ஐந்து வகைகளுக்குள் அடக்கிவிடலாம்.

இந்த ஐந்து வகைகளுக்கு அப்பாற்பட்டு தேவைகள் இருப்பதற்கான சாத்தியம் மிகவும் குறைவு.

1. உடல் நலம் (Physical health)
2. மன நலம் (Mental health)
3. அருமையான உறவுகள் (Good interpersonal relationship)
4. தேவையான அளவு செல்வம் (Sufficient wealth)
5. ஆனந்தம் (Bliss)

### தியான ரகசியம் - 1

உடல்பலம் மனோபலம் ஆன்மபலம் ஆகிய மூன்றையும் ஒரே நேரத்தில் அதிகரிக்க வழியிருக்கிறதா?

இருக்கிறது.

என்ன?

தியானம்.

யார் தியானம் செய்யக் கூடாது?

சிரிக்கும் குழந்தை ஆனந்தமாயிருக்கும் ஞானி.

யார் தியானம் செய்ய வேண்டும்?

மற்ற எல்லோரும்.

எப்போது தியானம் செய்யக் கூடாது?

ஆனந்தத்தையும் ஆரோக்கியத்தையும் அருளும் அருமருந்து தியானம். ஒருவேளை நீங்கள் ஏற்கெனவே முழு ஆரோக்கியமானவராகவும் ஆனந்தம் நிறைந்தவராகவும் இருந்தால்... மருந்து தேவையில்லை.

ப: சரியான தியானம் எது?

வாழ்வின் ஒவ்வொரு சம்பவமும் வேதம். வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு உயிரும் குரு. வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் தியானம்.

### உடலும் மனமும் குணமாகும் - தியானத்தால்

ஆரோக்கியம் என்றால் என்ன?

இந்தக் கேள்விக்கு பெரும்பாலானவர்கள் சொல்லும் பதில் நோய்களே இல்லாத நிலைதான் ஆரோக்கியம் என்பதாகும். இந்தக் கருத்து முழுக்க முழுக்க ஆரோக்கியத்திற்கு எதிரானது தவறானது.

ஒரு சிறிய உதாரணம் சொன்னால் எளிதாக இதைப் புரிந்துகொள்ள முடியும்.

'பணக்காரர் யார்?' என்று கேட்டால் 'கடன்களே இல்லாதவர்' என்று பதில் சொன்னால் எவ்வளவு அபத்தமாயிருக்கும்?

ஒரு கூலித் தொழிலாளி கடன்களே இல்லாமல் இருக்கலாம். உடனே அவரைப் பணக்காரர் என்று சொல்ல முடியுமா?

ஒரு தொழிலதிபர் நிறைய வங்கிக் கடன்களை வைத்திருப்பார். கடன்கள் இருப்பதால் இவரை ஏழை என்று சொல்ல முடியுமா?

பணக்காரர் என்பதற்கு எது அளவுகோல்....?

ஆரோக்கியம் என்பதற்கு எது அளவுகோல்...?

ஆரோக்கியத்தின் அளவீடாக நோய்கள் இருக்கிறதா? இல்லையா? என்பதை மட்டும் வைத்து முடிவு செய்யவே முடியாது ஆரோக்கியம் என்பது ரம்மியமான சுகஉணர்வு சம்பந்தப்பட்டது. மனிதனை சதா உற்சாகமாக வைத்திருக்கும் உள்ளத்தின் உற்சாக உணர்வு சம்பந்தப்பட்டது.

குழந்தைகளைப் பாருங்கள்! எவ்வளவு உற்சாகமாக இருக்கிறார்கள்!

குழந்தை ஞானி இருவரின் முகத்திலிருக்கும் மலர்ச்சியே அவர்கள் ஆரோக்கியமாக இருக்கிறார்களென்று சாட்சி சொல்லும்.

நம்மிடமிருந்த ரம்மியமான இந்த சுகஉணர்வு என்று குறைய ஆரம்பிக்கிறதோ அன்றே ஆரோக்கியம் மறைந்து விடுகிறது.

உங்கள் முகத்தை கண்ணாடியில் பாருங்கள். மலர்ச்சி எவ்வளவு குறைந்து போயிருக்கிறதோ அந்த அளவுக்கு ஆரோக்கியம் குறைந்து போய் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளுங்கள்.

விளைவே ஒருநாள் நோயாக வெளிப்படும். சுகஉணர்வு என்றோ குன்றிப் போனதின் இன்றைய வெளிப்பாடுதான் நோய்.

தியானத்தின் மிக முக்கியமான செயல் நாம் இழந்து விட்ட சுகஉணர்வை மீட்டுத் தருவதே... தொடர்ந்து தியானத்தைச் செய்து வர உடலில் உள்ளத்தில் உற்சாக உணர்வு அதிகமாக ஆரம்பிக்கும்.

உடலில் இருக்கும் நச்சுக்களெல்லாம் சிரத்தையோடு செய்யப்படும் தியானத்தால் உடலை விட்டு வெளியேறிவிடும். நச்சுக்கள் அகன்றால் உள்ளுக்குள். இருக்கும் உற்சாகம் முழுமையாக வெளிப்படும். ஆரோக்கியம் கிடைத்துவிடும்.

தியானங்கள் நமது உடல் ஆரோக்கியத்திற்கு என்ன செய்கின்றன என்ற மிகப் பெரிய ஆராய்ச்சி ஒன்று சென்ற வருடம் நடத்தப்பட்டது.

அந்த ஆராய்ச்சியின் முடிவுகள் நம் அன்றாட வாழ்க்கைக்கு நேரடியாக உதவுபவை.

ஆராய்ச்சியின் முடிவுகள் - 1.

சும்மா பாருங்கள் சாட்சியாக பாருங்கள்.

### தியானத்தின் பங்கு - உடல் நலத்தில்

1. தியானம் செய்வதால் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைத்தும் குறை இரத்த அழுத்தத்தை உயர்த்தியும் சராசரியான ஆரோக்கிய இரத்த அழுத்த நிலையை நோக்கி (Average B.P.Level) இரத்த ஓட்ட மண்டலமானது தன்னைத் தானே சரிசெய்து கொள்கிறது.

2. நோய் எதிர்ப்பு சக்தி தியானம் செய்யும் அளவுக்கேற்ப அதிகரிக்கிறது. மருத்துவ உலகம் தியானத்தையும் ஒரு மருந்தாக அங்கீகரித்திருப்பதற்குமிக முக்கியமான ஒரு காரணம் தியானத்தினால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாவதுதான்!

3. உடலின் சூட்டைத் தணித்து ஆரோக்கியமான சுத்த உஷ்ணத்தைத் தியானம். ஏற்படுத்தித் தருகிறது.

4. சர்க்கரை நோயால் வரும் உடல் சோர்வு அதிகப் பசி அதிக தாகம் ஆகியவை தியானத்தைத் தொடர்ந்து செய்யும்போது குறைந்துவிடுகிறது உற்சாகம் பிறக்கிறது.

5. பலரின் இரத்தத்தின் சர்க்கரை அளவை சராசரி நிலைக்கு (Average blood sugar level) கொண்டு வந்து விடுகிறது.

6. நமது உடலில் செல்கள் உதிரும் காலத்தைக் கூட்டுகிறது. அதாவது செல்களின் வாழ்நாளை மனிதனின் ஆயுட்காலத்தை தியானம் அதிகரிக்கிறது.



7. செல்களின் வாழ்நாள் அதிகமாவதால் முகத்தில் இளமையும் பொலிவும் கூடுகிறது. முதுமையடைதல் கிழடு தட்டுதல் தள்ளிப் போய் விடுகிறது.

8. உடலில் உள்ள எல்லாச் சுரப்பிகளும் உயிர்ச் சக்தியால் நிரப்பப்படுகின்றன. Hormonal balance என்று அழைக்கப்படும் சுரப்புநீர் சமநிலையை நம் உடல் அடைகிறது.

9. உடலின் நச்சுப்பொருட்கள் toxins நீக்கப்படும் வேகம் அதிகரிக்கிறது.

10. தசைகளில் இருக்கும் பிடிப்புகள் (muscle cramps) தளர்வடைகிறது. எலும்புகள் வலுவடைகின்றன. (bone strength)

11. மனச்சோர்விலிருந்து (depression) மனிதனைக் குணப்படுத்தும் antidepressive chemicals தியானத்தினால் உடலுக்குள் அதிகம் சுரக்கிறது.

12. தியானம் தரும் உற்சாகச் சக்தியால் முகம் மலர்ந்து பொலிவடைகிறது. மனிதனின் செயலாற்றல் திறன் (working efficiency) அதிகரிக்கிறது.

13. அதிகமாகப் படபடக்கும் இதயத் துடிப்பைத் தியானம் கட்டுக்குள் கொண்டு வருகிறது.

14. தியானத்தினால் ஏற்படும் மாற்றங்கள் மனிதனுக்குள் சந்தோஷ உணர்வைத்தரும் வேதிப் பொருட்களை (happy chemicals) உடலுக்குள் சுரக்க வைக்கிறது.

15. உடல் மன சமச்சீர்நிலையை (mind body balance) தியானம் ஏற்படுத்துகிறது.

16. தூக்கமின்மை (insomnia) என்ற வியாதியைத் தியானம் சரி செய்கிறது. தூக்கத்தின் தரத்தைத் தியானம் அதிகப்படுத்துகிறது.

இவ்வளவு மருத்துவ குணங்களையும் தியானம் பெற்றிருப்பதால்தான் தியானத்தை ஒரு மருத்துவ முறையாகவே இன்று மருத்துவ உலகம் அங்கீகரித்திருக்கிறது.

பல இலட்ச ரூபாய்கள் செலவு செய்து தொடர்ந்து மருத்துவ ரீதியான ஆராய்ச்சிகள் பலவும் இந்தத் தியானங்களின் மீது செய்யப்படுவதற்கு தியானத்தின் இந்த மருத்துவ குணங்களே முக்கிய காரணம்.

### தியானத்தின் பங்கு - மன நலத்தில்

உடல் நலத்திற்கு ஒரு தியானம் மனநலத்திற்கு ஒரு தியானம் என்றெல்லாம் தனித்தனிப் பாகுபாடுகள் தியானத்தில் கிடையாது. உடல் நலத்தையும் மனநலத்தையும் தியானம் ஒரே நேரத்தில் சீராகச் சரிசெய்து கொண்டே வரும். உடல் நலமாக நலமாக மனமும் வளமடைந்து கொண்டேயிருக்கும். எந்த ஒரு சூழ்நிலையிலும் வெறும் தியானம் மாத்திரமே முழுப்பலனைத் தந்துவிடாது.

தியான முறையோடு ஞானக் கருத்துகளும் சேரும்போது மட்டுமே தியானம் முழுமையான பலனைத் தரும். மனத்தின் நுட்பமான கள்ளத்தனங்களையும் கபடத்தனங்களையும் ஞானக் கருத்துகள் மூலமாகத்தான் சட்டென்று புரிந்து கொள்ள முடியும். நம்முடைய எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணமான அகங்காரத்தின் ஆணிவேர் வரை சென்று அதை அழிக்க ஞானக் கருத்துகளின் அணுகுமுறையும் தியானத்தின் சக்தியும் ஒருசேரத் தேவை.

ஏற்கெனவே தரப்பட்டுள்ள தியானம் பற்றிய ஆராய்ச்சி முடிவுகளில் 11-ல் இருந்து 16-ஆவது வரையுள்ள முடிவுகள் தியானம் மனநலத்திற்குச் செய்யும் நன்மைகள் தரப்பட்டுள்ளன.

### தியானத்தின் பங்கு - உறவின் இனிமையில்

அருமையான மனிதரிடம் துர்க் குணங்கள் வெளிப்பட வாய்ப்பே இல்லை. ஒரு மனிதரின் உடலும் மனமும் நிம்மதியாக இருக்கும்போது அவர் மற்றவரின் நிம்மதியைக் குலைக்க வாய்ப்பேயில்லை. உடலும் மனமும் நலமாக இல்லாமல் நிம்மதி இழந்து தவிக்கும் மனிதர் இயல்பாகவே மற்றவரின் நிம்மதியை குலைக்கவே முயற்சிசெய்வார்.

நம்முடைய உறவுகள் சுமூகமாக இல்லாதிருப்பதற்குக் காரணம் உடலும் மனமும் சுமூகமான நிலையில் இல்லாது இருப்பதுதான் முக்கியமான ஒரு காரணமாக இருக்கிறது.

உள்ளேயிருக்கும் உடல் மன வேதனைகள்தான் வெளியே சச்சரவாக வெடிக்கிறது. இன்னொருவரிடம் சண்டையிடத் தூண்டுகிறது.

உடலையும் மனத்தையும் ஸ்திரப் படுத்துவதினாலேயே இவற்றிற்கு முற்றுப் புள்ளி வைத்துவிடலாம்.

ஆரோக்கியமான மனிதர் எப்போதும் சந்தோஷமாகச் சிரித்து அவர் இருக்கும் இடத்தையே கொண்டாடிக் கொண்டே இருப்பார். சிரித்துப் பேசுபவரிடம் மற்றவர்களும் இயல்பாக சிரித்துப் பேசவே முயற்சி செய்வார்கள்.

அப்படியே சச்சரவுகள் ஏதேனும் ஆரோக்கியமான மனிதரைச் சுற்றி உருவானாலும் மனத்தெளிவு மூலமாக அவரே அதை சுலபமாகத் தீர்த்து விடுவார்.

தியானம் தொடர்ந்து செய்யும் ஒருவர் உடல் மனநலம் பெற்றிருப்பதோடு ஆரோக்கியமான மனித உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் கலையையும் எளிதாகக் கற்றுவிடுவார்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நீங்கள் இனிமையான மன உணர்வில் வாழ்வதனாலேயே இனிமையான மனிதர்களை உங்களை நோக்கி ஈர்ப்பீர்கள்.

### தியானத்தின் பங்கு - போதிய செல்வத்தில்

செல்வத்தைச் சேர்ப்பதற்கான முதல் அடிப்படை தேவை உடல் ஆரோக்கியம். அதற்கடுத்த முக்கியமான தேவைகள் மனத் தெளிவும் புத்திசாலித்தனமும்.

தியானத்தினால் ஒருவரின் முடிவெடுக்கும் திறன் (decision making capacity) மற்றும் புத்திசாலித்தனம் (intelligence) நேரடியாக அதிகமாகிறது. அதுமட்டுமல்லாமல் ஆனந்தத்திற்கே செல்வத்தை ஈர்க்கும் குணம் உண்டு யானம் மேற்சொன்ன எல்லாத் தன்மைகளையும் ஒன்றாய் அதிகரிக்கும்

நாம் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய இன்னொரு உண்மை எந்த ஒருபுத்திசாலியும் தேவைக்கதிகமாகச் சொத்துகளைக் குவிப்பதில் நேரத்தை வீணடிக்கமாட்டார்.

தியானத்தைத் தொடர்ந்து செய்யும் தியானியால் தமக்குத் தேவையான அளவு சொத்துகளைச் சர்வசாதாரணமாக ஒரு விளையாட்டைப் போல் சேர்த்துவிட முடியும்.

தேவைக்கதிகமாகச் சொத்துக் குவிப்பில் வாழ்வையே வீணடிக்கும் அவலத்திலிருந்து தியானம் ஒருவரை மீட்டும்.

சுருங்கச் சொன்னால் வெளியுலக வாழ்வை வளமாய் வாழத் தேவையான வளங்களை நேரடியாய் அதிகரிக்கும் குணங்களை தியானம் அதிகரிக்கும்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 990



## பத்திரகாளி அம்பாள் ஆலயம்
## திருகோணமலை

"சிலையாக நின்றாலும் சீரான வாழ்வுதரும்
செம்மை சேர் எழிலரசி
செவ்வானம் பொழிகின்ற சிங்கார அருள்முத்து
தேவியுந் தன் அருளாசியே
நித்தமும் சித்தத்தில் நின்றுமே அருளூட்டும்
நீடுபுகழ் உலகரசியே
நத்திடும் நங்கையர் மாங்கல்யம் காத்திடும்
நாயகி மாதரசி நீயே."

அன்னையின் ஆணையை ஏற்ற இராமேஸ்வரஅந்தணர், தக்கிணகைலாயமாகிய திருகோணமலைக்கு வந்து, கனவிலே குறிப்பிடப்பட்ட இடத்தைத் தேடிக்கண்டுபிடித்து, புதைக்கப்பட்டிருந்த கிடாரத்தினை வெளிக்கொண்டுவந்தபோது, அதனுள் அன்னை பத்திரகாளியின் திருவுருவச்சிலை (தாமிரவிக்கிரகம்), மற்றும் தீபத்தட்டு, பூசைக்குப் பயன்படும் பொருட்கள், ஆகியவற்றைக் கண்டெடுத்தார். அத்திருவுருவத்தை முறைப்படி பூசை செய்து வணங்கி, வழிபட்டுத் தவத்தை மேற்கொண்டார். ஆலயத்திலே காலத்திற்குக் காலம் மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும், இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட அம்பாளின் இத்திருவுருவத்தினைத் தற்பொழுதும் ஆலயத்திலே காணலாம். சில விசேட உற்சவ காலங்களில், அம்பாளின் இத்திருவுருவத்தினை எழுந்தருளச் செய்வது வழக்கமாகக் காணப்படுகின்றது.

ஆலயத்திலுள்ள சிங்க வாகனம்பற்றிய கதையும் அற்புதமானது. பத்திரகாளி அம்பாளின் அருளைப் புலப்படுத்துவதாக இக்கதை காணப்படுகின்றது. ஆலயத்திலுள்ள சிங்கவாகனம் கடல் அன்னை அளித்த பரிசாகும். ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியாவிலிருந்து சிங்க வாகனம் ஒன்றை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட கப்பல், திருகோணமலைக் கடற்பரப்பில், பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு நேராக வந்ததும் ஓட மறுத்துவிட்டது. அம்பிகையின் அருளால் கப்பல் தலைவன் தான் கண்ட சொப்பனத்தின்படி, கப்பலில் இருந்த சிங்க வாகனத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் சேர்த்தபின்னரே மீண்டும் கப்பல் ஓடத் தொடங்கியது. இவ்வாறு, ஆலயத்திற்குச் சிங்க வாகனம் வந்தது பற்றிய கர்ணபரம்பரைக்கதை வழங்கிவருகின்றது. மிகப் பயங்கரமான தோற்றத்துடன் குழந்தையொன்றைக் கவ்விய நிலையில் இந்த வாகனம் காணப்பட்டுள்ளது. பின்னர் சிங்கவாகனத்தினின்றும் குழந்தையை நீக்கிவிட்டு, சிங்கத்தின் பிடரி மயிர் முதல் உடல்வரை சீவிச் சிறுப்பித்துக் காணப்படுவதே, இப்பொழுது ஆலயத்திலுள்ள சிங்கவாகனமாகும். இவ் வாகனம் தொடர்பான கல்வெட்டொன்றும் ஆலயத்திலுள்ளது. பத்திரகாளி அம்பாள் மகிஷாசுரமர்த்தனத்திற்கு எழுந்தருளும்பொழுது மட்டுமே சிங்கவாகனம் பயன்படுத்தப்படுகின்றது.

மகிஷாசுரமர்த்தனம் நவராத்திரி விழாவோடு தொடர்புடையது. மகிஷாசுரன் என்னும் அரக்கன் தனது ஆணவத்தால் முனிவர்களுக்கும், ஏனையோருக்கும் துன்பத்தை ஏற்படுத்தி வந்தான். துன்பம் தாங்காது அனைவரும் இறைவனிடம் முறையிட்டனர். அடியவர் துயர்தீர்க்க அன்னை பராசக்தியானவள் துர்க்கை வடிவெடுத்து, மகிஷாசுரனை அழித்து, அனைவரையும் காப்பாற்றி அருள் புரிந்தாள். இந்நாளில் வன்னிவாழைவெட்டும் நிகழும். மகிஷாசுரனாக வாழையொன்றினை உருவகம் செய்தே வாழைவெட்டு நிகழும். மகிஷாசுரமாத்தனம் பல அரிய கருத்துக்களைக் கொண்டது. அன்னை பராசக்தி, அதர்மத்தின் உருவான மகிஷாசுரனை அழித்ததாகக் கூறுவது, மனித மனத்திலே குடிகொண்டுள்ள மகிடமாகிய தாமச (அகங்காரம்) குணத்தை அழித்து, அமைதியான சாத்வீக குணத்தை மக்களுக்கு அருளிய திருநாளாக மகிஷாசுரமர்த்தனத்தைக் கொள்ளலாம்.

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சம்பவமொன்று, பத்திரகாளியின் மீது மக்கள் பயபக்திகொள்ள வைத்துள்ளது. பொதுவாக அம்மன் எழுந்தருளியிருக்கும் ஆலயச் சுற்றாடல்களில், மக்கள் ஆசாரமாக நடந்துகொள்வது வழக்கம். இதை மீறி நடப்போர் பல துன்பங்களுக்கு ஆளாவதை நடைமுறையில் பலரும் அனுபவித்துள்ளனர். இவ்வாறான சம்பவமொன்று பத்திரகாளி கோயிலோடும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. யாவுகப் பெண்மணியொருவர் தலைவிரிகோலமாக இவ்வாலயத்தின் முன்பு அகங்காரத்துடன் சென்றார். வீடுசென்ற பெண்மணியுடைய தலை ஒரு பக்கம் திரும்பிக் கழுத்து வாங்கலால் பெரும் அவதிப்பட்டார். அன்று சொப்பனத்திலே, அம்மாளை அவமதித்து ஆசாரமற்று நடந்ததாகக் கனவு கண்டு, தனது குற்றத்தை உணர்ந்து, ஆலயத்திற்கு வந்து, நேர்த்திக்கடனாகத் தனது தலைமுடியைக் கத்தரித்துக் கொடுத்தார். இதன் பின்னர் அப்பெண்மணி கழுத்து வாங்கலில் இருந்து சுகமடைந்தார். இத்தலை முடியைப் பாதுகாத்து வைத்திருந்து மகிஷாசூரசம்மாரம் நடைபெறும்பொழுது அம்பாளுடைய சடைமுடியோடு சேர்த்துக் கட்டி, அலங்கரிக்கும் வழக்கம் வழமையில் இருந்துள்ளது. இவ்வாறு பெண்மணி நேர்த்திக்கடனாக அளித்த தலைமுடியின் ஒருபகுதி தற்பொழுதும் உள்ளது.

முன்னொருகாலத்திலே இவ்வாலயத்திலே பூசை செய்யும் குருக்கள் ஒருவர் தன்னுடன் தனது மகனையும் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். இரவுப் பூசை முடிந்ததும், ஆலயத்துள் மகன் இருப்பதை மறந்து ஆலயத் திருக்கதவை மூடிவிட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டார். வீட்டிற்குச் சென்று சாப்பிடும்வேளையில் பிள்ளையைக் காணாமல் எல்லா இடமும் தேடிவிட்டு ஆலயத்திற்கு வந்து பார்த்தபோது, பிள்ளை அங்கிருப்பதைக் கண்டு மனைவியிடம் மகன் கோயிலுள் இருப்பதைத் தெரிவித்தார். அத்தோடு, பூசை முடிந்து திருக்கதவை மூடியபின் ஆலயத்தைத் திறப்பது சாத்திர விரோதமானது என்றும், காலையில் மகனை அழைத்துவரலாம் என்று மனைவியிடம் கூறியபோதும், மனைவி அதனை ஏற்றுக்கொள்ளாமல், மகனை உடன் அழைத்து வரும்படி கூறினார். மனைவியின் வற்புறுத்தலால் ஆலயத்திற்குச் சென்று கதவைத் திறந்தபோது, ஆலய காவல்தெய்வமாகிய வைரவர் அந்தப் பிள்ளையை மமறைத்துவிட்டார்.

வளரும்...

A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

இலங்கைச் சுற்றுலா



2022 வைகாசி மாதம் முதலாவது கிழமை.
இலங்கையில் உள்ள முதல் தரமான சுற்றுலா தளங்கள், கோவில்கள்,
தேவாலயங்கள், புத்த விகாரைகள், (மசூதி) மொஸ்க் இவற்றில் நீங்கள்
விரும்பும் இடங்களுக்கும், உங்கள் உறவினர்கள் வீடுகளுக்கும் கூட்டிச்செல்லப்படும்.

| 1 STAR | 2 STAR | 3 STAR | 4 STAR |
|---|---|---|---|
| ★ | ★★ | ★★★ | ★★★★ |
| 1 கிழமை | 2 கிழமை | 3 கிழமை | 4 கிழமை |
| ¼ மாதம் | ½ மாதம் | ¾ மாதம் | 1 மாதம் |
| REGULAR C$2,500 | REGULAR C$3,000 | REGULAR C$3,500 | REGULAR C$4,000 |
| SALE PRICE C$ 2,000.00 | SALE PRICE C$ 2,500.00 | SALE PRICE C$ 3,000.00 | SALE PRICE C$ 3,500.00 |

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு, இந்த விலை.

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.

a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
விமான சீட்டு | தங்குமிட வசதி | விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை
காலை உணவு | மதிய உணவு | இரவு உணவு | மது பானம் | குளிர்பானம் | சுடுபானம்

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 49)*





## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

'இது என்ன பேச்சு நான் சோழர் குலத்தோடு ஆறு தலைமுறையாக நட்பு கொண்டிருக்கிறேன் உறவும் கொண்டிருக்கிறேன் இந்த சிறுபிள்ளை பரிகாசப் பேச்சைப் பொறுக்காது பாதகம் செய்ய நான் துணியவில்லை' என்றார். 'என் கணவரின் மரியாதையை நிலை நிறுத்த அவசியம் ஏற்படின் என் கைகளும் வலிமை கொண்டு வாளைத் தூக்கும் சக்தி பிறந்து விடும்' என்றவாறு தன் பெட்டியில் இருந்த வாளை எடுத்து தன் தலைக்கு மேல் உயர்தினாள் நந்தினி. பழுவேட்டரையர் நடுங்கிப் போனார். 'இந்தப் பெட்டியில் எத்தனை நாளாக இந்த வாளை வைத்திருக்கிறாய் எதற்காக?' என்று கேட்டார். 'என் கணவரின் கௌரவத்தைக் காத்துக் கொள்ளவும் தாங்கள் இல்லாத போது அதாவது ராஜாங்க காரியங்களில் ஈடுபட்டிருக்கும் போது என்னைக் காத்துக் கொள்ளவும் இந்த வாளை ஆயத்தமாக வைத்திருக்கிறேன். நாதா சம்புவரையரின் மாறுதலை-க் கவனித்தீர்களா? ஆதித்தகரிகாலர் பெண்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை கலியாணமே செய்து கொள்ள போவதில்லை என்று இருந்தார் ஆனால் இங்கு மணிமேகலையைக் கண்டு மாறிப் போய்விட்டார் போலத் தெரிகிறது. தம் அருமை மகள் தஞ்சாவூர் தங்க சிம்மாசனததில் ஏறப் போகிறாள் என்று பெருமிதம் கொண்டிருக்கிறார். அன்று தான் மதுராந்தகரை மணம் செய்வது என்றிருந்தார் இப்பொழுது எப்படி வாக்குத் தவறினார்! மணிமேகலை என்னில் பிரியம் கொண்டுள்ளாள் நானும் அவளில் பிரியம் கொண்டுள்ளேன் அந்தப் பெண் எனக்காக என்ன வேண்டுமானாலும் செய்வாள் கரிகாலரை இந்த வாளால் குத்திவிட்டு வா என்றால் அவள் அப்படியே செய்வாள்! ஆதித்தரின் இறுதிக் காலம் நெருங்குகிறது என்று நான் உணர்கிறேன் இது தங்கள் கையாலோ என் கையாலேயோ நேரப் போவது இல்லை. யமனுடைய பாசக் கயிறு அவனை நெருங்கிக் கொண்டிருக்கிறது தாங்கள் நம்பிக்கையுடன் தஞ்சாவூர் போகலாம். சாலை ஓரத்தில் அனாதையாக நின்ற என்னை உலகறிய மணந்து இளையராணி ஆக்கினீர்கள். தங்களுக்கு எந்தப் பழியும் வராது நான் பாதுகாப்பேன் நீங்கள் தஞ்சை போய் வாருங்கள்' என்றாள். பழுவேட்டரையர் தஞ்சை நோக்கிப் புறப்பட்டார். ஆதித்தகரிகாலர் தன் நண்பர்களுடன் வேட்டைக்குப் புறப்பட்டான். மணிமேகலையும், நந்தினியும் வீர நாராயண ஏரியில் நீராடி மண்டபத்ததிற்குப் புறப்பட்டனர். இவர்களுடன் இரு தோழிகளும் படகில் வந்தனர். அவர்கள் இவர்களுக்காக சாப்பாடு தயார் செய்தனர் வேட்டைக்குச் சென்ற கரிகாலன் வேட்டையில் வெறிகொண்டிருந்தான். அவ்வேளை காட்டுப் பன்றி இரண்டு மிரண்டு கொண்டு ஓடியது அதைக் கண்ட கந்தமாறன் 'இளவரசே நில்லுங்கள் அந்தக் காட்டுப் பன்றி போய்த் தொலையட்டும்' என்றான்.

அதைக் கேட்ட இளவரசர் 'நான் அதை வேட்டையாடுவேன்' என்றான். அதற்கு கந்தமாறன் 'காட்டுப் பன்றியைத் தாக்குவது சுலபமல்ல' என்றான். இளவரசரோ 'அதைத் தாக்காமல் நான் மாளிகை திரும்பமாட்டேன்' என்றான். பின்னர் இளவரசரும், 'வந்தியத்தேவனும் பேசிக் கொண்டே பன்றியைத் தொடர்ந்தனர். வந்தியத்தேவா பழுவூர் கிழவன் என் பாட்டன் தஞ்சை சென்றதைப் பார்த்தாயா தனியாக சென்றாரா இளையராணியையும் அழைத்துச் சென்றாரா?' என்று இளவரசர் கேட்க, வந்தியத்தேவன் 'அரண்மனை வாசல் திறந்ததையும் அவர் யானையில் தனியாக போவதையும் நான் பார்த்தேன்' என்றான். 'நந்தினியைத் தனியாகச் சந்தித்துப் பேச வேண்டும் அதை நினைத்தால் எத்தனை பீதி செம்பியன் மாதேவி அன்று நான் நந்தினியிடம் சகவாசம் வைத்திருக்கக் கூடாது என்று வற்புறுத்தினார். காரணம் இன்னமும் புரியாத புதிராக இருக்கிறது இப்பொழுது நீ அவள் என் சகோதரி என்று செய்தி கொண்டு வந்துள்ளாய் கந்தமாறனும், பாத்திபேந்திரனும் அவள் மோக வலையில் வீழ்ந்து கிடக்கின்றனர். பெரியபழுவேட்டரையர் பெரிய படை திரட்டி திரும்பி வருவார் என்ற சந்தேகமும் எனக்குண்டு நான் கடம்பூரில் இருந்து உயிருடன் போவேனோ என்று தெரியவில்லை எனக்கு ஏன் ஓலை கொடுத்து வரவழைத்ததாள் என்று தெரிகிறது என்னைக் கொன்று வீர பாண்டியனுக்கு பழிக்குப் பழி வாங்குவதற்காக வரவழைத்திருக்கிறாள்' என்றார் இளவரசர். வந்தியத்தேவனோ 'ஆமாம் ஐயா இத்தகைய விபரீதம் நேராமல் இருக்கத்தான் இளைய பிராட்டியும் முதன் மந்திரியும் என்னை அவசரமாக அனுப்பினார்கள் ஆனால் அவர்கள் கடம்பூர் போக வேண்டாம் என்று சொல்லியும் தாங்கள் இங்கு வந்துவிட்டீர்கள்' என்றான். 'ஆம் அவர்கள் மிக மிக அறிவாளிகள் தான்' எனத் தொடர்ந்தான் கரிகாலன். 'விதியை அவர்களால் தடுக்க முடியுமா? அழகிய பெண்ணின் மோகன சக்திக்கு அடிமையாகி எந்தக் குற்றமும் செய்ய தயாராகி விடுவார்கள் நீ ஏன் அதிலிருந்து தப்பித்துக் கொண்டாய்' என்றான். 'பூரண சந்திரனைப் பார்த்த கண்களுக்கு அந்த அழகிய பெண் முகம் மோகனமாகத் தோன்றாது' என்றான் வந்தியத்தேவன். 'யார் அந்தப் பெண்' என்றார் இளவரசர். 'இளவரசே கோபம் வேண்டாம் பழையாறு இளைய பிராட்டியைச் சொல்கிறேன்' என்றான். 'உலகிலே உள்ள மன்னாதி மன்னர் எல்லோரும் என் சகோதரியை கைப் பிடிக்கத் தவமிருக்கிறார்கள் நானும் தெரிந்தே உன்னை அவளிடம் அனுப்பினேன் நீயும் அவள் மனதிற்கு ஒப்புடையவனாக நடந்து கொண்டாய் அவள் மனதில் இடம் பிடித்தாய் ஆனால் இதையெல்லாம் பாத்திபேந்திரனிடம் சொல்லிவிடாதே! அவன் சோழ குலத்திற்கு மருமகனாகி தொண்டை நாட்டுக்கு மன்னனாக விளங்கலாம் என்று எண்ணியிருக்கிறான்' என்றான். 'இந்த சோழ குலத்தை எப்படிக் காப்பாற்றுவது நந்தினியின் கோபத்தை யாராலும் தடுக்க முடியாதே நீங்கள் அவர் சகோதரி என்று சொல்லி விடுங்கள் உங்களால் முடியாவிட்டால் நான் அதைச் சொல்லி விடுகிறேன் அதன் பின்னர் அவர் பழிவாங்கும் எண்ணம் அகன்று விடும்' என்றான் வந்தியத்தேவன். இவ்வாறு உரையாடியபடி நிராழி மண்டபத்தை நெருங்கினர்.

அப்பொழுது நந்தினியும் மணிமேகலையும் இருப்பதைக் கண்டனர். வந்தியத்தேவன் அங்கு வந்து 'தங்களை இங்கு கண்டது மகிழ்ச்சி' என்றான். அதற்கு 'தங்கள் வேட்டை அனுபவம் எப்படி' என்று விசாரித்தாள். அவனும், 'வேட்டையில் எனக்கு விருப்பமில்லை கரிகாலர் நன்றாக வேட்டையாடினார்' என்றான். அப்பொழுது நந்தினி 'பொய் சொல்வது உமக்கு நன்றாகப் பிடிக்கும் போல்' என்றாள். வந்தியத்தேவன் ஏன் இப்படிப் பேச வேண்டும்? என்று கேட்க, 'நீ செய்தவற்றை நான் சொல்ல வேண்டுமா?' என்றாள். 'தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசிப்பதற்கு என் உதவியை நாடினாய் முத்திரை மோதிரத்தை கொடுத்து உதவினேன். என்னைப் பார்க்க வரச் சொன்னேன் நீ என் அந்தப்புரத்திற்கு திருட்டுத்தனமாக வந்தீர். பின்னர் என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் ஓடிவிட்டீர் பழையாறை இளைய பிராட்டியை சந்தித்த பின் என்னிடம் திரும்பி வருவதாகச் சொன்னீர் அந்த வாக்கை நிறைவேற்றவில்லை உம்மை பல தடவை காப்பாற்றினேன்! ஆனால் உமக்கு நன்றியில்லை அந்த கரிகாலன் என் மனதை காயப்படுத்தினான். அதுவும் உமக்கு மகிழ்ச்சியாக இருந்தது' என்றாள் நந்தினி. 'அம்மணி நீர் சொல்வது தவறு என் நன்றியை தெரிவிக்க பல தடவை முயன்றேன் இப்பொழுது தான் அதற்கு வாய்ப்பு கிட்டியது கரிகாலர் தாங்கள் ஓலை அனுப்பியபடியால் தான் இங்கு வந்தார்' என்றான். 'ஆம் அதைத் தடுக்க நீர் ஓடோடி வந்தீர் அதுவும் இளைய பிராட்டியின் செய்தி கொண்டு வந்தீர்




உம்முடைய முயற்சி பலிக்கவில்லை இருந்தும் நீர் ஆதித்தர் பின்னாலே சுற்றிச் திரிகிறீர்' என்றாள். 'தேவி என் மனதில் பரிபூரண நன்றி குடிகொண்டுள்ளது தாங்கள் சோழ குலத்து தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் தர்மபத்தினி தங்களிடம் வர எண்ணிய பொழுதுதான் தடைகளே உண்டானது அதனால் இப்பொழுது என் நன்றியைத் தெரிவிக்கிறேன்' என்றான். 'நீர் சொல்வது சரி ஆனால் என்னை அவர் பலவந்தமாக பிடித்து வைத்திருக்கின்றார். அதனால் நான் அவர் மனைவி அல்ல எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பழிவாங்கவே அவர் மனைவியானேன். என் விரோதிகள் மீது பழிவாங்க உதவி செய்வீரா?' என்று கேட்டாள். வந்தியத்தேவன் திணறிப் போனான் 'தேவி இது என்ன யார் உங்கள் விரோதிகள்' என்று கேட்டபோது, கரிகாலன் அங்கு வந்தான். நந்தினியைப் பார்த்தான். வீர பாண்டியன் தலை வெட்டியபோது நடந்த சம்பவம் அவன் கண் முன்னே தோன்றியது. தலையைக் குனிந்தபடி 'நந்தினி நீ கந்தமாறனிடம் ஓலை கொடுத்து அனுப்பினாய் அதனாலேயே நான் இவ்விடம் வந்தேன் நடந்தவைகள் யாவற்றையும் மறந்துவிட்டாய் என்று எண்ணி இங்கு வந்தேன் அத்துடன் என் மன்னிப்பையும் கோருகிறேன்' என்றான் கரிகாலன். 'இத்தனை காலம் கழித்து எனக்கு மதிப்பு கொடுத்தீர்கள் மிக்க வந்தனம் தாங்கள் தங்கள் தந்தையைப் பார்க்க தஞ்சை வரவில்லை அதற்கு நான் தான் காரணம் என்று எண்ணுகிறேன் நான் தஞ்சையை விட்டுப் போய்விடுகிறேன் தாங்கள் தங்கள் தந்தையின் சிம்மாசனத்தில் அமர்ந்து மணிமகுடம் சூட்டிக் கொண்டு ராஜ்ஜியத்தை ஆளுங்கள்' என்றாள்.

அவ்வேளை அங்கு நின்ற வந்தியத்தேவன் தன் குதிரையைத் திருப்பிக் கொண்டு அங்கிருந்து சென்றான். கரிகாலன் நந்தினியைப் பார்த்து 'நந்தினி எனக்கு இப்பொழுது நாடாளும் ஆசையில்லை என் தந்தைக்கு நானும், அருள்மொழியும், குந்தவையும் மட்டும் பிள்ளைக் அல்ல! நீயும் கூடத்தான் அவர் மகள் என் சகோதரி' என்றான். இந்த நந்தினி ஊமையும் செவிடுமாகிய மந்தாகினி தேவியின் மகள் நந்தினியின் உருவம் மந்தாகினியின் உருவத்துடன் முழுமையாக ஒத்திருந்தது. ஆனால் சுந்தர சோழரின் மகள் என்பது தெளிவில்லை அதைவிட கல்கி தனது நூலில் தன் கற்பனைக் கதாபாத்திங்களாக கொண்டது உண்மை என்பது இன்று கல்வெட்டு ஆதாரங்கள் எதிலும் இவர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதை வைத்து நாம் முடிவுக்கு வரலாம்.

*தொடரும்...)*

---

**Jenita.Jaffna@gmail.com**
**தொகுப்பு, எழுத்தாக்கம்:** **மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---

ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 19
***** ***** ***** ****

கவிஞர் தியாரூ

வாஸ்து பார்த்து வீட்டைக் கட்டி
வீழ்ச்சி அடைந்தோர்
பலருண்டு - அந்த
சாஸ்தி ரத்தில் உள்ள தென்ன
உழைப்பில் தானே
உயர்வுண்டு!

சோதி டத்தில் சொக்கிச் சொக்கிச்
சோம்பிக் கிடப்பார்
பலருண்டு - கை
ரேகை தன்னில் எதுவும் இல்லை
ஊக்கம் கொண்டால்
வாழ்வுண்டு!

புனித தீர்த்தம் வியர்வை நீரே
புத்தன் சொன்னான்
புரிகிறதா - உன்
வியர்வை நீரில் உயரும் வாழ்வு
உன்றன் கண்ணில்
தெரிகிறதா!



மலேசிய மடல்

# இலங்கை இனப்பூசலுக்கு கொள்ளி வைத்தவர் முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக



நக்கீரன்



**கோ**லாலம்பூர், மார்ச் 22:

பதவிக்கு வந்த அடுத்த ஆண்டே, ஏழு இலட்ச ஈழத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக அறிவித்த டோன் ஸ்டீ.பன் சேனநாயகேதான், இலங்கை இன்றளவும் சந்திக்கும் இனப் பூசலுக்கும் இலட்சக்கணகான தமிழ் மக்களின் உயிர்ப்பலிக்கும் முதன்மைக் காரணம்.

1947 ஆகஸ்ட் 14-இல் பாகிஸ்தானும் 15-இல் இந்தியாவும் விடுதலை அடைந்தபின் அதே ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் இலங்கையும் விடுதலை அடைந்தது.

அடுத்த ஆண்டில் இலங்கை குடியுரிமைச் சட்டத்தை வரைந்தபோது, வெறும் ஐந்து ஆயிரத் தமிழர்களுக்கு மட்டும் குடியுரிமையைத் தந்துவிட்டு, மீதமிருந்த 7,00,000 தமிழர்களை நாடற்றவர்களாக அறிவித்தார் சேனநாயகே.

அப்போது, இலங்கை மக்கள் தொகையில் இது 11%.

1947 செப்டம்பரில் சுதந்திர இலங்கையில் நடைபெற்ற முதல் தேர்தலில் சேனநாயகேவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு, ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை கிட்டாத நிலையில், சிலோன் இந்தியர் காங்கிரஸ் கட்சியின் தயவில்தான் சேனநாயகே ஆட்சி அமைத்தார். இலங்கையின் முதல் ஆட்சியே தமிழரின் முட்டுக் கொடுப்பில்தான் முளைத்தது.

அப்படி இருந்தும், அனைத்து மக்களும் சக வாழ்வு வாழ்வோம் என்ற பரந்த நோக்கத்தைக் கொண்டிராத சேனநாயகே, தமிழ் மக்களை வஞ்சிக்கும் விதமாகவும் சிங்கள-தமிழ் மக்களிடையே பகைமைத் தீயை மூட்டிவைக்கும் விதமாகவும் அக்கிரமமான குடியுரிமைக் கொள்கையை நிறைவேற்றினார்.

1948 ஆகஸ்ட் 20-இல் அத்தகைய அநியாய குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, சிங்கள இடதுசாரி கட்சிகள், ஜி.ஜி. பொன்னம்பலனார் தலைமையிலான அனைத்து இலங்கைத் தமிழர் காங்கிரஸ் ஆகியவற்றுடன் சிலோன் இந்தியர் காங்கிரஸ் கட்சியும் கைகோத்து கடுமையான எதிர்ப்பு தெரிவித்த நிலையிலும் சேனநாயகே புறந்தள்ளி விட்டார்.

இலங்கை விடுதலை அடைந்திருந்தாலும் பிரிட்டீஷ் ஆட்சியாளர்களின் ஆளுமை இன்னமும் கொழும்பில் தொடர்ந்து கொண்டிருந்த நேரமது வலிமைமிக்க ஜவர்ஹர்லால் நேருவோ இந்தியாவின் பிரதமராக மட்டுமல்ல் மௌண்ட் பேட்டன் பிரபுவுடனான நட்பின் அடிப்படையில் இலங்கிலாந்திலும் ஆளுமைப் பெற்றிருந்தார்.



அப்படி இருந்தும், சேனநாயகே இத்தகைய முடிவைத் துணிந்து எடுத்தார் என்றால், தமிழர்கள் ஒருகணம் நிதானிக்க வேண்டியுள்ளது.

பிரித்தாளுதல் என்னும் குயுக்தியில், பிரிட்டீஷ் கண்காணியரின் தூண்டுதலும் தமிழர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நேரு அணுகியதும் இதில் சம்பந்தப்பட்டிருக்குமோ என்று கருத வேண்டி உள்ளது.

இலங்கை விடுதலை அடைவதற்குமுன் ஆங்கிலேயரின் அரவணைப்பில் அமைந்த முன்னோட்ட அரசாங்கத்தில், விவசாயம் மற்றும் நில மேம்பாட்டு அமைச்சராக இருந்தபோதே, சேனநாயகே சிங்கள மக்கள் வாழ்ந்த பகுதியில் ஒருவிதமாகவும் தமிழர்வாழ் நிலப்பகுதியில் வேறுவிதமாகவும் நில மேம்பாட்டு நடவடிக்கையை மேற்கொண்டு வந்தார்.

சிங்கள மக்களிடையே சேனநாயகே தோற்றுவித்த தமிழர் விரோதப் போக்கை, அடுத்தடுத்த வந்த சிங்கள ஆட்சியாளர்களும் அதை சிந்தாமல் சிதறாமல் தற்காத்து வருகின்றனர்.

சொந்தக் கட்சியினரிடையேயும் ஏனைய சிங்களத் தலைவர்களிடமும்கூட முரட்டு பாவணையில் சேனநாயகே நடந்து கொண்டதால்தான், ஐக்கிய தேசியக் கட்சியில் இவருக்கு அடுத்த நிலையில் இருந்த பண்டாரநாயகே, கட்சியில் இருந்து விலகி புதிதாக சுதந்திரக் கட்சியை உருவாக்கும் நிலையும் தோன்றியது.

இவ்வாறு, இறுமாப்புடன் அதிகார உலா வந்த காலத்தில் ஒரு நாள், வழக்கமான குதிரையேற்றப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சேனநாயகே, குதிரையில் இருந்து விழுந்து வலிப்பு நோய்க்கு ஆளானார்.

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருந்த சேனநாயகேவுக்கு, குதிரைச் சவாரியின்போது வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்தாரா அல்லது கீழே விழுந்ததால் வலிப்பு ஏற்பட்டதா என்பது தெரியவில்லை.

இருந்தபோதும் அவரைக்காப்பாற்ற இங்கிலாந்தில் இருந்து சிறப்பு மருத்துவக்குழு விமானம் மூலம் புறப்பட தயாரனது வின்ஸ்டன் சர்ச்சில் ஒருங்கிணைப்பில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது அந்த அளவுக்கு சிங்களத்தின் ஆளுமை லண்டனில் கொடிகட்டி பறந்துள்ளது.



இதற்கிடையில், இந்தியா-பாகிஸ்தான் நாடுகளில் இருந்து சிறப்பு நரம்பியல் மருத்துவர்களும் கொழும்பு விமான நிலையம் வந்தடைந்தனர். எல்லாம் கூடி வருவதற்குள் 32 மணி நேரம் மயக்க நிலையில் நீடித்த சேனநாயகேவின் உயிர் பிரிந்துவிட்டது.

அந்த நாள், மார்ச் 22, ஆண்டு 1952.

பொதுவாக, தலைவர்கள் என்றால் மக்களிடையே ஒற்றுமைத் தீபத்தை ஏற்றி வைப்பார்கள் சிங்களத் தலைவர்கள் என்றால் பிரிவினைத் தீயைத்தான் மூட்ட வேண்டும் என்ற பாடத்தைப் போதித்தவர் சேனநாயகே.

**நக்கீரன்** - Nakkeeran **013-244 36 24**


MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




0%வட்டி

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

றொறன்றோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# இவ்வார ராசிபலன்

## 25-03-2022 வெள்ளி தொடக்கம் 31-03-2022 வியாழன் வரையும்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** தனவரவுகள் பெருகும் வாரம். ஞாபகத்திறன் அதிகரிக்கும். தேக பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். தொட்ட காரியம் ஜெயமாகும். முயற்சியில் வளர்ச்சி அடையும். இரகசியம் காப்பது நல்லது. உதவிகள் குவியும். புதிய சிந்தனை உதயமாகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். பொருள்வரவு ஏற்படும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். தெய்வப்பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் கல்வி மேம்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். உயர் பதவி யோகமுண்டு. உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். நல்ல செய்திகள் நாடி வரும். தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவுகள் நிறைவேறும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். திடீர் பயணம் ஏற்படும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வீடு மனை யோகம் உண்டு. எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும்.குடும்பத்தில் குழப்பம் தீரும்.பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். பங்குச்சந்தை லாபம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,4*

*அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,P*




**ரிஷபம்:** வேண்டாத நபர்கள் விலகும் வாரம். விவாதம் வாக்கு வாதங்களாக மாறும். தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். உடல்நலம் சீராகும். வரவுகள் மிகுதியாகும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கடன் தொல்லை தீரும். மன அமைதி அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். அலைச்சல் ஆதாயம் தரும். பால் தானம் பாவம் போக்கும். வெற்றி எட்டும் காலம். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பணதேவைகள் அதிகரிக்கும். பதவி உயர்வு ஏற்படும். நல்லச்செய்திகள் நாடி வரும். இடையூறு அகலும். பிரார்த்தனை நன்மை தரும். கருத்து வேறுபாடுகள் விலகும். தொழில் வளர்ச்சி பெருகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். பூமியால் நன்மை உண்டு. நட்டமில்லாத திட்டங்கள் நிறைவேறும். மகிழ்ச்சியான செய்திகள் தேடி வரும். சுபச்செலவு அதிகரிக்கும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். அவமானங்கள் அகலும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு.

*வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,9,6,2*


*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,U*




**மிதுனம்:** குடும்ப பாசம் அதிகரிக்கும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. உடல்நலத்தில் அக்கறை தேவை. ஆனந்தம் குடிகொள்ளும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். வணிகத்தொழில் வளம் கூடும். உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். பொருளாதார நிலை உயரும். வெகுமதி பெருகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். தொழில் லாபம் கூடும். நன்மைகள் தொடரும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் தரும். எதிரிகள் பலம் குறையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. மிகவும் சுதந்திரமாக செயல்படுவீர்கள். காதல் கசக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,1,4*

*அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,I*




**கடகம்:** சாதகமான சூழ்நிலை அமையும் வாரம். பணப்பற்றாக்குறை நீங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் கூடும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். பணிவான பேச்சுக்கள் மன நிம்மதியை தரும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. மறைமுக எதிர்ப்புகள் விலகும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும் தனவரவு உண்டு. திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத்துறையில் வெற்றிக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பயணம் தவிர்ப்பது நல்லது. அரசு வகையில் ஆதாயம் சேரும். கடன் சுமை குறையும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். வீண் வம்புகள் விலகும். மெத்தனப் போக்கு மாறும். போட்டிகள் உருவாகி மறையும். கமிஷன் தொழில் லாபம் தரும். ஆதாயம் பெருகும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 2,5,9,4*

*அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J*




**சிம்மம்:** எண்ணிய காரியத்தில் வெற்றி கிட்டும் வாரம். வாழ்த்துக்கள் கிடைக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு. ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோ தைரியம் அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வீண் வம்பு விலகும். உடல்நலம் சீராகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். செயல்களில் நிதானம் தேவை. புதிய முயற்சி பலிதமாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நெருக்கடிகள் குறையும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை குறையும். ஆபரணத் தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்புகள் வரும். நட்பு வட்டம் விரிவடையும். அற்புதமான காலம்.

*வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 1,5,7,9*

*அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R*




**கன்னி:** பெருமைகள் கிடைக்கும் வாரம். பதற்றம் குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சி வெற்றி தரும். வழக்குகள் சாதகமாகும். விவசாயம் பலன் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விரோதங்கள் அகலும். உத்தியோக மாற்றம் ஏற்படும். எதிர்கால சிந்தனைகள் ஏற்றம் பெருகும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். தாய்வழி ஆதரவு பெருகும். கல்வியில் பெருமை சேரும். நன்மதிப்பு கூடும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். காரிய வெற்றி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. பகை மாறும். கௌரவம் உயரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3*

*அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,Y*




**துலாம்:** அருமையான வாய்ப்புக்கள் அமையும் வாரம். நினைவாற்றல் பெருகும். பணமும், பாராட்டுக்களும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனை அகலும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். செயல்பாட்டில் கவனம் தேவை. கடன் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். மருத்துவச் செலவு குறையும். வரவு திருப்தி தரும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விலகி சென்றவர் விரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். மனச்சுமை குறையும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேச பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கை உண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். உத்தியோக உயர்வு தாமதம் ஆகும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். இலக்கிய ஆர்வம் கூடும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 8,6,5,4*

*அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K*




**விருச்சிகம்:** இழந்த கௌரவம் திரும்ப கிடைக்கும் வாரம். தெய்வீகப் பற்று கூடும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சியை தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலைகள் காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. வெகுமதி தேடி வரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பெற்றோரின் அன்பு கூடும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தாய் தந்தை உதவி உண்டு. மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகனமாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 2,4,3,1*


*அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,L*




**தனுசு:** அசையா சொத்துக்கள் சேரும் வாரம். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். போட்டிகள் உருவாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வு நல்லது. முயற்சி பலன் தரும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு அதிகரிக்கும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. கடன் பிரச்சனை தீரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். பயணம் தவிர்ப்பது நல்லது. கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். பணப்புழக்கம் சரளமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய்கள் அகலும். செல்வாக்கு உயரும். பெயர் புகழ் கௌரவம் உயரும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். பணிவான பேச்சுக்கள் தேவை. சேமிப்பு வளரும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிர்ப்புகள் அடங்கும். இடமாற்றம் நன்மை தரும். முன்கோபத்தை தவிர்க்கவும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். மனப்பாங்கு ஏற்படும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். உணவு பிரியம் அதிகரிக்கும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். எதிர்ப்புகள் விலகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 1,9,7,3*

*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K*




**மகரம்:** திருப்புமுனையைச் சந்திக்கும் வாரம். சச்சரவுகள் அகலும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். குழப்பங்கள் நீங்கும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். காதலில் வெற்றிக் காண்பீர்கள். உடல்நலனில் அக்கறை தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளியூர் பயணம் உண்டு. இனிப்பான செய்திகள் வரும். வியாபாரம் வெற்றித் தரும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீட்டுத்தொல்லைகள் தீரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். புதுமையை விரும்புவீர்கள். சகோதர வழியில் கவனம் தேவை. மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தந்திரமாக செயல்படுவீர்கள். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வம்பு வழக்குகள் தீரும். வேலைப்பளு கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும்.

***(தொடர்ச்சி _37_ பக்கம்)***

# இவ்வார ராசிபலன்

(_36__ பக்கத் தொடர்ச்சி)

மகரம்: உடல்நிலையில் கவனம் தேவை. கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். தெய்வ நம்பிக்கைக் கூடும். முயற்சிகள் தாமதம் ஏற்படும். வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 4,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R





**கும்பம்:** உறவும், வரவும் கிடைக்கும் வாரம். பதவி உயர்வு கிட்டும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். பயணம் உற்சாகம் தரும். நண்பர்கள் பாராட்டு கிடைக்கும். உத்தியோக உயர்வு உண்டு. மங்களச் செய்தி வரும். பங்குச்சந்தை லாபம் தரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். பழைய பகை தீரும். பெரும-
ிதம்
நிறைந்த காலம். கலவரமான சூழ்நிலைகள் ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். ஆரோக்கியம் சீராகும். இனிய தகவல் வந்து சேரும். சாதனை படைக்கும் காலம். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு இனிக்கும். நீண்ட நாளைய கனவுகள் நிறைவேறும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பிள்ளைகளால் தன வரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் ஆதிக்கம் உயரும். தீர்த்த யாத்திரை உண்டு. பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மன பயம் ஏற்படும். உடம்பில் வலி வந்து நீங்கும். திடீர் பயணம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவி உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M




**மீனம்:** ஆரோக்கியம் சீராகும் வாரம். திருமகள் கிருபைகள் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். முயற்சிகள் வெற்றி தரும். வேலைப்பளு குறையும். பதவி உயர்வு கிட்டும். கமி'ன் தொழில் லாபம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். திக்கற்ற நிலை மாறும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவுகள் கூடும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. வியாபாரத்தடை நீங்கும். வீண் வம்பு அகலும். காதல் கை கூடும். விவேக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. நலமே விளையும் வாரமாகும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். பங்குச்சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. உங்களின் தனித்தன்மை வெளிப்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக்கூடும். வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3 அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Z

# உலகில் நாம் அறிந்திராத சுவாரஸ்யமான விடயங்கள்

இந்த உலகில் எண்ணற்ற அதிசயங்கள் காணப்படுகின்றன. தேட தேட பல ஆச்சரியங்களை தரும் இந்த உலக அம்சங்கள் கடவுளின் செயலா அல்லது விஞ்ஞானத்தின் பின்ணணியா? இந்த குழப்பம் ஒரு பக்கம் இருந்தாலும் இந்த உலகின் இத்தகைய சுவாரஸ்யங்களை அறிந்துக்கொள்ளும் ஆர்வம் அதிகரித்துக் கொண்டேதான் செல்கிறது. அவ்வாறானவற்றில் நாம் பெரும்பாலும் கேள்விப்படாத சிலவற்றை இந்த கட்டுரையில் பார்க்கலாம்.




1. உலகில் வானவில் பார்பதற்கு பொருத்தமான மற்றும் சிறந்த இடம் என பெயர் கொண்டது ஹவாய் (Hawai) ஆகும்.



2. உலகில் உள்ள அனைத்து மக்கள் தொகையும் Los Angeles இல் உள்ளடக்க முடியும்.



3. உயரம் குறைந்த மனிதர்கள் அதிகம் வாழும் இடம் இந்தோனேஷியா (Indonesia).




4. நேறணநடயனெ இல் காணப்படும் ஒரு நகரம் 85 எழுத்துக்களை கொண்டுள்ளது. இதனை வாசிக்க எமக்கு மிகவும் பொறுமை வேண்டும்.




5. உலகில் 55% மானோர் 30 வயதிற்கு உட்பட்டவர்கள்.




6. உலகிலேயே அதிக தீவுகளை கொண்ட நாடு ஸ்வீடன் ஆகும்.



7. உலகின் பல இடங்களில் உயிரியல் பூங்காவில் காணப்படும் பாண்டா கரடி சீனாவிடம் கடனாக பெறப்பட்டதே.



8. உலகில் காணப்படும் அனைத்து எறும்புகளின் மொத்த எடை உலகிலுள்ள அனைத்து மனிதர்களினதும் மொத்த எடைக்கு சமனாகும்.



9. North Korea மற்றும் ஊரடிய போன்ற நாடுகளில் Coca-Cola காணவும் முடியாது வாங்கவும் முடியாது.



10. பூமியின் ழணழநெ படலம் முழுமையாக புதுப்பித்து வருவதத்திற்கு 50 வருடங்கள் எடுக்கும்.

“இவ்வாறு உலகம் அள்ளித்தரும் அதிசயங்கள் பல. அதனை தேடி அறிந்துக்கொள்ள மனிதனின் ஆர்வம் ஒன்றே போதும்”.

**- இரா சஹானா**



**மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்**




# 'மஹாகவி' பாரதி பாடல்கள்

**அத்தியாயம் - 14**

“வெள்ளைமலர்மிசை, வேதக் கருப்பொரு
ளாக விளங்கிடுவாய்!
தெள்ளு கலைத் தமிழ்வாணி! நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்
எள்ளத் தனைபொழுதும் பயனின்றி
இராத் தென்றன் நாவினிலே
வெள்ள மெனப் பொழிவாய் சக்திவேல்,
சக்திவேல் சக்திவேல் சக்திவேல்!”





என வாணியைத் தொழுது பாடிய பின்பே, மேடை தோறும் தான் பங்கு கொள்ளும் நிகழ்ச்சியை ஆரம்பிப்பது அவரது வழக்கம். யார் அவர்? அவர்தான் பாரதி யார்?, என மேடைதோறும் பாரதியார் வரலாற்று பெருமைகளை பேசியும் - நடித்தும் பெரும் தொண்டாற்றி வரும் “இசைக்கவி“ ரமணன் என்று பெயர் கொண்ட கவிஞர் - எழுத்தாளர் - ஆன்மீக சிந்தனையாளர் ஆவார்.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக சென்னை ”பாரத வித்யா பவனும்”, ”ஸ்ரீ கிருஷ்ணா இனிப்பு நிறுவனமும்” இணைந்து நடத்தி வரும் ”காலங்களில் அவன் வசந்தம்” எனக் கவியரசு கண்ணதாசனை கொண்டாடிவரும் கவிதை இசை நிகழ்ச்சியின் சொந்தக்காரர் திரு இசைக்கவி ரமணன் ஆவார்.

அவ்விதமே வாழும் பாரதியாக வேடமணிந்து மகாகவியையே நேரில் பார்த்து மெய் சிலிர்பது போன்ற உணர்வைத் தந்து, பாரதி அய்யாவின் மேன்மையையும் - அவர் எழுத்துக்களையும் அர்த்த புஷ்டியுடன் விளக்கி வருகிறார்.

“மகாகவி“ பாரதியின் நேரடி சீடர் போன்று எண்ணம் - செயல் - கவிதையென இயங்கிவரும் வாழும் பாரதியான திரு. இசைக்கவி ரமணன் அவர்களை வாழ்த்தி பாராட்டுவோமாக! ஆரம்ப அத்தியாயங்களில் குறிப்பிடத் தவறிய சில தகவல்களை இவ்விதழில் பதிவு செய்கிறேன். அதாவது, பாரதியின் பாடல் உரிமைகளை அக்காலத்திய பிரபல நகை வர்த்தக நிறுவனமான ”சுராஜ்மல் அண்ட் சன்ஸ்” நிறுவனம் ரூபாய் 600 க்கு வாங்கி வைத்திருந்தது.

அந்த நிறுவனம் புரோட்காஸ்ட் (BROADCAST) என்ற பெயரில் 1934 இல் இருந்து வெளியிட்ட இசைத்தட்டுகளுக்காக ஒப்பந்தம் செய்திருந்தது. அதன்பின் 1946இல் ஏவிஎம் நிறுவனம் “நாம் இருவர்“ படத்தின் மூலம் பாரதியாரின் பாடல்களை பிரபலப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன், “சுராஜ்மல்“ நிறுவன உரிமையாளர் ஜெயசிங்காலால் மேத்தாவிடம் பேரம்பேசி ரூபாய் (10,000) ரூபாய் பத்தாயிரம் கொடுத்து அதன் உரிமையை பெற்றது.

வாழ்நாள் முழுவதும் குறைந்த வருமானத்தையே கண்ட அந்தப் பெரும் புலவன் பாடல்களுக்கு அவர் மறைந்து சுமார் 25 ஆண்டுகளுக்கு பின் பெருமதிப்பு ஏற்பட்டது!

“மகாகவி“ பாரதி ஐயாவின் சில குறிப்பிட்ட பாடல்கள், பல படங்களில் இடம் பெற்றிருந்தன. உதாரணமாக, “சின்னஞ்சிறு கிளியே...“
“மங்கியதோர் நிலவினிலே..“
“காக்கைச் சிறகினிலே..“
“நல்லதோர் வீணைசெய்தே..“
“மனதில் உறுதி வேண்டும்..“
“ஓடி விளையாடு பாப்பா..“ என பாடல் பல படங்களில் வெவ்வேறு மெட்டுக்களில் இசையமைக்கப்பட்டிருந்தன.

“சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா...“ பாடல் “நீதிக்கு தண்டனை“ - “குற்றங்கடிதல்“ படத்தில் இடம் பெற்றது போல் 1951 இல் வெளியான “மணமகள்“ படத்திலும் இணைக்கப்பட்டிருந்தது.

“கப்பலோட்டிய தமிழன்“ படத்தில் ஜீ. ராமநாதன் அய்யர் இசையமைப்பில் இணைக்கப்பட்ட ”காற்றுவெளியிடை கண்ணம்மா..” பாடல் மலையாள இசையமைப்பாளர் மோகன் சித்தாராவால் “தன்மத்ரா“ படத்திலும் கையாளப் பட்டிருந்தது!

1954 இல் வெளிவந்த “விளையாட்டுப் பொம்மை“ படத்தில் பிரபல நடிகரும் - பாடகருமான டி ஆர் மகாலிங்கம் அவர்கள், இசையமைப்பாளர் டி ஜி லிங்கப்பா இசையமைப்பில் பாரதியாரின்... “மோகத்தை கொன்றுவிடு“, “தீர்த்தக்கரையினிலே...” என இரு பாடல்களைப் பாடியுள்ளார்.

காலத்தை மீறி கனவுகண்ட “மகாகவி“யின் கவிதைகள் காலத்தை வென்று இன்றைய கலைஞர்களுக்கும் உத்வேகம் அளிப்பவையாக இருப்பது நமது பேறு. காதல் - வீரம் - தேசபக்தி - பாசம் - சோகம் - ஆனந்தம் என திரைப்படம் எதிர்பார்க்கும் அனைத்து உணர்ச்சிகளையும், வெளிப்படுத்தும் வரிகளுடன் இன்னமும் பல நூறு கவிதைகள் பாரதி புதையலில் காத்திருக்கின்றன.

அகழ்வாராச்சி செய்வது போல், பாரதி ஐயாயின் கவிதை புதையலை தோண்டி எடுத்து, நவீன திரைப்பட படைப்பாளிகள் அவரது பாடல்களைப் படங்களில் பயன்படுத்துவது தமிழுக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

இனி, பாரதி ஐயாவின் அதிகமான பாடல்களைப் பயன்படுத்திய படமாக வெளிவந்த “ஏழாவது மனிதன்“ திரைப்படத்தில் இடம்பெற்ற பாடல்களை பார்ப்போம்!

இப்படம் மூலம் தான் மறைந்த கலைஞரான அமரர் ரகுவரன் அறிமுகமாகி புகழ் பெற்றார். மிக திறமையையும் - வித்துவ மேன்மையும் நிறைந்த கர்நாடக சங்கீத வாத்தியக் கலைஞரான எல். வைத்தியநாதன் அவர்களுடைய இசைக் கோர்வையில் படத்தில் 11 பாரதி பாடல்கள் இடம்பெற்றிருந்தன. அவையாவன...

1. காக்கைச் சிறகினிலே நந்தலாலா... பாடியவர் கே ஜே யேசுதாஸ் (இப்பாடல் “திருமால் பெருமை“ படத்தில் பி சுசிலா அம்மையாரால் பாடப் பெற்றதாகும்.)
2. வீணையடி நீ எனக்கு... மேவும் விரல் நான் உனக்கு.. கே ஜே யேசுதாஸ் - பி நீரஷா இருவரும் இணைந்து பாடியிருந்தனர். மீண்டும் பெண் குரலில்
3. வீணையடி நீ எனக்கு.. நீரஷாவால் பாடப்பெற்றது.
4. நல்லதோர் வீணை செய்தே.. நலங்கெடப் பூமியில்.. பாடியவர் ராஜ்குமார் பாரதி
5. நெஞ்சில் உரமுமின்றி.. ராஜ்குமார் பாரதி இவர் பாரதிக்கு உறவினர்.
6. அச்சமில்லை.. அச்சமில்லை.. பாடியவர் எஸ் பி பாலசுப்பிரமணியம்
7. ஓடி விளையாடு பாப்பா.. பாடியவர்கள் கே ஜே யேசுதாஸ், சாய்பாபா இருவரும் (“கப்பலோட்டிய தமிழன்“ படத்திலும் இப்பாடல் இடம் பெற்றிருந்தது.)
8. “மனதில் உறுதி வேண்டும்“ பாடியவர் பி நீரஷா (கல்கியின் “கள்வனின் காதலி“ - “சிந்துபைரவி“ படங்களிலும் இப்பாடல் இடம்பெற்றிருந்தது)
9. “செந்தமிழ் நாடெனும் போதினிலே..“ பாடியவர் பி சுசீலா முதன் முதலாக ஏவிஎம்மின் “நாம் இருவர்“ படத்தில் இடம்பெற்ற பாடல்களான “ஆடுவோமே பள்ளு பாடுவோமே..“ பாடல் ஏழாவது மனிதனிலும் இடம்பெற்றுள்ளது. பாடியவர்கள் தீபன் சக்கரவர்த்தி - மாதங்கி - சுசீலா - சாண்டில்யன் ஆகியோர்.

“எந்த நேரமும் நின்மையல் ஏறுதடி..“ பாடியவர் கே ஜே யேசுதாஸ்.

**அடுத்த இதழில்...**
**மகாகவி பாரதியாரின் எட்டு பாடல்கள் இடம்பெற்ற பிரபலமான படம் எது?**

# அன்பின் தொனி - 647

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் -** Be Holy

### பரிசுத்த ஆவியின் நிறைவுக்கான ஏழு தேவைகள்

பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்று ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழ இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஏழு தேவைளையும் ஒழுங்குபட இங்கே தருகிறோம்:

1. மனந்திரும்ப வேண்டும்
2. ஞானஸ்நானம் பெற வேண்டும்
3. ஆண்டவரிடம் கேட்க வேண்டம்
4. தாகமாய் இருக்க வேண்டும்
5. இயேசுவிடம் வர வேண்டும்
6. பானம்பண்ண வேண்டும்
7. சரீரத்தை ஒப்புக்கொடுக்க வேண்டும்

மேலே கொடுக்கப்பட்ட தேவைகளைக் கைக்கொண்டு நடக்க ஜெபம் மிகவும் அவசியம். அதற்கான கிழ்க்காணும் சிறிய ஜெபம் உங்களுக்கு உதவுமென நம்புகிறேன்.

### ஆண்டவராகிய இயேசுவே!

பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்காக நான் தாகமாய் இருக்கிறேன். எனது உடலை உங்கள் ஆலயமாகவும், அதன் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகவும் பிரயோகிக்க முளுமையாக என்னை ஒப்புக் கொடுக்கிறேன். உங்கள் பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பி, என் உதடுகளிலிருந்து உங்களைத் துதிக்கும் துதியும், ஆராதனையும், ஸ்தோத்திரமும் ஜீவ ஊற்றாகக் கடந்துவர ஜெபிக்கி றேன். ஆமென்! ஆமென்!!

### பரிசுத்தவான்

பரிசுத்த தேவனையும் அவருடைய குணாதிசயங்களையும், அவருடைய மகத்துவமான செயல்களையும், பாவியான மனுஷனை பரிசுத்தனாக்க அவர் தாமே ஏற்படுத்திய இலகுவானதும், இலவசமானதுமான வழியையும், மேலும் அவன் பரிசுத்தத்தில் வாழ அவர் அளித்த தேற்றரவாளரான பரிசுத்த ஆவியா-னவரையும் குறித்த பல விபரங்களை இப்புத்தக ஆரம்பம் முதல் இதுவரை வாசித்து அறிந்திருக்கிறீர்கள். இந்த வழியில் ஒவ்வொரு பாவியான மனுஷனும் தனது பாவத்திவற்கு மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பாவ மன்னிப்பைப் பெற்று, தேவ நீதியின்படி முழுக்கு ஞானஸ்நானம் பெறும்பொழுது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறான். அப்பொழுது அவனுக்குள் வாசஞ்செய்யும் ஆவியானவர் அவனை சகல தேவ நீதிக்குள்ளும் வழி நடத்துகிறார். அந்த நபரும் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்து, தேவ சத்தியத்தினபடி ஜீவிப்பதன்மூலம் ஒரு பரிசுத்தவானாக நடைபோடலாம். இப்படி யாகப் பெற்ற பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு, பரலோக ராட்சியத்திற்குப் போவோம் என்ற நிச்சயத்தோடு வாழ்வதற்கு அவனுடைய ஜெப வாழ்க்கையும், வேத வசனப் படிப்பும், ஸ்தோத்திரம், துதி, ஆராதனை, சபை கூடுதல் போன் றவை மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத் திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார். **- லூாக்கா 21: 36**

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. **- சங்கீதம் 103: 1-2**

ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது, என் உதடுகள் உம்மைத் துதிக்கும். என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன். **- சங்கீதம் 63: 3-4**

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. **- சங்கீதம் 119: 105**

நீர் என்னை நம்பப்பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும். அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது. **- சங்கீதம் 119: 49-50**

### பரலோக இராட்சியத்துக்குரிய வாழ்க்கை

சாத்தானின் ஆளுகையிலிருந்தும், தலைமைத்துவத்திலுமிருந்தும் நாம் விடுவிக்கப்பட்டுள்ளோம். நாம் இப்பொழுது ஆண்டவராகிய இயேசு-வினுடைய அதிகாரத்தின் கீழும், ஆளுகையின் கீழும் இருக்கிறோம். ஆகையால் ஆண்டவருக்குள் தனது புதிய வாழ்க்கையை ஆரம்பித்து வளரத்துவங்கும் ஒரு விசுவாசி, இயேசுவோடு சரியான உறவு கொண் டிருப்பது மிகவும் அவசியம். இயேசு கிறிஸ்து தனது மீட்பர், இரட்சகர், ஆண்டவர், நியாயந்தீர்க்க வரப்போகின்ற நீயாயாதிபதியும், தமது இராஜ்யத்தில் இராஜாவாக இருக்கிறார் என்பவற்றை உணர்ந்தவனாய், அவருடன் இருக்கும் உறவில் முழுமையாக நிலைத்தருக்க வேண்டும். அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி. **- எபிரேயர் 5: 8-9**

ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக. **- கொலோசேயர் 2: 6-7**

*தொடரும்...*



# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்

11
-
10
-
1949



விண்ணில்

23
-
02
-
2022

# திருமதி கமலாதேவி சந்திரபாலன்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை வதிவிடமாகவும், தற்போது கனடாவில் வதிவிடமாகவும் கொண்ட திருமதி. கமலாதேவி சந்திரபாலன் அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி.

*மாதம் ஒன்றோ போனதம்மானி - உனை*
*காண மனம் வாடுதம்மா!*
*தொலைதூரம் நீ சென்றாலும் - அம்மா*
*தொடர வேண்டும் உன் அன்பு என்றும்!*

*தவிக்குதம்மா எம் இதயம் - நம்*
*தாகம் தீர்க்க வாருவாயோ?*
*தெகிட்டாத உன்முத்தம் - இங்கு*
*தினம்தோறும் கேட்கும் நித்தம்!*

*கண்ணீரோ உருகுதம்மா நம் விழியில்*
*உன்னை இனி மீண்டும் எங்கு*
*காண்பதுவோ நம் வழியில்.*

*அம்மா உன் வருகைக்காக*
*கொந்தளிக்கும் நம் நெஞ்சம்!*
*உன் புகைப்படம் ஒன்றா இங்கு*
*நமக்கிங்கு தஞ்சம் என்றும்!*

*கண்ணீரில் தவிக்கின்றோம் - ஒருமுறை*
*கண்ணெதிரே வராயோ?*
*காலன் உன் கை பிடித்து*
*எங்கு கூட்டி சென்றானோ?*

*உன் ஆத்மா சாந்தி அடைய னி ஆயுள்*
*முழுதும் மண்டியிட்டோம்*
*மீண்டும் ஓர் மறுபிறவி வேண்டி நிற்போம்*
*உன் மடியில்!*

***சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

அன்னாரின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று பல வழிகளிலும் எம்மோடு தொடர்பு கொண்டு தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும், மேலும் பல்வேறு வகையில் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றி.

**தகவல்: குடும்பத்தினர்**









26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்






உதயம் 1355 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 25, 2022

## இலங்கைத் தமிழர்களிடம் பணம் வசூலிப்பதை தமிழக படகு உரிமையாளர்கள் கைவிட வேண்டும் என்கிறார் வேல்முருகன்



தங்களின் வாழ்வாரத்தை காப்பாற்றிக் கொள்ள தமிழகம் வரும் இலங்கைத் தமிழர்களிடம், பணம் வசூலிப்பதை தமிழக படகு உரிமையாளர்கள் கைவிடுவதோடு, அவர்களுக்கு அரணாக நிற்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*



## பொருளாதார நெருக்கடியில் தமிழகத்திற்கு வரும் ஈழச்சொந்தங்களை கைதுசெய்வது கண்டனத்திற்குரியது! — சீமான் கண்டனம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தாளாது, தமிழகத்திற்கு வரும் ஈழச்சொந்தங்களை கைது செய்வது கடும் கண்டனத்திற்குரியது என அறிக்கையொன்றின் மூலம் செந்தமிழன் சீமான் தெரிவித்துள்ளார். நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,


இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் விளைவினால் அத்தியாவசியப்பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்து, அந்நாட்டுக் குடிமக்கள் அன்றாடச்செலவினங்களைக்கூட எதிர்கொள்ள முடியாது, வறுமைக்கும், ஏழ்மைக்கும் உள்ளாகி, தவித்து வருகிற செய்திகள் கவலையளிக்கின்றன. சிங்கள இனவெறிப்பிடித்து, தமிழர்களை அழித்தொழிக்க, உலகெங்கும் கடன்களை வாங்கிக்குவித்து, நாட்டு மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிலும், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியிலும் கவனம்செலுத்தாத கொடுங்கோல் சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறிச்செயல்பாடுகளே இத்தகைய நிலைக்குக் காரணமென்றாலும், இன்றைக்கு தமிழர்களும் சேர்ந்துப் பாதிப்புக்குள்ளாகி நிற்பது பெரும் மனவேதனையைத் தருகிறது. *(தொடர்ச்சி உள்ளே 12ம் பக்கத்தில்)*

## "இனிய நந்தவனம்" வெள்ளி விழா மலர் பிரதிகள் விளம்பரங்கள் தந்துதவிய கனடிய பிரமுகர்களுக்கு வழங்கப்பெற்றன

தமிழ்நாட்டின் திருச்சி மாநகரிலிருந்து வெளிவரும் மாத இதழான “இனிய நந்தவனம்“ கடந்த மாதம் தனது 25வது ஆண்டு வெள்ளி விழா மலரை சிறப்பான ஒரு இதழாக வெளியிட்டது.

இந்த இதழுக்கு எமது வேண்டுகோளை ஏற்று விளம்பரங்களைத் தந்து அத்துடன் அவைக்கான கட்டணங்களை முற்பணமாகவே தந்துதவிய கனடிய வர்த்தகப் பிரமுகர் குலா செல்லத்துரை அவர்கள் மற்றும் சமூக சேவகியும் **FRONTLINE COMMUNITY CENTRE** சேவை நிறுவனத்தின் தலைமை அதிகாரியுமான விஜயா குலா அவர்களும் பாராட்டுக்களுக்குரியவர்கள். அவர்கள் இருவருக்கும் “இனிய நந்தவனம்“ இதழின் கனடிய பிரதிநிதியாகிய “உதயன்“ ஆர். என். லோகேந்திரலிங்கம் நேற்று 24-03-2022 வியாழக்கிழமையன்று “இனிய நந்தவனம்“ சஞ்சிகையின் 25வது ஆண்டு வெள்ளி விழா மலரை நேரடியாக வழங்குவதைக் காணலாம்.

*செய்தியும் படங்களும்: சத்தியன்*





## யாழ்ப்பாணத்தில் "தெய்வீக குருமணி" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற சிவ ஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்



தற்போது தாயகத்தில் ஆன்மீக பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய ஸ்தாபகரும் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் “தெய்வீக குருமணி“ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

இந்த பட்டமளிப்பு வைபவத்தை ”தெய்வீகம்” சர்வதேச ஆன்மிக சஞ்சிகை நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. *(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)*

